Nabiyin Thozhugai Murai
Moulavi Abu Umar Hasan Ali Umari, Nazeeri

Tamil

Copy Right to Author

First Edition

January 2018

40 Pages

Design & Layout: ***A. S. Graphics - 9884143394***

Published by: ***Assalafiyyah Publications***
Adirampattinam, Tanjavur Dist.

Price: 70.00

பொருளடக்கம்

بسم الله الرحمن الرحيم

முன்னுரை

இஸ்லாமிய மார்க்கத்தில் தொழுகை கலிமாவிற்கு அடுத்த அந்தஸ்தில் உள்ளது. இக்கடமையை முஸ்லிம்களில் பலர் அனுதினமும் நிறைவேற்றி வந்தாலும், என்னை எவ்வாறு தொழ கண்டீர்களோ, அவ்வாறே நீங்களும் தொழுங்கள் என்ற நபி ﷺ அவர்களின் கட்டளைக்கு மாற்றமாகவே அதிகமானவர்களின் தொழுகை அமைந்துள்ளது என்பதே நிதர்சன உண்மையாகும்.

தொழுகையின் சட்டங்களை தெரியப்படுத்தி தமிழில் சில நூல்கள் வெளிவந்துள்ளது. (அல்ஹம்து லில்லாஹ்) அந்த நூல்களில் தொழுகையின் ஆரம்பத்திலிருந்து முடிவு வரை உள்ள சட்டங்கள் விவரிக்கப்பட்டிருந்தாலும், தொழுகையின் அடிப்படைகள், நிபந்தனைகள், கடமைகள், சுன்னத்துகள், முறிக்கும் காரியங்கள், வெறுக்கத்தக்க காரியங்கள் போன்ற சட்டங்களின் தகவல்களை பிரித்து தராமல் மொத்தமாக தரப்பட்டுள்ளது. ஆகவே தான் அந்த நூல்களை படிப்பவர்களுக்கு படித்த பிறகும் தொழுகையில் தெளிவின்மை ஏற்படுகின்றது.

எனவே இந்த குறையை போக்கி தொழுகையின் சட்டங்களை முறையாக பிரித்து இந்நூலில் தந்துள்ளோம். தொழுகையின் தக்பீர் முதல் தஸ்லிம் வரையிலான அனைத்து தகவல்களையும் ஆதாரத்துடன் குறிப்பிட்டுள்ளோம். இந்நூலை வாசிப்பவர்கள் தொழுகையின் சட்டங்களை இலகுவான முறையில் அறிந்துக் கொள்வதற்கு இந்நூல் துணை நிற்கும். இன்ஷா அல்லாஹ்!

இந்நூலிலுள்ள தகவல்கள் அனைத்தும் மூன்று முக்கியமான அரபி நூல்களில் இருந்து எடுக்கப்பட்டதாகும்.

1. (صفة صلاة النبي) ஸிஃபத்து ஸலாத்தின் நபி - ஷெய்க் அல்பானி ﷺ
2. (الملخص الفقهي) அல்முலக்கஸுல் ஃபிக்ஹி - ஷெய்க் ஃபவ்ஜான் ஹபிலயுல்லாஹ்
3. (الفقه الميسر في ضوء الكتاب والسنة) அல்ஃபிக்ஹுல் முயஸ்ஸர் - உலமாக்கள் குழு

இறுதியாக இந்நூல் வெளிவருவதற்கு எல்லா விதத்திலும் உறுதுணையாக இருந்த நண்பர்கள் அனைவருக்கும் அல்லாஹ் அருள்புரிவானாக! இந்நூலை சிறந்த முறையில் அச்சுக் கோர்வை செய்து தந்த சகோதரர் அப்துல் காதர் (ஏ. எஸ். கிராஃபிக்ஸ்) அவர்களுக்கு அல்லாஹ் நன்மை அளிப்பானாக!

மேலும் இந்நூலை நல்லெண்ணத்துடன் படிக்கும் அனைவருக்கும் நபிவழியின் அடிப்படையில் தங்களின் தொழுகையை அமைத்து கொள்வதற்கு அல்லாஹ் அருள் புரிவானாக! ஆமின்...

அன்புடன்

அபு உமர் ஹசன் அலீ உமரி
hasanumari@gmail.com

أهمية الصلاة وحكمها

தொழுகை கட்டாய கடமையாகும்

தொழுகையை அரபியில் குறிப்பிடுவதற்கு அஸ்ஸலா என்ற வார்த்தை பயன்படுத்தப்படும். இவ்வார்த்தையின் அகராதி பொருள் துஆ, பிராத்தனை என்பதாகும்.

இஸ்லாமிய வழக்கில் தொழுகை என்பது தக்பீர் முதல் தஸ்லீம் வரை குறிப்பிட்ட சொற்களையும், செயல்களையும் வணக்கமாக கருதி செயல்படுவதற்கு சொல்லப்படும்.

அல்லாஹ் தொழுகையை கட்டாய கடமையாக ஆக்கி உள்ளான்.

﴿وَمَا أُمِرُوا إِلَّا لِيَعْبُدُوا اللهَ مُخْلِصِينَ لَهُ الدِّينَ حُنَفَاءَ وَيُقِيمُوا الصَّلَاةَ وَيُؤْتُوا الزَّكَاةَ وَذَلِكَ دِينُ الْقَيِّمَةِ﴾

கலப்பற்ற முறையில் மார்க்கத்தை பின்பற்றி, ஷிர்க்கில் இருந்து விலகி அல்லாஹ் ஒருவனை மட்டுமே அவர்கள் வணங்க வேண்டும். மேலும் தொழுகையை நிலைநாட்ட வேண்டும், ஜகாத்தை வழங்கவும் வேண்டும் என்பதை தவிர அவர்கள் கட்டளையிடப்படவில்லை. இதுவே நிலையான மார்க்கமாகும். (98:5)

இவ்வசனத்தில் அல்லாஹ் அவனை வணங்க வேண்டும் என்பதை தொடர்ந்து தொழுகையை நிலைநாட்டுங்கள் என்பதை பிரத்யேகமாக கூறுகிறான்.

தொழுகை என்பது வணக்கங்களில் ஒன்றாக இருந்தாலும், அதனை பிரத்யேகமாக கூறுவதிலிருந்து தொழுகையின் முக்கியத்துவத்தை அறியலாம்.

﴿إِنَّ الَّذِينَ آمَنُوا وَعَمِلُوا الصَّالِحَاتِ وَأَقَامُوا الصَّلَاةَ وَآتَوُا الزَّكَاةَ لَهُمْ أَجْرُهُمْ عِنْدَ رَبِّهِمْ وَلَا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُونَ﴾

நிச்சயமாக எவர்கள் ஈமான் கொண்டு, நற்செயல்கள் செய்து, தொழுகையை நிலைநாட்டி, ஜகாத்தும் கொடுத்து வருகிறார்களோ அவர்களுக்கு அவர்களுடைய ரப்பிடத்தில் நற்கூலி இருக்கிறது. மேலும் அவர்களுக்கு அச்சமுமில்லை, அவர்கள் துக்கப்படவும் மாட்டார்கள். (2:277)

இவ்வசனத்தில் அல்லாஹ் நற்செயல்களை பொதுவாக கூறிவிட்டு, தொழுகையை நிலைநாட்டுவதை அடுத்ததாக கூறுவதிலிருந்தும் அதனுடைய முக்கியத்துவத்தை அறியலாம்.

﴿وَأَقِيمُوا الصَّلَاةَ وَآتُوا الزَّكَاةَ وَارْكَعُوا مَعَ الرَّاكِعِينَ﴾

மேலும் நீங்கள் தொழுகையை நிலைநாட்டுங்கள். ஜகாத்தையும் கொடுங்கள். (ருகூஉ செய்து) குனிபவர்களுடன் நீங்களும் (ருகூஉ செய்து) குனியுங்கள். (2:43)

இவ்வசனங்களில் அல்லாஹ் தொழுகையை நிலை நாட்டுங்கள் என்று கட்டளையிடுகிறான். எனவே ஒவ்வொரு முஸ்லிமும் தொழுகையை அவசியமாக நிறைவேற்றியே ஆக வேண்டும்.

عَنِ ابْنِ عُمَرَ رضى الله عنهما قَالَ قَالَ رَسُولُ اللّٰهِ صلى الله

عليــه وســلم بُــنِيَ الإِسْــلاَمُ عَلَى خَمْــسٍ شَــهَادَةِ أَنْ لاَ إِلَهَ إِلاَّ اللَّهُ وَأَنَّ مُحَمَّــدًا رَسُــولُ اللَّهِ ، وَإِقَــامِ الصَّــلاَةِ ، وَإِيتَــاءِ الــزَّكَاةِ ، وَالْحَــجِّ ، وَصَــوْمِ رَمَضَــانَ

அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள், உண்மையாகவே 'வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வையன்றி வேறு யாருமில்லை என்றும் முஹம்மத் அவர்கள் இறைத்தூதர் என்றும் உறுதியாக நம்புதல், தொழுகையை நிலை நிறுத்துதல், ஸகாத்து வழங்குதல், ஹஜ் செய்தல், ரமாலானில் நோன்பு நோற்றல் ஆகிய ஐந்து காரியங்களின் மீது இஸ்லாம் நிறுவப்பட்டுள்ளது'.

(அறிவிப்பாளர்: இப்னு உமர் ؓ, நூல்: புகாரி - 8)

இஸ்லாத்தின் அடிப்படைகளில் கலிமாவிற்கு அடுத்ததாக தொழுகையை நபி ﷺ அவர்கள் குறிப்பிடுவதிலிருந்து தொழுகையின் முக்கியத்துவத்தை அறியலாம்.

عــن ابي هريــرة عــن رَسُــولَ اللَّهِ صــلى الله عليــه وســلم- يَقُــولُ «إِنَّ أَوَّلَ مَــا يُحَاسَــبُ بِــهِ الْعَبْــدُ يَــوْمَ الْقِيَامَــةِ مِــنْ عَمَلِــهِ صَلاَتُــهُ فَــإِنْ صَلُحَــتْ فَقَــدْ أَفْلَــحَ وَأَنْجَــحَ وَإِنْ فَسَــدَتْ فَقَــدْ خَــابَ وَخَــسِرَ

அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள், நிச்சயமாக மறுமை நாளில் அடியானின் அமல்களில் அவனுடைய தொழுகையை பற்றிதான் முதலாவதாக விசாரிக்கப்படும். தொழுகை சரியாக இருந்தால் அவன் வெற்றி பெற்றிடுவான், ஈடேற்றம்

அடைந்திடுவான். தொழுகை வீணாகி விட்டால் அவன் தோல்வியடைந்திடுவான், நஷ்டமடைந்திடுவான்.

(அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா ரழி,

நூல்: திர்மிதி - 415 ஸஹீஹ்)

மறுமை நாளில் தொழுகையை பற்றி தான் அடியார்களிடம் முதலாவதாக விசாரிக்கப்படும் என்பதிலிருந்து தொழுகையின் அவசியத்தை அறியலாம்.

இதுபோன்ற பல குர்ஆன் வசனங்கள், ஹதீஸ்கள் தொழுகை முஸ்லிம்கள் மீது கட்டாய கடமையாக ஆக்கப்பட்டுள்ளது என்பதனை தெரியப்படுத்துகின்றன.

مكانة الصلاة

தொழுகையின் அந்தஸ்து

﴿قُلْ لِعِبَادِيَ الَّذِينَ آمَنُوا يُقِيمُوا الصَّلَاةَ وَيُنْفِقُوا مِمَّا رَزَقْنَاهُمْ سِرًّا وَعَلَانِيَةً مِنْ قَبْلِ أَنْ يَأْتِيَ يَوْمٌ لَا بَيْعٌ فِيهِ وَلَا خِلَالٌ﴾

ஈமான் கொண்ட என் அடியார்களிடம் (நபியே!) "கொடுக்கல் வாங்கலும், நட்பும் இல்லாத (இறுதி) நாள் வருவதற்கு முன்னதாகவே, அவர்கள் தொழுகையை முறையாகக் கடைப்பிடிக்கட்டும், நாம் அவர்களுக்கு அளித்தவற்றிலிருந்து, இரகசியமாகவும் பகிரங்கமாகவும் (தான தருமங்களில்) செலவு செய்யட்டும்" என்று நீர் கூறுவீராக. (14:31)

﴿إِنَّنِي أَنَا اللَّهُ لَا إِلَهَ إِلَّا أَنَا فَاعْبُدْنِي وَأَقِمِ الصَّلَاةَ لِذِكْرِي﴾

நிச்சயமாக நான் தான் அல்லாஹ்! என்னைத் தவிர வணக்கத்திற்குரியன் வேறு யாரும் இல்லை; ஆகவே, என்னையே நீர் வணங்கும், என்னை நினைவுபடுத்தும் பொருட்டு தொழுகையை நிலைநிறுத்துவீராக (20:14)

﴿وَمَا أُمِرُوا إِلَّا لِيَعْبُدُوا اللَّهَ مُخْلِصِينَ لَهُ الدِّينَ حُنَفَاءَ وَيُقِيمُوا الصَّلَاةَ وَيُؤْتُوا الزَّكَاةَ وَذَلِكَ دِينُ الْقَيِّمَةِ﴾

கலப்பற்ற முறையில் மார்க்கத்தை பின்பற்றி, ஷிர்க்கில் இருந்து விலகி அல்லாஹ் ஒருவனை மட்டுமே அவர்கள் வணங்க வேண்டும். மேலும் தொழுகையை நிலைநாட்ட வேண்டும், ஜகாத்தை வழங்கவும் வேண்டும்

என்பதை தவிர அவர்கள் கட்டளையிடப்படவில்லை. இதுவே நிலையான மார்க்கமாகும். (98:5)

அல்லாஹ் ﷻ இவ்வசனங்களில், கலிமாவிற்கும், அவன் மீது ஈமான் கொள்வதற்கும் அடுத்ததாக தொழுகையை பற்றி தான் குறிப்பிடுகிறான். எனவே தொழுகை இஸ்லாத்தில் இரண்டாவது அந்தஸ்தில் உள்ளது.

عَـنِ ابْـنِ عُمَـرَ رضى الله عنهما قَـالَ قَـالَ رَسُـولُ اللهِ صلى الله عليـه وسـلم بُـنِىَ الإِسْـلاَمُ عَلَى خَمْـسٍ شَـهَادَةِ أَنْ لاَ إِلَهَ إِلاَّ اللهُ وَأَنَّ مُحَمَّـدًا رَسُـولُ اللهِ، وَإِقَـامِ الصَّـلاَةِ ، وَإِيتَـاءِ الـزَّكَاةِ ، وَالْحَـجِّ ، وَصَـوْمِ رَمَضَـانَ

அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள், 'வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வையன்றி வேறு யாருமில்லை என்றும் முஹம்மத் அவர்கள் இறைத்தூதர் என்றும் உறுதியாக நம்புதல், தொழுகையை நிலை நிறுத்துதல், ஸகாத்து வழங்குதல், ஹஜ் செய்தல், ரமாலானில் நோன்பு நோற்றல், ஆகிய ஐந்து காரியங்களின் மீது இஸ்லாம் நிறுவப்பட்டுள்ளது'.

(அறிவிப்பாளர்: இப்னு உமர் ؓ, நூல்: புகாரி - 8)

عَـنِ ابْـنِ عَبَّـاسٍ رضى الله عنهمـا أَنَّ النَّـبِىَّ صلى الله عليـه وسـلم بَعَـثَ مُعَـاذًا رضى الله عنـه إِلَى الْيَمَـنِ فَقَـالَ ادْعُهُـمْ إِلَى شَـهَادَةِ أَنْ لاَ إِلَهَ إِلاَّ اللهُ ، وَأَنِّى رَسُـولُ اللهِ، فَـإِنْ هُـمْ أَطَاعُـوا لِذَلِـكَ فَأَعْلِمْهُـمْ أَنَّ اللهَ قَـدِ افْـتَرَضَ عَلَيْهِـمْ خَمْـسَ صَلَـوَاتٍ فِى كُلِّ يَـوْمٍ وَلَيْلَـةٍ ، فَـإِنْ هُـمْ أَطَاعُـوا لِذَلِـكَ فَأَعْلِمْهُـمْ أَنَّ اللهَ افْـتَرَضَ عَلَيْهِـمْ

صَدَقَـةً فِى أَمْوَالِهِـمْ ، تُؤْخَـذُ مِـنْ أَغْنِيَائِهِـمْ وَتُـرَدُّ عَلَى فُقَرَائِهِـمْ

நபிﷺ அவர்கள் முஆத்தை யமனுக்கு (ஆளுநராக) அனுப்பினார்கள். அப்போது அவரிடம், 'வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர யாருமில்லை; நான் அல்லாஹ்வின் தூதர் என்ற உறுதிமொழியின் பால் அவர்களை அழைப்பீராக! இதற்கு அவர்கள் கட்டுப்பட்டால் தினமும் ஐவேளைத் தொழுகையை இறைவன் கடமையாக்கியிருக்கிறான் என்பதை அவர்களுக்கு அறிவிப்பீராக! இதற்கும் அவர்கள் கட்டுப்பட்டால் அவர்களில் செல்வந்தர்களிடம் பெற்று, ஏழைகளுக்கு வழங்குவதாக அவர்களின் செல்வத்தில் அல்லாஹ் ஸகாத்தைக் கடமையாக்கியிருக்கிறான் என்பதை அறிவிப்பீராக!" என்று கூறினார்கள்.

(அறிவிப்பாளர்: இப்னு அப்பாஸ்ؓ, நூல்: புகாரி - 1395)

நபிﷺ அவர்கள் கலிமாவிற்கு பிறகு தொழுகையை பற்றி கூறியதில் இருந்து மார்க்கத்தில் தொழுகை, இரண்டாவது இடத்தில் உள்ளது என்பதினை அறியலாம். இத்தகைய அந்தஸ்தை பெற்ற தொழுகையை முஸ்லிம்கள் முறையாக பேணுவது அவசியமாகும்.

அல்லாஹ் மார்க்கத்தின் அனைத்து கடமைகளையும் இப்பூமியில் தான் கடமையாக்கினான். ஆனால் தொழுகை என்னும் கடமையை நபிﷺ அவர்களை ஏழு வானங்களுக்கு மேல் உயர்த்தி அங்கு கடமையாக்கினான். இதிலிருந்து மற்ற வணக்கங்களை காட்டிலும் தொழுகைக்கு மார்க்கத்தில் முக்கியமான அந்தஸ்து கொடுக்கப்பட்டுள்ளது என்பதை அறியலாம்.

فضل الصلاة

தொழுகையின் சிறப்புகள்

﴿إِنَّ الَّذِينَ آمَنُوا وَعَمِلُوا الصَّالِحَاتِ وَأَقَامُوا الصَّلَاةَ وَآتَوُا الزَّكَاةَ لَهُمْ أَجْرُهُمْ عِنْدَ رَبِّهِمْ وَلَا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُونَ﴾

நிச்சயமாக எவர்கள் ஈமான் கொண்டு, நற்செயல்கள் செய்து, தொழுகையை நிலைநாட்டி, ஜகாத்தும் கொடுத்து வருகிறார்களோ அவர்களுக்கு அவர்களுடை ரப்பிடத்தில் நற்கூலி இருக்கிறது. மேலும் அவர்களுக்கு அச்சமுமில்லை, அவர்கள் துக்கப்படவும் மாட்டார்கள். (2:277)

﴿اُتْلُ مَا أُوحِيَ إِلَيْكَ مِنَ الْكِتَابِ وَأَقِمِ الصَّلَاةَ إِنَّ الصَّلَاةَ تَنْهَى عَنِ الْفَحْشَاءِ وَالْمُنْكَرِ وَلَذِكْرُ اللهِ أَكْبَرُ وَاللهُ يَعْلَمُ مَا تَصْنَعُونَ﴾

(நபியே!) இவ்வேதத்திலிருந்து உமக்கு அறிவிக்கப்பட்டதை நீர் எடுத்தோதுவீராக; இன்னும் தொழுகையை நிலை நிறுத்துவீராக; நிச்சயமாக தொழுகை (அதை நிறைவேற்றுபவரை) மானக்கேடானவற்றையும் தீமையையும் விட்டு விலக்கும். நிச்சயமாக, அல்லாஹ்வை நினைவு கூறுவது (எல்லாவற்றையும் விட) மிகவும் பெரிதாகும். இன்னும் நீங்கள் செய்பவைகளை அல்லாஹ் நன்கறிகிறான். (29:45)

عَنْ أَبِي هُرَيْرَةَ أَنَّهُ سَمِعَ رَسُولَ اللهِ صلى الله عليه وسلم

يَقُـولُ أَرَأَيْتُـمْ لَـوْ أَنَّ نَهَـرًا بِبَـابِ أَحَدِكُـمْ ، يَغْتَسِـلُ فِيـهِ كُلَّ يَـوْمٍ خَمْسًـا ، مَـا تَقُـولُ ذَلِـكَ يُبْـقِى مِـنْ دَرَنِـهِ . قَالُـوا لاَ يُبْـقِى مِـنْ دَرَنِـهِ شَـيْئًا . قَـالَ فَذَلِـكَ مِثْـلُ الصَّلَـوَاتِ الْخَمْـسِ ، يَمْحُـو اللَّهُ بِهَـا الْخَطَايَـا

அல்லாஹ்வின் தூதர்ﷺ அவர்கள் கூற நான் கேட்டேன், “உங்களில் ஒருவரின் வாசலில் ஆறு ஒன்று (ஓடிக் கொண்டு) இருக்கிறது. அதில் அவர் தினமும் ஐந்து முறை குளிக்கிறார். அவரின் மேனியிலுள்ள அழுக்குகளில் எதுவும் எஞ்சியிருக்குமா எனக் கூறுங்கள்” என்று தோழர்களிடம் நபி ﷺ அவர்கள் கேட்டார்கள். 'அவரின் அழுக்குகளில் சிறிதளவும் எஞ்சியிராது' என நபித் தோழர்கள் கூறினர். 'இது ஐவேளைத் தொழுகைகளின் உவமையாகும். இதன் மூலம் அல்லாஹ் பாவங்களை அகற்றுகிறான்' என்று இறைத்தூதர்ﷺ அவர்கள் கூறினார்கள்.

(அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா ؓ, நூல்: புகாரி - 528)

عَـنْ أَبِي هُرَيْـرَةَ أَنَّ رَسُـولَ اللهِ صـلى الله عليـه وسـلم كَانَ يَقُـولُ الصَّلَـوَاتُ الْخَمْـسُ وَالْجُمُعَـةُ إِلَى الْجُمُعَـةِ وَرَمَضَـانُ إِلَى رَمَضَـانَ مُكَفِّـرَاتٌ مَـا بَيْنَهُـنَّ إِذَا اجْتَنَـبَ الْكَبَائِـرَ (مسـلم)

அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள்:

ஐவேளைத் தொழுகைகள், ஒரு ஜுமுஆவிலிருந்து மறு ஜுமுஆ, ஒரு ரமளானிலிருந்து மறு ரமளான் ஆகியன அவற்றுக்கிடையே ஏற்படும் பாவங்களுக்குப் பரிகாரங்களாகும் பெரும் பாவங்களில் ஈடுபடாமல்

இருந்தால்.

(அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா ﷺ, நூல்: முஸ்லிம் - 396)

தொழுகை என்ற வணக்கத்தில் ஈடுபடுபவர்களுக்கு அல்லாஹ்விடத்தில் சிறந்த நற்கூலி இருக்கிறது. மேலும் அவருடைய பாவங்களும் தொழுகையினால் மன்னிக்கப்படுகின்றன. இதிலிருந்து தொழுகையின் சிறப்புகளை அறியலாம். தொழுகை என்ற நன்மையை கொண்டு பாவங்கள் மன்னிக்கப்படுவது என்பது சிறிய வகையான பாவங்களை மட்டுமே குறிக்கும். பெரிய பாவங்களை அது குறிக்காது. ஏனெனில் பெரிய பாவங்களுக்கு மன்னிப்பை பெறுவதற்கு தவ்பா நிபந்தனையாக இருக்கிறது.

عَنْ عَبْدِ اللهِ قَالَ مَنْ سَرَّهُ أَنْ يَلْقَى اللهَ غَدًا مُسْلِمًا فَلْيُحَافِظْ عَلَى هَؤُلاَءِ الصَّلَوَاتِ حَيْثُ يُنَادَى بِهِنَّ فَإِنَّ اللهَ شَرَعَ لِنَبِيِّكُمْ صلى الله عليه وسلم سُنَنَ الْهُدَى وَإِنَّهُنَّ مِنْ سُنَنِ الْهُدَى وَلَوْ أَنَّكُمْ صَلَّيْتُمْ فِى بُيُوتِكُمْ كَمَا يُصَلِّى هَذَا الْمُتَخَلِّفُ فِى بَيْتِهِ لَتَرَكْتُمْ سُنَّةَ نَبِيِّكُمْ وَلَوْ تَرَكْتُمْ سُنَّةَ نَبِيِّكُمْ لَضَلَلْتُمْ وَمَا مِنْ رَجُلٍ يَتَطَهَّرُ فَيُحْسِنُ الطُّهُورَ ثُمَّ يَعْمِدُ إِلَى مَسْجِدٍ مِنْ هَذِهِ الْمَسَاجِدِ إِلاَّ كَتَبَ اللهُ لَهُ بِكُلِّ خَطْوَةٍ يَخْطُوهَا حَسَنَةً وَيَرْفَعُهُ بِهَا دَرَجَةً وَيَحُطُّ عَنْهُ بِهَا سَيِّئَةً وَلَقَدْ رَأَيْتُنَا وَمَا يَتَخَلَّفُ عَنْهَا إِلاَّ مُنَافِقٌ مَعْلُومُ النِّفَاقِ وَلَقَدْ كَانَ الرَّجُلُ يُؤْتَى بِهِ يُهَادَى بَيْنَ الرَّجُلَيْنِ حَتَّى يُقَامَ فِى الصَّفِّ.(مسلم)

அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் ﷺ அவர்கள்

கூறினார்கள்:

யார் நாளை (மறுமை நாளில்) முஸ்லிமாக அல்லாஹ்வைச் சந்திக்க விரும்புகிறாரோ, அவர் தொழுகை அறிவிப்புச் செய்யப்படும் இடங்களில் (பள்ளிவாசல்களில்) இந்தத் தொழுகைகளைப் பேணி(த் தொழுது)வரட்டும். ஏனெனில், அல்லாஹ் ﷻ உங்கள் நபி ﷺ அவர்களுக்கு நேரிய வழிகளைக் காட்டியுள்ளான். (கூட்டுத்) தொழுகைகள் நேரிய வழிகளில் உள்ளவையாகும். கூட்டுத் தொழுகையில் கலந்துக் கொள்ளாமல் தமது வீட்டிலேயே தொழுதுகொள்ளும் இன்ன மனிதரைப் போன்று நீங்களும் உங்கள் வீடுகளிலேயே தொழுது வருவீர்களானால் நீங்கள் உங்கள் நபியின் வழிமுறைகளைக் கைவிட்டவர் ஆவீர்கள். உங்கள் நபியின் வழிமுறையை நீங்கள் கைவிட்டால் நிச்சயம் நீங்கள் வழிதவறிவிடுவீர்கள்.

யார் "அங்கத் தூய்மை" (உளூ) செய்து அதைச் செம்மையாகவும் செய்து பின்னர் இப்பள்ளிவாசல்களில் ஒன்றை நோக்கி வருகிறாரோ அவர் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடிக்கும் அவருக்கு அல்லாஹ் ஒரு நன்மையை எழுதுகிறான்; அவருக்கு ஒரு தகுதியை உயர்த்துகிறான்; அவருடைய பாவங்களில் ஒன்றை மன்னித்துவிடுகிறான். நான் பார்த்தவரை எங்களிடையே நயவஞ்சகம் அறியப்பட்ட நயவஞ்சகரைத் தவிர வேறெவரும் கூட்டுத் தொழுகையில் கலந்துகொள்ளாமல் இருந்ததில்லை. (எங்களில் நோயாளியான) ஒரு மனிதர் இரு மனிதருக்கிடையே தொங்கியவாறு அழைத்துவரப்பட்டு (கூட்டுத்) தொழுகையில்

நிறுத்தப்பட்டதுண்டு. **(நூல்: முஸ்லிம் - 1159)**

தொழுகைக்காக மஸ்ஜிது செல்கின்ற ஒருவர் வைக்கின்ற ஒவ்வொரு அடிக்கும் அல்லாஹ் ஒரு நன்மையை அவருக்கு எழுதுகிறான், அவர் வைக்கும் ஒவ்வொரு அடிக்கும் அவருடைய பாவங்களில் ஒன்றை அல்லாஹ் மன்னிக்கின்றான் என நபிﷺ அவர்கள் கூறியதிலிருந்து தொழுகையின் சிறப்பபை அறியலாம்.

على من تجب الصلاة

தொழுகை யார் மீது கடமை

தொழுகையை நிலைநாட்டுவது முஸ்லிமான, புத்தியுடைய, பருவ வயதை அடைந்த ஒவ்வொரு ஆண், பெண்ணின் மீதும் கட்டாய கடமையாகும்.

1 - முஸ்லிமாக இருத்தல்

முஸ்லிமான ஒவ்வொரு ஆண், பெண் மீதும் தொழுகை கடமையாக்கப்பட்டுள்ளது. எனவே தொழக்கூடியவர் முஸ்லிமாக இருத்தல் மிக அவசியமானதாகும். ஏனெனில் அல்லாஹ் முஸ்லிம் அல்லாதவர்களின் தொழுகையை அங்கீகரிக்க மாட்டான்.

﴿وَلَقَدْ أُوحِيَ إِلَيْكَ وَإِلَى الَّذِينَ مِنْ قَبْلِكَ لَئِنْ أَشْرَكْتَ لَيَحْبَطَنَّ عَمَلُكَ وَلَتَكُونَنَّ مِنَ الْخَاسِرِينَ﴾

அன்றியும், உமக்கும், உமக்கு முன் இருந்தவர்களுக்கும் வஹீ மூலம் நிச்சயமாக அறிவிக்கப்பட்டது என்னவென்றால், "நீவிர் (இறைவனுக்கு) இணை வைத்தால் உம் நன்மைகள் (யாவும்) அழிந்து நஷ்டமடைபவர்களாகி விடுவீர்கள்" (என்பதுவேயாகும்). (அல்குர்ஆன் 39:65)

2 - பருவ வயதை அடைதல்

3 - புத்தியுடையவராக இருத்தல்

عَنْ عَائِشَةَ عَنْ النَّبِيِّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ رُفِعَ الْقَلَمُ

عَـنْ ثَـلَاثٍ عَـنْ النَّائِـمِ حَـتَّى يَسْـتَيْقِظَ وَعَـنْ الصَّغِـيرِ حَـتَّى يَكْـبُرَ وَعَـنْ الْمَجْنُـونِ حَـتَّى يَعْقِـلَ أَوْ يُفِيـقَ

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்: மூன்று நபர்களை விட்டு எழுதுகோல் உயர்த்தப்பட்டு விடுகிறது. தூங்குபவர் எழுகின்ற வரை, சிறுவன் பருவ வயதை அடையும் வரை, புத்தி சுவாதினமில்லாதவன் புத்தியை பெறுகின்ற வரை அல்லது தெளிவை பெறுகின்ற வரை. **(அறிவிப்பாளர்: ஆயிஷா ؓ, நூல்: நஸாயி - 3378 ஸஹீஹ்)**

இந்த ஹதீஸிலிருந்து சிறுவர்கள், புத்தி சுவாதினமற்றவர்கள் மீது தொழுகை கடமையில்லை என்பதை அறியலாம். இஸ்லாத்தின் கடமைகள் அனைத்தும் பருவ வயதை அடைந்த பிறகே ஒருவர் மீது கடமையாகின்றது. தொழுகை என்ற கடமையும் அவ்வாறே பருவ வயதை அடைந்த பிறகே ஒருவர் மீது கடமையாகின்றது. எனினும் தொழுகை என்ற கடமையை பருவ வயதிற்கு முன்பே குழந்தைகளுக்கு பயிற்றுவிக்க இஸ்லாம், அவர்களின் பெற்றோர்களுக்கு கட்டளையிடுகிறது.

عَـنْ عَمْـرِو بْـنِ شُـعَيْبٍ عَـنْ أَبِيـهِ عَـنْ جَـدِّهِ قَـالَ قَـالَ رَسُـولُ اللَّهِ صَـلَّى اللَّهُ عَلَيْـهِ وَسَـلَّمَ مُـرُوا أَبْنَاءَكُـمْ بِالصَّلَاةِ لِسَـبْعِ سِـنِينَ وَاضْرِبُوهُـمْ عَلَيْهَـا لِعَـشْرِ سِـنِينَ وَفَرِّقُـوا بَيْنَهُـمْ فِي الْمَضَاجِـعِ

அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள்:

உங்களின் குழந்தைகள் ஏழு வயதையடைந்து விட்டால் தொழுவதற்கு அவர்களுக்கு கட்டளையிடுங்கள். பத்து

வயதையடைந்தும் தொழாமல் இருந்தால் அவர்களை அடியுங்கள். படுக்கையிலும் அவர்களுக்கு மத்தியில் பிரிவை ஏற்படுத்துங்கள்.

(அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் பின் அமர் ﵁,

நூல்: அஹமத் - ஹசன்)

சிறுவர்கள் மீது தொழுகை கடமையில்லை என்றாலும், அவர்கள் ஏழு வயதை அடையும் போது அவர்களை தொழ ஏவ வேண்டும். பத்து வயது வரை தொழவில்லையென்றால் அவர்களை அடிப்பது பெற்றோர்கள் மீது கடமையாகும். சிறுவர்கள் மீது தொழுகை தொடர்பான இவ்விதியானது அவர்கள் பருவ வயதை அடைவதற்கு முன்பே தொழுகையின் பயிற்சியை பெற்று, பருவ வயதிற்கு பிறகு அதனை பேணி காக்க வேண்டும் என்ற அடிப்படையில் உள்ளதாகும்.

குறிப்பு: மாதவிடாய், பிரசவதீட்டுள்ள பெண்கள் தொழுவது தடுக்கப்பட்டதாகும். அந்நிலையில் அவர்கள் மீது தொழுகை கடமையில்லை.

عَـنْ أَبِي سَـعِيدٍ قَـالَ قَـالَ النَّـبِيُّ صـلى الله عليـه وسـلم « أَلَيْـسَ إِذَا حَاضَـتْ لَـمْ تُصَـلِّ ، وَلَـمْ تَصُـمْ فَذَلِـكَ نُقْصَـانُ دِينِهَـا

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:

“ஒரு பெண்ணுக்கு மாதவிடாய் ஏற்பட்டால் அவள் தொழுவதில்லை; நோன்பு நோற்பதில்லை அல்லவா? அதுதான் மார்க்கத்தில் அவளுக்குள்ள குறைபாடாகும்.”

(அறிவிப்பாளர்: அபூ சயீத் ﵁, நூல்: புகாரி - 1951)

عقوبة تارك الصلاة

தொழுகையை விடுபவருக்கான தண்டனை

இஸ்லாத்தில் தொழுகை என்ற கடமையை விடுவது மிகப் பெரிய பாவமாகும்.

அல்லாஹ் கூறுகிறான்:

﴿فَخَلَفَ مِنْ بَعْدِهِمْ خَلْفٌ أَضَاعُوا الصَّلَاةَ وَاتَّبَعُوا الشَّهَوَاتِ فَسَوْفَ يَلْقَوْنَ غَيًّا ۝ إِلَّا مَنْ تَابَ وَآمَنَ وَعَمِلَ صَالِحًا فَأُولَئِكَ يَدْخُلُونَ الْجَنَّةَ وَلَا يُظْلَمُونَ شَيْئًا﴾

அவர்களுக்கு பின் (கெட்ட)வழித்தோன்றல்கள் உருவாகினர். அவர்கள் தொழுகையைப் பாழ்ப்படுத்தி, மனோஇச்சைகளைப் பின்பற்றினர். எனவே அவர்கள் இழிவையே சந்திப்பார்கள். (எனினும்) யார் பாவமன்னிப்புக் கோரி நம்பிக்கை கொண்டு, நல்லறமும் செய்கிறாரோ அவரைத் தவிர. அவர்களோ சுவர்க்கத்தில் நுழைவார்கள். அவர்கள் சிறிதளவேனும் அநியாயம் செய்யப்பட மாட்டார்கள். (19:59,60)

இவ்வசனத்தில் தொழுகையை பாழாக்குவது என்பதின் பொருள் என்ன என்பதில் அறிஞர்களிடையே கருத்து வேறுபாடுகள் உள்ளது.

1. தொழுகையை பாழாக்குவது என்பது முழுமையாக தொழுகையை விடுவதையே குறிக்கிறது என முஹம்மத் பின் கஅப் அல்குர்லிபி, இப்னு ஜைத் பின் அஸ்லம்,

அஸ்ஸுத்தி போன்ற அறிஞர்கள் கூறுகிறார்கள். இப்னு ஜரீர் அத்தபரிﷺ அவர்கள் இந்த கருத்தையே தேர்ந்தெடுத்துள்ளார்கள்.

2. இப்னு மஸ்வூத்ﷺ அவர்கள், தொழுகையை பாழாக்குவது என்பது தொழுகையை அதனுடைய நேரத்தில் தொழாமல் இருப்பதை குறிக்கிறது என்கிறார்கள். இமாம் உமர் பின் அப்துல் அஜிஸ்ﷺ அவர்களும் இந்த கருத்திலேயே இருந்தார்கள். **(தப்ஸீர் இப்னு கஸீர்)**

இரண்டுவிதமான கருத்தைக் கொள்வதற்கும் இவ்வசனம் இடமளிக்கிறது.

﴿فِي جَنَّاتٍ يَتَسَاءَلُونَ عَنِ الْمُجْرِمِينَ مَا سَلَكَكُمْ فِي سَقَرَ قَالُوا لَمْ نَكُ مِنَ الْمُصَلِّينَ﴾

அவர்கள் சுவனங்களில் (இருப்பர்) அப்போது தங்களுக்குள் விசாரித்து கேட்பார்கள். குற்றவாளிகளைப் பற்றி உங்களை ஸகர் எனும் நரகத்தில் புகுத்தியது எது? அதற்கவர்கள் தொழக்கூடியவர்களில் (உள்ளவர்களாக) நாங்கள் இருக்கவில்லை என்று கூறுவார்கள். (74:40-43)

தொழுகையை விடுபவர்கள் ஸகர் என்னும் நரகத்தில் இருப்பார்கள் என அல்லாஹ் இவ்வசனத்தில் கூறுகிறான். எனவே இக்கடமையில் முஸ்லிம்கள் அலட்சியமாக இல்லாமல் பேணுதலுடன் நடந்து கொள்ள வேண்டும்.

حكم تارك الصلاة

தொழுகையை விடுவது கு:ப்ரா?

عَـنْ أَبِى سُـفْيَانَ قَـالَ سَـمِعْتُ جَابِـرًا يَقُـولُ سَـمِعْتُ النَّـبِىَّ صـلى الله عليـه وسـلم يَقُـولُ إِنَّ بَـيْنَ الرَّجُـلِ وَبَـيْنَ الـشِّرْكِ وَالْكُفْـرِ تَـرْكَ الصَّـلاَةِ (مسـلم)

ஜாபிர் ﷺ அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

நபி ﷺ அவர்கள் கூற நான் கேட்டேன், நிச்சயமாக முஸ்லிமிற்கும், ஷிர்க், கு∴ப்ர் ஆகியவற்றிக்கு மத்தியிலுள்ள வித்தியாசம் தொழுகையை விடுவதே ஆகும் என்றார்கள்.

(அறிவிப்பாளர்: அபூ சு∴ப்யான் ﷺ, நூல்: முஸ்லிம்)

عَـنْ بُرَيْـدَةَ قَـالَ قَـالَ رَسُـولُ اللهِ صَـلَّى الله عَلَيْـهِ وسَـلَّمَ الْعَهْـدُ الَّذِي بَيْنَنَـا وَبَيْنَهُـمُ الصَّـلاَةُ فَمَـنْ تَرَكَهَـا فَقَـدْ كَفَـرَ (ترمـذي)

அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள், எங்களுக்கும், அவர்களுக்கும் மத்தியிலுள்ள ஒப்பந்தம் தொழுகை ஆகும். எவர் அதனை விட்டு விடுகிறாரோ அவர் நிராகரித்து விட்டார்.

(அறிவிப்பாளர்: புரைதா ﷺ, நூல்: திர்மிதி - ஸஹீஹ்)

தொழுகையை வேண்டுமென்றே விடுபவர் கா∴பிரா அல்லது கா∴பிர் இல்லையா? என்பதில் மார்க்க அறிஞர்கள் கருத்து வேறுபாடு கொண்டிருக்கிறன்றனர்.

இமாம் இப்னு அப்தில் பர்ﷺ அவர்கள் கூறுகிறார்கள், தொழுகை என்ற கடமையயே மறுப்பவன் காஃபிர் என்பதில் முஸ்லிம்கள் அனைவரும் ஒருமித்த கருத்தி (இஜ்மாவி)ல் உள்ளனர். தொழுகை என்ற கடமையை ஏற்று, வேண்டுமென்றெ தொழுகையை விடுபவன் காஃபிராகி விடுவானா என்பதிலேயே கருத்து வேறுபாடு கொண்டிருக்கின்றனர். **(அல்இஸ்தித்கார் - 2/149)**

- தொழுகையை என்ற கடமையயே ஒருவர் மறுத்தால் அவர் காஃபிர் ஆவார் என்பதில் அனைத்து அறிஞர்களும் ஒருமித்த கருத்தில் இருக்கிறார்கள்.
- தொழுகை என்ற கடமையை ஏற்று, தொழாமல் இருப்பவர் காஃபிரா? இல்லையா? என்பதிலேயே கருத்து வேறுபாடுகள் உள்ளது.

1 - தொழுகையை விடுபவர் காஃபிராகி விடுவார்:

இப்ராஹீம் அந்நகயிﷺ, இப்னுல் முபாரக்ﷺ, இமாம் அஹமத் பின் ஹம்பல்ﷺ, இஸ்ஹாக் பின் ராஹ்வைﷺ போன்ற அறிஞர்கள் தொழுகையை வேண்டுமென்றே விடுபவர் காஃபிராகி விடுவார் என்று கூறுகிறார்கள்.

قال عمر لا حظ في الإسلام لمن ترك الصلاة.

உமர் ﷺ அவர்கள் தொழுகையை விட்டுவிடுபவருக்கு மார்க்கத்தில் எவ்வித பங்குமில்லை என்றார்கள்.

(நூல்: பைஹகி, ஷர்வு சுன்னா)

அப்துல்லாஹ் பின் மஸ்வூத்ﷺ அவர்கள் தொழுகையை விடுவது குஃப்ராகும் என்றார்கள்.

(நூல்: பைஹகி, ஷர்வு சுன்னா)

قال عبد الله بن شقيق : كان أصحاب محمد صلى الله عليه وسلم لا يرون شيئا من الأعمال تركه كفر غير الصلاة.

அப்துல்லாஹ் பின் சகீக் என்ற தாபியி கூறுகிறார்கள், அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்களின் தோழர்கள் (வெளிப்படையான) அமல்களிலேயே தொழுகையை தவிர மற்ற அமல்களை விடுவதை குஃப்ராக பார்க்கவில்லை. **(திர்மிதி - 2831)**

2 - தொழுகையை விடுபவர் காஃபிராக மாட்டார்:

இமாம் அபு ஹனிஃபா ﷺ அவர்கள் தொழுகையை விடுபவர் காஃபிராக மாட்டார், எனினும் அவரை சிறையில் அடைத்து தொழுவதற்கு பணிக்க வேண்டும் என்கிறார். இமாம் மாலிக் ﷺ, இமாம் ஷாஃபி ﷺ ஆகியோர்கள், தொழுகையை விடுபவர் காஃபிராக மாட்டார், எனினும் அவர் தொழுகையை விட்ட குற்றத்திற்காக கொல்லப்பட வேண்டும் என்கின்றனர். தொழுகையை விட்டவர் காஃபிர் என்பதிற்காக கொல்லப்படாமல், தொழுகையை விட்ட குற்றத்திற்காக கொல்லப்பட வேண்டும் என்கின்றனர்.

இந்த கருத்தில் உள்ளவர்கள், தங்களின் கூற்றிக்கு ஆதாரமாக:

فَيَشْفَعُ النَّبِيُّونَ وَالْمَلاَئِكَةُ وَالْمُؤْمِنُونَ فَيَقُولُ الْجَبَّارُ بَقِيَتْ شَفَاعَتِي . فَيَقْبِضُ قَبْضَةً مِنَ النَّارِ فَيُخْرِجُ أَقْوَامًا قَدِ امْتُحِشُوا ، فَيُلْقَوْنَ فِي نَهَرٍ بِأَفْوَاهِ الْجَنَّةِ يُقَالُ لَهُ مَاءُ الْحَيَاةِ، فَيَنْبُتُونَ فِي

حَافَتَيْـهِ كَمَـا تَنْبُـتُ الْحِبَّـةُ فِي حَمِيـلِ السَّـيْلِ ، قَـدْ رَأَيْتُمُوهَـا إِلَى جَانِـبِ الصَّخْـرَةِ إِلَى جَانِـبِ الشَّـجَرَةِ ، فَمَـا كَانَ إِلَى الشَّـمْسِ مِنْهَـا كَانَ أَخْـضَرَ ، وَمَـا كَانَ مِنْهَــا إِلَى الظِّـلِّ كَانَ أَبْيَـضَ، فَيَخْرُجُــونَ كَأَنَّهُـمُ اللُّؤْلُـؤُ ، فَيُجْعَـلُ فِي رِقَابِهِـمُ الْخَوَاتِيـمُ فَيَدْخُلُـونَ الْجَنَّـةَ فَيَقُـولُ أَهْـلُ الْجَنَّـةِ هَـؤُلاَءِ عُتَقَـاءُ الرَّحْمَـنِ أَدْخَلَهُـمُ الْجَنَّـةَ بِغَـيْرِ عَمَـلٍ عَمِلُـوهُ وَلاَ خَـيْرٍ قَدَّمُـوهُ . فَيُقَــالُ لَهُـمْ لَكُـمْ مَـا رَأَيْتُـمْ وَمِثْلُـهُ مَعَـهُ

இவ்வாறு இறைத்தூதர்கள், வானவர்கள், இறை நம்பிக்கையாளர்கள் ஆகியோர் (தத்தம் தகுதிக்கேற்ப) பரிந்துரை செய்வார்கள். அப்போது சர்வ அதிகாரம் படைத்த (இறை)வன் “(இனி) என் பரிந்துரை (மட்டுமே) எஞ்சியிருக்கிறது” என்று கூறிவிட்டு, நரகத்திலிருந்து ஒரு கைப்பிடி அளவு மக்களை அள்ளியெடுத்து அவர்களை வெளியேற்றுவான். அவர்கள் கரிந்து போயிருப்பார்கள். எனவே, சொர்க்க வாசலிலுள்ள ஒரு நதியில் அவர்கள் போடப்படுவார்கள். அதற்கு 'ஜீவ நீர்' ('மாஉல் ஹயாத்') என்று பெயர். உடனே அவர்கள் சேற்று வெள்ளத்தில் விதைப் பயிர் முளைப்பதைப் போன்று நதியின் இரண்டு மருங்கிலும் முளைத்து (நிறம் மாறி) விடுவார்கள். பாறையில் ஓரத்திலும் மரத்தின் ஓரத்திலும் இந்தப் பயிரை நீங்கள் பார்த்திருப்பீர்கள். அதில் வெயில் பக்கமாக இருப்பது பச்சையாகவும், நிழல் பக்கமாக இருப்பது வெள்ளையாகவும் இருக்கும்.

ஆக, இவர்கள் (அந்த நதியிலிருந்து) வெளியேறும்

போது முத்தைப் போன்று (புதுப் பொலிவுடன்) வெளியேறுவார்கள். அவர்களின் கழுத்தில் (நரகத்திலிரந்து விடுதலை பெற்றவர்கள் என்பதற்கான) முத்திரை பதிக்கப்படும். பிறகு அவர்கள் சொர்க்கத்தினுள் நுழைவார்கள். அப்போது சொர்க்கவாசிகள் (இவர்களைப் பார்த்து), "இவர்கள் பேரருளாளனால் விடுதலை செய்யப்பட்டவர்கள்; இவர்கள் எந்த நற்செயலும் புரியாமல், எந்த நன்மையும் ஏற்கெனவே செய்திராமல் அவனே இவர்களைச் சொர்க்கத்தினுள் பிரவேசிக்கச் செய்தான்" என்று கூறுவர். பிறகு (அவர்களிடம்) "நீங்கள் காண்கிறீர்களே இதுவும் உங்களுக்கு உண்டு; இதைப் போன்று இன்னொரு மடங்கும் உங்களுக்கு உண்டு" என்று (நற்செய்தி) சொல்லப்படும். **(புகாரி - 7439)**

இந்த கருத்தில் வந்துள்ள ஹதீஸ்களை ஆதாரமாக கொண்டு தொழுகையை விட்டவர் காஃபிராக மாட்டார் என கூறுகின்றனர். ஏனெனில் ஹதீஸில் சொர்க்கவாசிகள் நரகத்திலிருந்து வெளியேறி சொர்க்கத்திற்கு நுழைபவர்களை பார்த்து கூறுவார்கள், ***இவர்கள் எந்த நற்செயலும் புரியவில்லை, எந்த நன்மையையும் முன்னரே அனுப்பவுமில்லை என்பார்கள்.***

இதிலிருந்து தொழுகை என்ற அமலை செய்யாதவரும் சொர்க்கத்திற்கு செல்லலாம் என்று, தொழுகையை விட்டவர் காஃபிராக மாட்டார் என்ற நிலையில் உள்ள அறிஞர்கள் கூறுகின்றனர்.

தொழுகையை விடுபவர் தொடர்பான இரண்டு விதமான ஆதாரங்களையும் ஆய்வு செய்தால் தொழுகையை விடுபவர் காஃபிர் ஆகிவிடுவார் என்ற

தீர்ப்பே சரியானது என்பதை அறியலாம்.

அதற்கான காரணங்கள்:

1 - ஹதீஸ்களில் தொழுகையை விடுவது குஃப்ர் என தெளிவாக வந்துள்ளது. எனவே அதனை நேரடியான பொருளில் தான் எடுக்க வேண்டும். எனவே குஃப்ர் என்பது நிராகரிப்பை தான் குறிக்கிறது.

2 - இவர்கள் "எந்த நற்செயலும் புரியவில்லை, எந்த நன்மையையும் முன்னரே அனுப்பவுமில்லை" என்ற ஹதீஸை கொண்டு எந்த அமலும் செய்யாதவர் சொர்க்கம் செல்வார் என்றால்?. லாஇலாஹா இல்லல்லாஹ்வை உள்ளத்தில் உண்மைப்படுத்தாதவர் சொர்க்கம் செல்வார் என்று கூறலாமா?. ஏனெனில் லாஇலாஹா இல்லல்லாஹ்வை உள்ளத்தில் உண்மைப்படுத்துவது கூட உள்ளம் சார்ந்த அமலாகும்.

நிச்சயமாக அவ்வாறு கூறமுடியாது. ஏனெனில் லாஇலாஹா இல்லல்லாஹ்வை உள்ளத்தில் உண்மைப்படுத்தாதவர் காஃபிர் ஆவார். அவர் காஃபிர் என்பதை எவ்வாறு மற்ற ஆதாரங்களுடன் இணைத்து கூறுவோமோ, அவ்வாறே தொழுகையை விடுபவர் காஃபிர் ஆவார் என்று மற்ற ஆதாரங்களை கொண்டு கூறுவது தான் சரியான முடிவாகும்.

3 - நரகிலிருந்து கடைசியில் வெளியேற்றப்படுவர்களின் அடையாளங்களை பற்றி ஹதீஸ்களில் பார்க்கும் போது, அவர்களின் ஸஜ்தாவின் அடையாளங்களை கொண்டே அறியப்பட்டு வெளியேற்றப்படுவார்கள் என உள்ளது. இதிலிருந்து தொழுகை என்ற அமலை செய்யாதவர்கள்

சொர்க்கத்திற்கு செல்லவே முடியாது என்பதை அறியலாம்.

4 - சில நல்லமல்களை செய்திருப்பவரை குறித்து எந்த அமலையும் செய்யாதவர் என்று சொல்லும் வழமை அரேபியர்களின் வழக்கில் உண்டு.

ஸஹீஹ் முஸ்லிமில் வந்துள்ள நூறு கொலைகள் புரிந்த மனிதர் தொடர்பாக வேதனை அளிக்கும் மலக்குகள் கூறினார்கள், இவர் எந்த ஒரு நல்ல அமலையும் செய்யவில்லை. அதற்கு அல்லாஹ்வின் கருணையை சுமந்து வரும் மலக்குகள், இந்த மனிதர் தன்னுடைய உள்ளத்தினால் தவ்பா செய்தவராக அல்லாஹ்வை நோக்கி வந்திருக்கிறார் என்றார்கள்.

உள்ளத்தினால் தவ்பா செய்தவராக அல்லாஹ்வை நோக்கி வருவது கூட ஒரு அமலாகும். அந்த நிலையில் உள்ளவரை மலக்குகள் எந்த அமலும் செய்யாதவர் என்று கூறினர். எனவே சில நல்லமல்களை செய்பவரை குறித்து எந்த நல்லமலும் செய்யாதவர் என்ற கூறப்படுவது வழமையான ஒன்றுதான்.

5 - இமாம் இப்னு குஜைமா ﷺ தனது நூலான கிதாபுத் தவ்ஹீதில் கூறுகிறார்கள், அரபி மொழியில் لم يعمل خيرا قط எந்த அமலையும் செய்யாதவர் என்ற வார்த்தை முழுமை மற்றும் பரிபூரண தன்மையில் குறை ஏற்படுத்துவதற்கும் சொல்லப்படும்.

எனவே இந்த வார்த்தையை வைத்து ஒரு அமலும் செய்யாதவர் என்று பொருள் கொள்ள முடியாது.

6 - அஹ்லுஸ் ஸுன்னாவின் அறிஞர்கள்

ஈமானிற்கான வரைவிலக்கணத்தை பற்றி கூறும் போது ஈமான் என்பது நாவினால் மொழிவது, உள்ளத்தால் உண்மைப்படுத்துவது, உடல் உடறுப்புகளால் செயல்படுத்துவது என்கின்றனர்.

எனவே செயல்களும் (அமல்களும்) ஈமானில் உள்ளது என்பதே அஹ்லுஸ் ஸுன்னாவினரின் கொள்கையாகும்.

எந்த அமலும் செய்யாதவர் சொர்க்கத்திற்கு செல்வார் என்ற ஹதீஸை வைத்து அமல் செய்வதற்கான அவகாசத்தை பெற்றும் அமல் செய்யாதவார் சொர்க்கத்திற்கு செல்வார் என்றால் செயல்கள் ஈமானில் இல்லை என்ற கருத்து வரும்.

எனவே எந்த அமலும் செய்யாதவர் சொர்க்கத்திற்கு செல்வார் என்ற ஹதீஸ்களுக்கான சரியான பொருள், எவர் நல்ல அமல்களை செய்வதற்கான அவகாசத்தையும், சக்தியையும் பெறவில்லையோ அத்தகையவர்களை குறித்து இந்த ஹதீஸ் கூறுகிறது என்று பொருள் எடுப்பதே சரியான வழிமுறையாகும்.

7 - ஷெய்க் உஸைமீன்ﷺ அவர்களிடத்தில் எந்த ஒரு நற்செயலையும் செய்யாதவர் சொர்க்கம் செல்வார் என்ற ஹதீஸையும், தொழுகையை விட்டவர் காஃபிர் என்ற ஹதீஸையும் குறித்து கேட்கப்பட்ட போது, ஷெய்க் அவர்கள் கூறினார்கள், எந்த ஒரு நற்செயலையும் செய்யாதவர் என்ற ஹதீஸ் பொதுவானதாகும். தொழுகையை விடுவது தொடர்பான ஹதீஸ் பிரத்யேகமானதாகும் என்றார்கள்.

எனவே அந்த பொதுவான ஹதீஸை பிரத்யேகமான ஹதீஸுடன் இணைத்துக் கூறுவதே சரியான வழிமுறையாகும் என்றார்கள்.

குறிப்பு: தொழுகையை விடுபவர் காஃபிராகி விடுவார் என்பது முற்றிலுமாக தொழுகையை விடுபவரை குறிக்குமா? அல்லது சில தொழுகையை விட்டவரையும் குறிக்குமா? என்ற கேள்விக்கு ஷெய்க் உஸைமீன்ﷺ அவர்கள் அளித்த பதிலை நாம் இங்கு பதிவு செய்கிறோம்.

ஷெய்க் உஸைமீன்ﷺ அவர்கள் கூறுகிறார்கள், தொழுகையை விடுபவர் காஃபிர் ஆவார் என்பது முற்றிலுமாக தொழுகையை விட்டவரையும், தொழுகையை தொடர்ந்து விடுபவரையுமே குறிக்கும். தொழுகையை தொழுபவராக இருந்து சில நேரங்களில் தொழுகையை விடுபவரை இது குறிக்காது. ஏனெனில் ஹதீஸ்களில் (الصلــوة) அஸ்ஸலாத் என்ற வார்த்தை அலிஃப், லாமுடன் சேர்ந்து வந்துள்ளது. அலிஃப், லாம் என்ற எழுத்து சேராமல் ஸலாத்துன் என்ற வார்த்தை மட்டும் வந்திருந்தால், ஒரு தொழுகையை விடுவதையும் அவ்வார்த்தை குறிப்பிட்டிருக்கும்.

ஆனால் அலிஃப், லாமுடன் சேர்ந்து வந்தததினால் முற்றிலுமாக தொழுகையை விடுவதையும், தொழுகையை தொடர்ந்து விடுவதையுமே அவ்வார்த்தை குறிக்கும். எனவே தொழுகையை சில நேரங்களில் விடுபவர் காஃபிராக மாட்டார். எனினும் தொழுகையை சில நேரங்களில் விட்ட குற்றத்திற்காக அவர் பெரும்

பாவங்கள் புரிந்த ஃபாஸிக் ஆவார்.

தொழுகையை முற்றிலுமாக விட்டவர் காஃபிர் மற்றும் முர்தத் ஆவார். அதனை அவர் சோம்பலினால் விட்டாலும் சரியே! அலட்சியமாக விட்டாலும் சரியே! அவர் காஃபிர் ஆவார். அல்குர்ஆன், சுன்னா, ஸஹாபாக்களின் கூற்றுகளில் இதற்கான ஏராளமான சான்றுகள் உள்ளது. மேலும் இமாம் இஸ்ஹாக் பின் ராஹ்வை ﷺ அவர்கள் தொழுகையை விடுபவர் காஃபிராகி விடுவார் என்பதற்கு இஜ்மா உள்ளதாக பதிவு செய்துள்ளார்கள். **(நூல்: அஷ்ஷர்யுல் முமத்தி - 2/26)**

ஷெய்க் ஸாலிஹ் அல்முனஜ்ஜித் ஹஃபிலஹுல்லாஹ் கூறுகிறார்கள், நாங்கள் ஷெய்க் உஸைமின் ﷺ அவர்களிடத்தில் ஜும்மா மட்டும் தொழுபவரின் நிலை என்ன என்று கேட்டோம். அதற்கு ஷெய்க் அவர்கள், ஜும்மா மட்டும் தொழுபவர் காஃபிராகி விடுவார் என்றே எனக்கு தோன்றுகிறது. ஏனெனில் வாரத்தில் முப்பந்தைந்து தொழுகைகளில் ஒன்றை மட்டும் தொழுபவரை தொழுகையாளியாக பார்க்கப்படாது. தொழுகையை விட்டவராகவே பார்க்கப்படும்.

(இஸ்லாம் சுவால் ஷவாப்)

மார்க்க அறிஞர்களின் ஆய்வை வைத்து பார்க்கும் போது நமக்கு தெரியவருவது,

1. சில தொழுகைகளை தவற விட்டவர் காஃபிராக மாட்டார். பெரும் பாவத்தை செய்தவராக மட்டுமே ஆகுவார்.

2. தொழுகையை அறவே தொழாதவர் காஃபிர் ஆவார்.

3. பெரும்பாலும் தொழாமல் இருந்து சில நேரங்களில் மட்டுமே தொழுபவரும் காஃபிர் ஆவார்.

அல்லாஹ்வே அனைத்தையும் அறிந்தவன்!

مواقيت الصلاة
தொழுகையின் நேரங்கள்

ஒவ்வொரு நாளும் காலையிலும் மாலையிலும் ஐந்து வேளை தொழுகையை குறிப்பிட்ட நேரத்தில் நிறைவேற்றுவதை அல்லாஹ் முஸ்லிம்களின் மீது கடமையாக்கிருக்கிறான்.

﴿فَأَقِيمُوا الصَّلَاةَ إِنَّ الصَّلَاةَ كَانَتْ عَلَى الْمُؤْمِنِينَ كِتَابًا مَوْقُوتًا﴾

தொழுகையை நிலை நாட்டுங்கள். நிச்சயமாக தொழுகை விசுவாசிகளின் மீது நேரம் குறிக்கப்பட்ட கடமையாக இருக்கிறது. (4:103)

அல்லாஹ், நபிﷺ அவர்களின் மீது தொழுகையை கடமையாக்கிய போது, ஜிப்ரில்ؑ அவர்கள் மூலமாக அதனுடைய நேரத்தையும் தெரியப்படுத்தினான்.

عَنْ عَبْدِ اللهِ بْنِ عَمْرٍو أَنَّ رَسُولَ اللهِ صلى الله عليه وسلم قَالَ وَقْتُ الظُّهْرِ إِذَا زَالَتِ الشَّمْسُ وَكَانَ ظِلُّ الرَّجُلِ كَطُولِهِ مَا لَمْ يَحْضُرِ الْعَصْرُ وَوَقْتُ الْعَصْرِ مَا لَمْ تَصْفَرَّ الشَّمْسُ وَوَقْتُ صَلاَةِ الْمَغْرِبِ مَا لَمْ يَغِبِ الشَّفَقُ وَوَقْتُ صَلاَةِ الْعِشَاءِ إِلَى نِصْفِ اللَّيْلِ الأَوْسَطِ وَوَقْتُ صَلاَةِ الصُّبْحِ مِنْ طُلُوعِ الْفَجْرِ مَا لَمْ تَطْلُعِ الشَّمْسُ فَإِذَا طَلَعَتِ الشَّمْسُ فَأَمْسِكْ عَنِ الصَّلاَةِ فَإِنَّهَا تَطْلُعُ بَيْنَ قَرْنَيْ شَيْطَانٍ (مسلم)

அல்லாஹ்வின் தூதர்ﷺ அவர்கள் கூறினார்கள்:

லுஹ்ர் தொழுகையின் நேரம் சூரியன் உச்சி சாய்ந்ததிலிருந்து ஒரு மனிதனின் நிழல் அவனது உயரம் அளவுக்கு(ச் சமமாக) ஆகி அஸ்ர் நேரத்திற்கு முன்புவரை உள்ளது. அஸ்ர் தொழுகையின் நேரம் சூரியன் பொன்னிறமாவதற்கு முன்புவரை உள்ளது. மஃக்ரிப் தொழுகையின் நேரம் செம்மேகம் மறைவதற்கு முன்புவரை உள்ளது. இஷாத் தொழுகையின் நேரம் நள்ளிரவு வரை உள்ளது. சுப்ஹூத் தொழுகையின் நேரம் வைகறை நேரம் ஆரம்பமானதிலிருந்து சூரியன் உதயமாவதற்கு முன்புவரை உள்ளது. சூரியன் உதித்துவிட்டால் தொழுவதை நிறுத்திக் கொள்ளுங்கள். ஏனெனில், ஷைத்தானின் இரு கொம்புகளுக்கிடையேதான் அது உதயமாகிறது.

(அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் பின் அமர்ரலி, நூல்: முஸ்லிம் - 1075)

عـن جَابِـرُ بْـنُ عَبْـدِ اللّٰهِ قَـالَ جَـاءَ جِبْرِيـلُ عَلَيْـهِ السَّـلاَمُ إِلَى النَّبِـىِّ صـلى الله عليـه وسـلم حِـينَ زَالَـتِ الشَّـمْسُ فَقَـالَ قُـمْ يَـا مُحَمَّـدُ فَصَـلِّ الظُّهْـرَ حِـينَ مَالَـتِ الشَّـمْسُ ثُـمَّ مَكَـثَ حَـتَّى إِذَا كَانَ فَىْءُ الرَّجُـلِ مِثْلَـهُ جَـاءَهُ لِلْعَـصْرِ فَقَـالَ قُـمْ يَـا مُحَمَّـدُ فَصَـلِّ الْعَـصْرَ. ثُـمَّ مَكَـثَ حَـتَّى إِذَا غَابَـتِ الشَّـمْسُ جَـاءَهُ فَقَـالَ قُـمْ فَصَـلِّ الْمَغْـرِبَ فَقَـامَ فَصَلاَّهَـا حِـينَ غَابَـتِ الشَّـمْسُ سَـوَاءً ثُـمَّ مَكَـثَ حَتـتَّى إِذَا ذَهَـبَ الشَّـفَقُ جَـاءَهُ فَقَـالَ قُـمْ فَصَـلِّ الْعِشَـاءَ. فَقَـامَ فَصَلاَّهَـا ثُـمَّ جَـاءَهُ حِـينَ سَـطَعَ الْفَجْـرُ فِى الصُّبْـحِ فَقَـالَ

قُـمْ يَـا مُحَمَّـدُ فَصَـلِّ. فَقَـامَ فَصَـلَّى الصُّبْـحَ ثُـمَّ جَـاءَهُ مِـنَ الْغَـدِ حِـينَ كَانَ فَيْءُ الرَّجُـلِ مِثْلَـهُ فَقَـالَ قُـمْ يَـا مُحَمَّـدُ فَصَـلِّ. فَصَـلَّى الظُّهْـرَ ثُـمَّ جَـاءَهُ جِبْرِيـلُ عَلَيْـهِ السَّـلاَمُ حِـينَ كَانَ فَيْءُ الرَّجُـلِ مِثْلَيْـهِ فَقَـالَ قُـمْ يَـا مُحَمَّـدُ فَصَـلِّ. فَصَـلَّى الْعَـصْرَ ثُـمَّ جَـاءَهُ لِلْمَغْـرِبِ حِـينَ غَابَـتِ الشَّـمْسُ وَقْتًـا وَاحِـدًا لَـمْ يَـزُلْ عَنْـهُ فَقَـالَ قُـمْ فَصَـلِّ. فَصَـلَّى الْمَغْـرِبَ ثُـمَّ جَـاءَهُ لِلْعِشَـاءِ حِـينَ ذَهَـبَ ثُلُـثُ اللَّيْـلِ الأَوَّلُ فَقَـالَ قُـمْ فَصَـلِّ. فَصَلـَّى الْعِشَـاءَ ثُـمَّ جَـاءَهُ لِلصُّبْـحِ حِـينَ أَسْـفَرَ جِـدًّا فَقَـالَ قُـمْ فَصَـلِّ. فَصَـلَّى الصُّبْـحَ فَقَـالَ مَـا بَـيْنَ هَذَيْـنِ وَقْـتٌ كُلُّـهُ. (سـنن النسـائي)

ஜிப்ரில்ﷺ அவர்கள் சூரியன் உச்சையடைந்த நேரத்தில் நபிﷺ அவர்களிடம் வந்தார்கள். சூரியன் (மேற்கை நோக்கி) சாய்ந்ததும் முஹம்மதே! லுஹர் தொழுகைக்கு நில்லுங்கள் என்றார்கள். பிறகு ஒருவரின் நிழல் அவருக்கு சமமாக ஆகிவிட்டதும் அஸர் தொழுகைக்காக வந்தார்கள். முஹம்மதே! அஸர் தொழுகைக்காக நில்லுங்கள் என்றார்கள். பிறகு சூரியன் மறைந்ததும் வந்தார்கள். முஹம்மதே! மக்ரிப் தொழுகைக்காக நில்லுங்கள் என்றார்கள். பிறகு இருவரும் சூரியன் மறைந்ததும் மக்ரிப் தொழுதார்கள். பிறகு வானத்திலுள்ள செந்நிறம் மறைந்ததும் ஜிப்ரில்ﷺ அவர்கள் வந்தார்கள். முஹம்மதே இஷா தொழுகைக்காக நில்லுங்கள் என்றார்கள். இருவரும் இஷா தொழுதார்கள். பிறகு அதிகாலை உண்மை விடியல் விடித்ததும், முஹம்மதே! சுப்ஹ் தொழுகைக்காக நில்லுங்கள்

என்றார்கள். நபிﷺ அவர்கள் சுப்ஹ் தொழுதார்கள். பிறகு ஜிப்ரில்ﷺ அவர்கள் மறுநாள் ஒரு மனிதருடைய நிழல் அவருக்கு சமமாக இருக்கின்ற போது வந்தார்கள். முஹம்மதே லுஹர் தொழுகைக்காக நில்லுங்கள் என்றார்கள். நபிﷺ அவர்கள் லுஹர் தொழுதார்கள். பிறகு ஜிப்ரில்ﷺ அவர்கள் ஒரு மனிதருடைய நிழல் இரண்டு மடங்கானதும் வந்து முஹம்மதே! அஸர் தொழுங்கள் என்றார்கள். நபிﷺ அவர்கள் அஸர் தொழுதார்கள். பிறகு சூரியன் மறைந்ததும் ஜிப்ரில் ﷺ அவர்கள் (நேற்று வந்த அதே நேரத்திலேயே) வந்து மக்ரிப் தொழுங்கள் என்றார்கள். நபிﷺ அவர்கள் மக்ரிப் தொழுதார்கள். பிறகு இரவில் மூன்றில் ஒரு பகுதி கடந்ததிற்கு பிறகு ஜிப்ரில்ﷺ அவர்கள் முஹம்மதே! இஷா தொழுகைக்காக நில்லுங்கள் என்றார்கள். நபிﷺ அவர்கள் இஷா தொழுதார்கள். பிறகு அதிகாலை நன்கு வெளுத்த பிறகு சுப்ஹ் தொழுகைக்காக ஜிப்ரில்ﷺ அவர்கள் வந்தார்கள். நபிﷺ அவர்கள் சுப்ஹ் தொழுதார்கள். பிறகு ஜிப்ரில் அவர்கள் இந்த இரண்டிற்குமான மத்தியிலுள்ள நேரங்களே தொழுகைக்கான நேரங்கள் என்றார்கள்.

(அறிவிப்பாளர்: ஜாபிர் ؓ, நூல்: நஸாயி - 531 ஸஹீஹ்)

மேலுள்ள இரண்டு ஹதீஸ்களில் தொழுகைக்கான ஆரம்ப நேரம், முடிவு நேரம் இரண்டை குறித்தும் தெளிவுப்படுத்தப்பட்டுள்ளது.

- **லுஹர் தொழுகையின் நேரம்:** சூரியன் உச்சையடைந்து மேற்கு நோக்கி சாய்ந்ததில் இருந்து ஆரம்பித்து ஒவ்வொரு பொருளின் நிழலும் அதற்கு சமமாக

இருக்கின்ற வரையில் உள்ள நேரமாகும்.

- **அஸர் தொழுகையின் நேரம்:** லுஹர் தொழுகையின் நேரம் முடிந்ததும் அஸர் தொழுகைக்கான நேரம் ஆரம்பம் ஆகிவிடுகிறது. ஒவ்வொரு பொருளின் நிழலும் அதற்கு சமமாக ஆகிவிடுவதற்கு பிறகிலிருந்து அஸர் தொழுகைக்கான நேரம் ஆரம்பம் ஆகிவிடுகிறது.

அஸர் தொழுகையின் முடிவு குறித்து இரண்டு விதமான நேரங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1. **விருப்பமளிக்கப்பட்ட நேரம்:** அஸர் தொழுகைக்கான நேரம் ஆரம்பமாகியதிலிருந்து சூரியன் பொன் நிறமாக ஆகின்ற வரை உள்ளதாகும்.
2. **நிர்பந்த நிலையிலான நேரம்:** சூரியன் பொன் நிறமாக ஆனதிலிருந்து சூரியன் மறைகின்ற வரை உள்ள நேரமாகும்.

مـن أدرك ركعـة مـن العـصر قبـل أن تغـرب الشـمس فقـد أدرك العـصر

எவர் சூரியன் மறைவதற்கு முன்பு அஸர் தொழுகையின் ஒரு ரக்அத்தை பெற்றுக் கொள்வாரோ அவர் அஸர் தொழுகையை பெற்றுக் கொண்டவராவார். **(நூல்: புகாரி - 579)**

- **மக்ரிப் தொழுகைக்கான நேரம்:** சூரியன் மறைந்ததிலிருந்து ஆரம்பமாகி வானிலுள்ள செவ்வை நிறம் மறையும் வரை உள்ள நேரமாகும்.

- **இஷா தொழுகைக்கான நேரம்:** வானிலுள்ள

செவ்வை நிறம் மறைந்ததிலிருந்து ஆரம்பமாகி, பாதி இரவு வரை உள்ள நேரமாகும்.

- **ஃபஜ்ர் தொழுகைக்கான நேரம்:** உண்மையான விடியல் விடிந்ததிலிருந்து சூரியன் உதிப்பதற்கு முன்பு வரை உள்ள நேரமாகும்.

شروط الصلاة

தொழுகையின் நிபந்தனைகள்

தொழுகை என்னும் வணக்கத்திற்கு ஒன்பது நிபந்தனைகள் இருக்கின்றது. அந்நிபந்தனைகள் அனைத்தும் தொழுகைக்கு முன்பே பூர்த்தியாகி இருக்க வேண்டும். மேலும் அவை தொழுகையில் தொடர்ந்து இருக்கவும் வேண்டும். அப்பொழுது தான் அத்தொழுகை ஏற்றுக் கொள்ளப்படும். அந்த ஒன்பது நிபந்தனைகளில் ஏதேனும் ஒரு நிபந்தனை விடுபட்டால் கூட அத்தொழுகை ஏற்கப்படாது. அந்த நிபந்தனைகளை பற்றி இனி பார்ப்போம்.

1 - முஸ்லிமாக இருக்க வேண்டும்

முஸ்லிமாக இல்லாமல் செயல்படுபவரின் செயல்கள் ஏற்கபடாது.

﴿وَمَنْ يَبْتَغِ غَيْرَ الْإِسْلَامِ دِينًا فَلَنْ يُقْبَلَ مِنْهُ وَهُوَ فِي الْآخِرَةِ مِنَ الْخَاسِرِينَ﴾

இன்னும் இஸ்லாம் அல்லாத (வேறு) மார்க்கத்தை எவரேனும் விரும்பினால் (அது) ஒருபோதும் அவரிடமிருந்து ஒப்புக் கொள்ளப்பட மாட்டாது; மேலும் அ(த்தகைய)வர் மறுமை நாளில் நஷ்டமடைந்தோரில் தான் இருப்பார். (3:85)

முஸ்லிமல்லாதவரின் எந்த நல்லமலையும் அல்லாஹ் ஏற்க மாட்டான். எனவே அல்லாஹ்விடத்தில் அமல்கள்

அங்கீகரிக்கப்படுவதற்கு முஸ்லிமாக இருப்பது அவசியமாகும்.

2 - புத்தியுடையவராக இருக்க வேண்டும்

புத்தி சுவாதினமற்றவர்களின் மீது தொழுகை கடமையில்லை.

عَـنْ عَائِشَـةَ عَـنْ النَّـبِيِّ صَـلَّى اللهُ عَلَيْـهِ وَسَـلَّمَ قَـالَ رُفِـعَ الْقَلَـمُ عَـنْ ثَـلَاثٍ عَـنْ النَّائِـمِ حَـتَّى يَسْـتَيْقِظَ وَعَـنْ الصَّغِـيرِ حَـتَّى يَكْـبُرَ وَعَـنْ الْمَجْنُـونِ حَـتَّى يَعْقِـلَ أَوْ يُفِيـقَ

நபிﷺ அவர்கள் கூறினார்கள், மூன்று நபர்களை விட்டு எழுதுகோல் உயர்த்தப்பட்டு விடுகிறது. தூங்குபவர் எழுகிறன்ற வரை, சிறுவன் பருவ வயதை அடையும் வரை, புத்தி சுவாதினமில்லாதவன் புத்தியை பெறுகின்றவரை அல்லது தெளிவை பெறுகின்றவரை.
(அறிவிப்பாளர்: ஆயிஷா ؓ, நூல்: நஸாயி - 3378)

3 - பருவ வயதை அடைந்திருக்க வேண்டும்

இஸ்லாமிய சட்டங்கள் அனைத்தும் பருவ வயதை அடைந்த பிறகே கடமையாகின்றன. எனினும் சிறுவர்களை ஏழு வயதிற்கு மேல் தொழ சொல்லி அவர்களுக்கு கட்டளையிடுவது பெற்றோர்கள் மீது கடமையாகின்றது. இக்கட்டளையானது சிறுவர்கள் ஏழு வயதிலிருந்தே தொழுகைக்கான பயிற்சியை பெற வேண்டும் என்பதற்கு தான்.

عَـنْ عَمْـرِو بْـنِ شُـعَيْبٍ عَـنْ أَبِيـهِ عَـنْ جَـدِّهِ قَـالَ قَـالَ رَسُـولُ اللهِ صَـلَّى اللهُ عَلَيْـهِ وَسَـلَّمَ مُـرُوا أَبْنَاءَكُـمْ بِالصَّلَاةِ لِسَـبْعِ سِـنِينَ

وَاضْرِبُوهُمْ عَلَيْهَا لِعَشْرِ سِنِينَ وَفَرِّقُوا بَيْنَهُمْ فِي الْمَضَاجِعِ

அல்லாஹ்வின் தூதர்ﷺ அவர்கள் கூறினார்கள், உங்களின் குழந்தைகள் ஏழு வயதை அடைந்ததும் தொழ சொல்லி கட்டளையிடுங்கள். பத்து வயதை அடைந்தும் அவர்கள் தொழவில்லையென்றால் அவர்களை அடியுங்கள். மேலும் படுக்கையில் அவர்களுக்கு மத்தியில் பிரிவை உண்டாக்குங்கள்.

(நூல்: அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் பின் அமர் ؓ, நூல்: அஹமத் - 6756)

4 - பெருந்துடக்கு, சிறுதுடக்கு போன்றவற்றிலிருந்து பரிசுத்தமாக இருக்க வேண்டும்.

பெருந்துடக்கான கடமையான குளிப்பு, மாதவிடாய் போன்றவற்றிலிருந்து தூய்மையாக இருக்க வேண்டும்.

சிறுதுடக்கு சிறிய வகையிலான அசுத்தங்களான காற்று பிரிதல், மதி வெளிப்படுதல், அதிகப்படியான இரத்தம் வெளியேறுதல் போன்றவற்றிலிருந்து தூய்மையாக இருக்க வேண்டும்.

عَنْ أَبِي هُرَيْرَةَ عَنِ النَّبِيِّ صلى الله عليه وسلم قَالَ لاَ يَقْبَلُ اللَّهُ صَلاَةَ أَحَدِكُمْ إِذَا أَحْدَثَ حَتَّى يَتَوَضَّأَ

நபிﷺ கூறினார்கள்: சிறுதுடக்கு ஏற்பட்டால் உளூ செய்து கொள்ளாத வரையில் உங்களில் ஒருவரின் தொழுகையை அல்லாஹ் ஏற்க மாட்டான்.

(அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா ரலி, நூல்: புகாரி - 6954)

عَنِ ابْنَ عُمَرَ قَالَ إِنِّى سَمِعْتُ رَسُولَ اللَّهِ صلى الله عليه وسلم يَقُولُ لاَ تُقْبَلُ صَلاَةٌ بِغَيْرِ طُهُورٍ

அல்லாஹ்வின் தூதர்ﷺ அவர்கள் கூற நான் கேட்டேன், தூய்மை இல்லாத எந்த தொழுகையும் ஏற்கப்படாது.
(அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் பின் உமர் ரலி, நூல்: முஸ்லிம்)

5 - உடல், ஆடை மற்றும் தொழுக்கூடிய இடம் சுத்தமானதாக இருக்க வேண்டும்.

﴿وَثِيَابَكَ فَطَهِّرْ﴾

உங்கள் ஆடையை பரிசுத்தப்படுத்தி கொள்ளுங்கள். (74:4)

தொழுகையில் ஈடுபடுபவர் தன்னுடைய ஆடையையும், உடையையும் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும்.

عَنْ أَسْمَاءَ قَالَتْ جَاءَتِ امْرَأَةٌ النَّبِيَّ صلى الله عليه وسلم فَقَالَتْ أَرَأَيْتَ إِحْدَانَا تَحِيضُ فِي الثَّوْبِ كَيْفَ تَصْنَعُ قَالَ تَحُتُّهُ ثُمَّ تَقْرُصُهُ بِالْمَاءِ ، وَتَنْضَحُهُ وَتُصَلِّي فِيهِ

ஒரு பெண் நபிﷺ அவர்களிடம் வந்து, எங்களில் ஒருத்தியின் துணியில் மாதவிடாய் இரத்தம் பட்டுவிட்டால் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டார்கள். நபிﷺ அவர்கள் அந்த இடத்தை சுரண்டி விடுங்கள். பின்னர் அதைத் தண்ணீரால் தேய்த்து கழுவி உதறி விட்டு அந்த துணியுடன் நீங்கள் தொழலாம் என கூறினார்கள்.
(அறிவிப்பாளர்: அஸ்மா ரலி, நூல்: புகாரி - 227)

சிறுநீர் போன்ற அசுத்தங்கள் உடலிலும், தொழும் இடத்திலும் படாமல் இருக்க வேண்டும்;.

دَعُوهُ وَهَرِيقُوا عَلَى بَوْلِهِ سَجْلاً مِنْ مَاءٍ

நபிﷺ அவர்கள் அவரை விட்டுவிடுங்கள் ஒரு வாளி தண்ணீரை அதன் மீது ஊற்றுங்கள் என்றார்கள். **(புகாரி - 220)**

தொழுபவர் தன்னுடைய உடலிலோ, உடையிலோ, தொழும் இடத்திலோ அசுத்தம் இருப்பதை அறிந்தும் தொடர்ந்து தொழுதால் அவரின் தொழுகை ஏற்கப்படாது. தொழுபவர் அசுத்தம் இருப்பதை அறியாதவராக இருந்து தொழுதால், அவரின் தொழுகை ஏற்கப்படும். நபிﷺ அவர்கள் ஒரு முறை தொழும் போது அவர்களின் காலணியில் அசுத்தம் இருப்பதை ஜிப்ரில்ﷺ அவர்கள் தெரியப்படுத்திய உடன் நபிﷺ அவர்கள் அக்காலணியை தொழுகையின் நிலையிலேயே கழட்டி எறிந்தார்கள். தொழுகையை முறிக்காமல் தொடர்ந்து தொழுதார்கள்.

6 - உடல் பாகங்களை மறைத்தல்

தொழுகையில் மறைக்க வேண்டிய பகுதியை மறைக்காமல் ஒருவர் தொழுதால் அவரின் தொழுகை ஏற்கப்படாது. எனவே மறைக்கப்பட வேண்டிய பகுதிகளை அவசியமாக மறைத்தே ஆக வேண்டும்.

ஆண்கள்: ஆடை விசாலமாக இருந்தால் தங்களது தொப்புள் பகுதியிலிருந்து முட்டுவரையும், இரு தோள் புஜங்களையும் மறைப்பதும் கட்டாயமாகும். ஆடை பற்றாக்குறையாக இருந்தால் தொப்புள் பகுதியிலிருந்து முட்டுவரை மறைப்பது கட்டாயமாகும்.

فَإِنْ كَانَ وَاسِعًا فَالْتَحِفْ بِهِ ، وَإِنْ كَانَ ضَيِّقًا فَاتَّزِرْ بِهِ

நபிﷺ அவர்கள் கூறினார்கள், ஆடை விசாலமாக இருந்தால் அதன் ஓர் ஓரத்தை வலது தோளிலும், மற்றொரு ஓரத்தை இடது தோளிலும் சுற்றிக் கொள்ளுங்கள். ஆடை சிறியதாக இருந்தால் அதை இடுப்பில் வேட்டியை போன்று அணிந்து கொள்ளுங்கள்.

(நூல்: புகாரி - 361)

عَنْ أَبِى هُرَيْرَةَ قَالَ قَالَ النَّبِىُّ صلى الله عليه وسلم لاَ يُصَلِّى أَحَدُكُمْ فِى الثَّوْبِ الْوَاحِدِ ، لَيْسَ عَلَى عَاتِقَيْهِ شَىْءٌ

உங்களில் ஒருவர் தன் இரு தோள்புஜங்களின் மீது எதுவும் இல்லாதிருக்க ஒரு ஆடையுடன் தொழ வேண்டாம்.

(அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா ؓ, நூல்: புகாரி - 359)

ஆடை விசாலமாக இருக்கின்ற நிலையில் தொப்புள் பகுதியிலிருந்து முட்டுகால் வரை மறைப்பதுடன் அவசியமாக தோள்புஜத்தையும் மறைக்க வேண்டும்.

பெண்கள்: தங்கள் உடலின் முகம், இருகைகளின் மணிக்கட்டுகள் தவிர மற்ற அனைத்து பாகங்களையும் மறைக்க வேண்டும். அந்நிய ஆண்கள் பார்க்கின்ற நிலை ஏற்பட்டால் முகத்தையும் மறைக்க வேண்டும்.

عَنْ عَائِشَةَ عَنِ النَّبِىِّ صلى الله عليه وسلم أَنَّهُ قَالَ لاَ يَقْبَلُ اللَّهُ صَلاَةَ حَائِضٍ إِلاَّ بِخِمَارٍ

நபிﷺ அவர்கள் கூறினார்கள், தலையை மறைக்கும் முக்காடு அணியாமல் தொழும் மாதவிடாய் (பருவ வயதை அடைந்த) பெண்ணின் தொழுகையை அல்லாஹ்

ஏற்கமாட்டான்.

(அறிவிப்பாளர்: ஆயிஷா ரலி, நூல்: அபுதாவூத் - 641, திர்மிதி - 378)

இமாம் திர்மிதி ரஹ் அவர்கள் கூறுகிறார்கள், பெண்கள் தொழும்போது அவர்களின் முடிகளில் இருந்து ஏதேனும் வெளிப்பட்டால் அவளின் தொழுகை ஏற்கப்படாது என்று கல்விமான்கள் கூறுகின்றார்கள். இமாம் திர்மிதி ரஹ் அவர்கள் இமாம் ஷாஃபி ரஹ் அவர்களின் கூற்றையும் பதிவு செய்துள்ளார்கள். இமாம் ஷாஃபி ரஹ் அவர்கள் கூறுகிறார்கள், பெண்களின் உடலில் மறைக்க வேண்டிய பகுதிகளில் ஏதேனும் ஒன்று வெளிப்பட்ட நிலையில் தொழுவது தடுக்கப்பட்டதாகும்.

(நூல்: ஜாமியுத் திர்மிதி - 378)

عَنْ عَبْدِ اللهِ عَنِ النَّبِيِّ صلى الله عليه وسلم قَالَ الْمَرْأَةُ عَوْرَةٌ

நபி ஸல் அவர்கள் கூறினார்கள் பெண் (அவள் முழு உடலும்) மறைக்கப்பட வேண்டியதாகும்.

(அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் பின் மஸ்வூத் ரலி, நூல்: திர்மிதி - 1206 ஸஹீஹ்)

عَـنْ أُمِّ سَـلَمَةَ ، أَنَّهَـا سَـأَلَتِ النَّـبِيَّ صـلى الله عليـه وسـلم : أَتُصَـلِّي الْمَـرْأَةُ فِي دِرْعٍ وَخِمَـارٍ لَيْـسَ عَلَيْهَـا إِزَارٌ ؟ قَـالَ : إِذَا كَانَ الدِّرْعُ سَـابِغًا يُغَطِّـي ظُهُـورَ قَدَمَيْهَـا.

நான் நபி ஸல் அவர்களிடம், பெண் கீழாடையின்றி மேலங்கி மற்றும் முக்காடுடன் தொழுவது கூடுமா என்று நான் கேட்டேன். நபி ஸல் அவர்கள் மேலங்கி (விசாலமாக இருந்து) கால்களின் மேற்பகுதியை மறைத்தவாறு

இருந்தால் தொழலாம் என்றார்கள்.

(அறிவிப்பாளர்: உம்மு ஸல்மாﷺ, நூல்: அபுதாவூத் - 640)

இமாம் அபுதாவூத்ﷺ அவர்கள் இந்த ஹதீஸை பதிவு செய்துவிட்டு கூறுகிறார்கள்,

قَالَ أَبُو دَاوُدَ : رَوَى هَذَا الْحَدِيثَ مَالِكُ بْنُ أَنَسٍ وَبَكْرُ بْنُ مُضَرَ ، وَحَفْصُ بْنُ غِيَاثٍ وَإِسْمَاعِيلُ بْنُ جَعْفَرٍ ، وَابْنُ أَبِي ذِئْبٍ ، وَابْنُ إِسْحَاقَ ، عَنْ مُحَمَّدِ بْنِ زَيْدٍ ، عَنْ أُمِّهِ ، عَنْ أُمِّ سَلَمَةَ لَمْ يَذْكُرْ أَحَدٌ مِنْهُمُ النَّبِيَّ صلى الله عليه وسلم قَصَرُوا بِهِ عَلَى أُمِّ سَلَمَةَ رَضِيَ اللَّهُ عَنْهَا

மாலிக் பின் அனஸ், பகர் பின் முஜர், ஹஃப்ஸ் பின் கியாஸ், இஸ்மாயில் பின் ஜஃபர், இப்னு அபி திஹப், இப்னு இஸ்ஹாக் ஆகிய அனைவரும் இந்த ஹதீஸை முஹம்மத் பின் ஸியாத்திடமிருந்து அறிவிக்கின்றார்கள். முஹம்மத் பின் ஸியாத் தனது தாயிடமிருந்து உம்மு ஸல்மாﷺ அவர்களிடமிருந்து மவ்கூஃபாக (ஸஹாபியுடன் அறிவிப்பாளர் தொடர் முடிவது) அறிவித்துள்ளார்கள். இவர்களில் எவரும் மர்ஃபுவாக (நபிﷺ அவர்கள் வரை அறிவிப்பாளர் தொடர் செல்வது) அறிவிக்கவில்லை. எனவே நபிﷺ அவர்களை தொட்டு வந்துள்ள மர்ஃபு அறிவிப்பு பலவீனமானதாகும். மவ்கூஃப் அறிவிப்பே சரியானதாகும் என்கிறார்கள். **(நூல்: அபுதாவூத் - 640)**

இந்த கருத்தையே இமாம் அப்துல் ஹக்ﷺ மற்றும் இமாம் இப்னு ஹஜர் அஸ்கலானிﷺ அவர்கள் மேற்கோள் காட்டுகின்றனர்.

இந்த ஹதீஸில் உள்ள கருத்து நபிﷺ அவர்களின்

கூற்றல்ல. உம்மு ஸல்மா(ரழி) அவர்களின் கூற்றாக இருந்தாலும். நபி(ஸல்) அவர்களின் மனைவியான உம்மு ஸல்மா(ரழி) அவர்கள் இதனை சுயமாக கூறாமல், நபி(ஸல்) அவர்களின் கருத்தை அடிப்படையாக கொண்டு தான் கூறியிருக்க முடியும் என்பதை நாம் அறிய முடிகிறது.

பெண்கள் தங்களின் கால்களின் மேல் பகுதியையும் மறைத்து தொழுவதே சரியான நிலையாகும். ஸஜ்தாவிற்கு செல்லும் போது கால்களின் உட்பகுதி தெரிவதில் குற்றமேதுமில்லை.

7 - தொழுகைக்காக நிர்ணயிக்கப்பட்ட நேரத்தை அடைய வேண்டும்

﴿إِنَّ الصَّلَاةَ كَانَتْ عَلَى الْمُؤْمِنِينَ كِتَابًا مَوْقُوتًا﴾

நிச்சயமாக தொழுகை விசுவாசிகளின் மீது நேரம் குறிக்கப்பட்ட கடமையாக இருக்கிறது. (4:103)

எனவே தொழுகையின் நேரம் வருவதற்கு முன்பே தொழுவதும், தொழுகையின் நேரம் கடந்த பிறகு தொழுவதும் தடுக்கப்பட்டிருக்கிறது. தொழுகைக்கான நேரங்களை பற்றி முன்னரே தெளிவுப் படுத்தப்பட்டுள்ளது.

எனினும் பயணம், தூக்கம் போன்ற காரணங்களினால் ஒருவருக்கு தொழுகைக்காக நிர்ணயிக்கப்பட்ட நேரங்களில் விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

8 - கிப்லாவை முன்னோக்குதல்

﴿فَوَلِّ وَجْهَكَ شَطْرَ الْمَسْجِدِ الْحَرَامِ﴾

நபியே தொழுகையை நிறைவேற்றும் போது நீர்

உம்முடைய முகத்தை மஸ்ஜிதுல் ஹராமின் பக்கம் திருப்புவீராக! (2:144)

கஅபாவின் அருகில் நின்று தொழுபவர் முழுமையாக கஅபாவை நோக்கி தொழ வேண்டும். எவர் கஅபாவை விட்டு தூரமாக இருப்பாரோ அவர், கஅபாவின் திசையை நோக்கி தொழுது கொள்வதே போதுமானதாகும்.

عَـنْ أَبِي هُرَيْـرَةَ ، قَـالَ : قَـالَ رَسُـولُ اللهِ صَـلَّى الله عَلَيْـهِ وسَـلَّمَ : مَـا بَـيْنَ الْمَـشْرِقِ وَالْمَغْـرِبِ قِبْلَـةٌ.

அல்லாஹ்வின் தூதர்ﷺ அவர்கள் கூறினார்கள், கிழக்கிற்கும் மேற்கிற்கும் மத்தியில் கிப்லா ஆகும்.
(அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா, நூல்: திர்மதி)

நபிﷺ அவர்களின் இந்த கூற்று மதினாவாசிகளுக்கு கூறியதாகும். இதிலிருந்து கஅபாவை விட்டு தூரமாக இருப்பவர்கள் கஅபா இருக்கும் திசையை நோக்கி தொழுவதே போதுமானதாகும்.

தொழுகின்றவர் அவசியமாக கிப்லாவை முன்னோக்கியே தொழ வேண்டும். கிப்லாவை அறியாத நிலையில் அறிந்தவர்களிடம் கேட்டு தொழ வேண்டும். கிப்லாவை நோக்காமல் வேறு திசையை நோக்கி தொழுபவரின் தொழுகை ஏற்கப்படாது. மீண்டும் அவர் தொழ வேண்டும்.

பயணத்தில் இருப்பவர் கிப்லாவை அறிவதற்கு தன்னால் இயன்ற வரை முயற்சி செய்து கிப்லாவை நோக்கி தொழ வேண்டும். தொழுததற்கு பிறகு தவறான திசையை நோக்கி தொழுதது நிருபணமாலும்,

அவரின் தொழுகை ஏற்றுக் கொள்ளப்படும். மீண்டும் அத்தொழுகையை தொழ வேண்டிய அவசியமில்லை.

கிப்லாவை அறிவதற்கு முழு முயற்சியை மேற்கொள்ள வேண்டும்.

கடும் இருள், பயணம் போன்ற காரணங்களினால் கிப்லாவை அறிய முடியாத நிலையில் தொழுதாலும் அத்தொழுகை ஏற்கப்படும். மீண்டும் தொழ வேண்டிய அவசியமில்லை.

வாகனத்தின் மீது நஃபிலான தொழுகையை தொழ விரும்புபவர்கள் தங்களின் தொழுகையின் ஆரம்பத்தில் கிப்லாவை முன்னோக்கி தொழ வேண்டும். பிறகு வாகனம் எத்திசையில் சென்றாலும் அவர் தன்னுடைய தொழுகையை தொடரலாம்.

9 - நிய்யத்

إِنَّمَا الأَعْمَالُ بِالنِّيَّاتِ

நபிﷺ அவர்கள் கூறினார்கள், செயல்கள் அனைத்தும் எண்ணங்களின் அடிப்படையில் இருக்கின்றன.

(நூல்: புகாரி)

ஒருவரின் தொழுகை ஏற்கப்படுவதற்கு நிய்யத் அவசியமாகும். பர்ளு தொழுகை, நஃபில் தொழுகையில் ஈடுபடுபவர் அந்தந்த தொழுகைக்கான நிய்யத்தை வைத்துக் கொள்ள வேண்டும். தொழுகையின் நிபந்தனைகளில் ஒன்றாக நிய்யத் இருப்பதினால், நிய்யத் இல்லாத தொழுகை ஏற்கப்படாது.

ஒரு காரியத்தை குறித்து மனதில் உறுதியாக

எண்ணுவதற்கு பெயரே நிய்யத் ஆகும். சிலர் நிய்யத்தை நாவினால் மொழிந்து நிய்யத் செய்வதாக கூறுகின்றார்கள். நாவினால் மொழிவது ஒரு போதும் நிய்யத் ஆகாது. மாறாக நாவினால் மொழிவது கூற்றாகும். நபி ﷺ அவர்களோ, ஸஹாபாக்களோ நிய்யத்தை நாவினால் மொழிந்ததில்லை. ஆகவேதான் நிய்யத்தை நாவினால் மொழிவதை மார்க்கம் பித்அத் என்கிறது.

أركان الصلاة

தொழுகையின் அடிப்படைகள்

அல்குர்ஆன் மற்றும் சுன்னாவில் தொழுகைக்கான அடிப்படைகளை பற்றி ஆய்வு செய்யும் போது, அதற்கு பதினான்கு அடிப்படைகள் இருப்பதை அறிய முடிகிறது. அந்த அனைத்து அடிப்படைகளும் சரியாக இருந்தால் மட்டுமே அத்தொழுகை ஏற்கப்படும். அந்த அடிப்படைகளில் ஏதேனும் ஒன்று விடுபட்டாலும், அத்தொழுகை ஏற்கப்படாது.

அடிப்படை, நிபந்தனைக்கு மத்தியிலுள்ள வித்தியாசம்

அடிப்படை: தொழுகையின் அனைத்து அடிப்படைகளும் தொழுகையின் பகுதியாக உள்ளது. அவை அனைத்தும் தொழுகை என்ற வணக்கத்திற்குள் அடங்கியிருக்கும். அந்த அடிப்படைகளை தொழுகையில் இருந்த பிரிக்கவே முடியாது. உதாரணத்திற்கு ருகூஉ செய்வது, ஸஜ்தா செய்வது.

நிபந்தனை: தொழுகையின் நிபந்தனைகளில் எந்த ஒன்றும் தொழுகையின் பகுதியாக ஆகாது. தொழுகை என்ற வணக்கம் ஆரம்பிப்பதற்கு முன்பே நிபந்தனைகள் அனைத்தும் பூர்த்தியாக்கி விடும். மேலும் அனைத்து நிபந்தனைகளும் தொழுகையுடன் இணையாமல் தொடர்ந்து தொழுகையுடன் பயணிக்கும். உதாரணத்திற்கு உளூ செய்வது, நிய்யத் வைப்பது.

தொழுகையின் இந்த பதினான்கு அடிப்படைகளையும் ஒருவர் வேண்டுமென்றோ, மறந்தோ அல்லது அறியாமலோ விட்டாலும் சரியே! அத்தொழுகை ஏற்கப்படாது. அந்த அடிப்படைகளை குறித்து இனி விரிவாக பார்ப்போம்!

1 - **சக்தி பெற்றவர் நின்று தொழ வேண்டும்.**

﴿وَقُومُوا لِلَّهِ قَانِتِينَ﴾

தொழுகையில் அல்லாஹ்வுக்கு பணிந்தவர்களாக நில்லுங்கள். (2:238)

இவ்வசனத்தில் அல்லாஹ் தொழுகைக்காக நிற்க வேண்டும் என கட்டளையிடுகிறான். எனவே நின்று தொழுவதற்கான சக்தியை பெற்றவர் நின்றுதான் தொழ வேண்டும்.

فَقَالَ صَلِّ قَائِمًا ، فَإِنْ لَمْ تَسْتَطِعْ فَقَاعِدًا ، فَإِنْ لَمْ تَسْتَطِعْ فَعَلَى جَنْبٍ

நபிﷺ அவர்கள்,"நீ நின்று தொழ இயலாவிட்டால் உட்கார்ந்து தொழு. அதற்கும் இயலாவிட்டால் படுத்துத் தொழு" என்று கூறினார்கள்.
(அறிவிப்பாளர்: இம்ரான் பின் ஹீசைன்ؓ, நூல்: புகாரி - 1117)

நபிﷺ அவர்கள் இந்த ஹதீஸில் நின்று தொழ முடியாத நிலையில் ஒருவர் இருந்தால் அவர் உட்கார்ந்து தொழலாம் என்று கூறுகின்றார்கள். எனவே நின்று தொழுவதற்கான சக்தியை பெற்றவர் நின்று தான் தொழ வேண்டும். நின்று தொழுவதற்கான சக்தியை பெற்றிருந்தும் ஒருவர் உட்கார்ந்து தொழுதால் அவரின்

தொழுகை ஏற்கப்படாது.

கடமையான தொழுகையை நின்று தொழுவதற்கான சக்தியை பெறாதவர்கள் உட்கார்ந்து தொழுவதற்கு மார்க்கம் அனுமதி அளித்துள்ளது. அவ்வாறு கடமையான தொழுகையை நின்று தொழ முடியாத வயோதிகர்கள், பலவீனமானவர்கள் உட்கார்ந்து தொழுதாலும், அவர்கள் நின்று தொழுததற்கான நன்மையை பெற்றுக் கொள்ளுவார்கள்.

عن أَبَي مُوسَى مِرَارًا يَقُولُ قَالَ رَسُولُ اللَّهِ صلى الله عليه وسلم إِذَا مَرِضَ الْعَبْدُ أَوْ سَافَرَ، كُتِبَ لَهُ مِثْلُ مَا كَانَ يَعْمَلُ مُقِيمًا صَحِيحًا

அல்லாஹ்வி தூதர்ﷺ அவர்கள் கூறினார்கள், அடியான் நோய்வாய்பட்டாலோ அல்லது பயணித்தாலோ அவன் ஊரில் தங்கிய, நலம்பெற்ற நிலையில் செயல்பட்டதைப் போல் நன்மை எழுதப்படும்

(அறிவிப்பாளர்: அபு மூஸா அஷ்அரி رضي الله عنه, நூல்: புகாரி - 2996)

கடமையான தொழுகைகளை தவிர்த்து ஒருவர், நஃபிலான தொழுகைகளை விருப்பபட்டால் உட்கார்ந்தும் தொழலாம். அவ்வாறு தொழுபவருக்கு பாதி நன்மை தான் கிடைக்கும்.

عَنْ عِمْرَانَ قَالَ سَأَلْتُ النَّبِيَّ صلى الله عليه وسلم عَنْ صَلاَةِ الرَّجُلِ وَهْوَ قَاعِدٌ فَقَالَ « مَنْ صَلَّى قَائِمًا فَهْوَ أَفْضَلُ، وَمَنْ صَلَّى قَاعِدًا فَلَهُ نِصْفُ أَجْرِ الْقَائِمِ

நான் நபிﷺ அவர்களிடம் உட்கார்ந்து தொழுவது

பற்றி கேட்டேன். அதற்கு நபிﷺ அவர்கள் எவர் நின்று தொழுகிறாரோ அது சிறந்ததாகும். எவர் உட்கார்ந்து தொழுகிறாரோ அவருக்கு நின்று தொழுபவரின் நன்மையில் பாதியே கிடைக்கும்.

(அறிவிப்பாளர்: இம்ரான் பின் ஹுசைன்ؓ, நூல்:புகாரி - 1116)

عَنِ ابْنِ شِهَابٍ قَالَ قَالَ سَالِمٌ كَانَ عَبْدُ اللهِ يُصَلِّي عَلَى دَابَّتِهِ مِنَ اللَّيْلِ وَهْوَ مُسَافِرٌ ، مَا يُبَالِي حَيْثُ مَا كَانَ وَجْهُهُ . قَالَ ابْنُ عُمَرَ وَكَانَ رَسُولُ اللهِ صلى الله عليه وسلم يُسَبِّحُ عَلَى الرَّاحِلَةِ قِبَلَ أَيِّ وَجْهٍ تَوَجَّهَ ، وَيُوتِرُ عَلَيْهَا ، غَيْرَ أَنَّهُ لاَ يُصَلِّي عَلَيْهَا الْمَكْتُوبَةَ

ஸாலிம் அறிவித்தார்.

இப்னு உமர்ؓ இரவில் பயணம் செய்யும்போது தம் வாகனத்தின் மீதமர்ந்து தொழுவார்கள். அவர்களின் முகம் எத்திசையில் இருக்கிறதென்பதைப் பற்றிக் கவலைப் பட மாட்டார்கள். மேலும் “நபிﷺ அவர்கள் எத்திசையில் சென்றாலும் வாகனத்தின் மீது அமர்ந்து உபரியான தொழுகைகளையும் வித்ரையும் தொழுவார்கள் என்றாலும் கடமையான தொழுகைகளை வாகனத்தின் மீதமர்ந்து தொழ மாட்டார்கள்” என்றும் குறிப்பிட்டார்கள்.

(அறிவிப்பாளர்: இப்னு ஷிஹாப்ؓ, நூல்: புகாரி - 1098)

கடமையான தொழுகையை நின்று தொழுவதற்கான சக்தியை பெற்றவர்கள் நின்று தான் தொழ வேண்டும்.

2 - தக்பீரத்துல் இஹ்ராம்

தொழுகையை ஆரம்பிக்கும் போது கூறும் முதல்

தக்பீர்.

عَـنْ أَبِي هُرَيْـرَةَ أَنَّ رَسُـولَ اللهِ صـلى الله عليـه وسـلم دَخَـلَ الْمَسْجِدَ ، فَدَخَـلَ رَجُـلٌ فَصَـلَّى فَسَـلَّمَ عَلَى النَّبِيِّ صـلى الله عليـه وسـلم فَـرَدَّ وَقَـالَ « ارْجِـعْ فَصَـلِّ ، فَإِنَّـكَ لَـمْ تُصَـلِّ». فَرَجَـعَ يُصَـلِّى كَمَـا صَـلَّى ثُـمَّ جَـاءَ فَسَـلَّمَ عَلَى النَّـبِيِّ صـلى الله عليـه وسـلم فَقَـالَ « ارْجِـعْ فَصَـلِّ فَإِنَّـكَ لَـمْ تُصَـلِّ » ثَلاَثًـا . فَقَـالَ وَالَّذِى بَعَثَـكَ بِالْحَـقِّ مَـا أُحْسِـنُ غَـيْرَهُ فَعَلِّمْـنِى . فَقَـالَ « إِذَا قُمْـتَ إِلَى الصَّـلاَةِ فَكَـبِّرْ ، ثُـمَّ اقْـرَأْ مَـا تَيَـسَّرَ مَعَـكَ مِـنَ الْقُـرْآنِ ، ثُـمَّ ارْكَـعْ حَـتَّى تَطْمَـئِنَّ رَاكِعًـا ، ثُـمَّ ارْفَـعْ حَـتَّى تَعْتَـدِلَ قَائِمًـا ، ثُـمَّ اسْـجُدْ حَـتَّى تَطْمَـئِنَّ سَـاجِدًا ، ثُـمَّ ارْفَـعْ حَـتَّى تَطْمَـئِنَّ جَالِسًـا ، وَافْعَـلْ ذَلِـكَ فِى صَلاَتِـكَ كُلِّهَـا

நபிﷺ அவர்கள் பள்ளியில் நுழைந்தார்கள். அந்நேரத்தில் ஒரு மனிதரும் பள்ளியில் நுழைந்து தொழலானார். (தொழுது முடித்ததும்) நபிﷺ அவர்களுக்கு சலாம் கூறினார். நபிﷺ அவர்கள் அவருக்கு பதிலளித்துவிட்டு, நீங்கள் திரும்பி சென்று (மீண்டும்) தொழுவீராக! நீங்கள் தொழவே இல்லை என கூறினார்கள். இவ்வாறு மூன்று முறை நடந்தது. பிறகு அந்த மனிதர் சத்திய மார்க்கத்துடன் அனுப்பியவன் மீது சத்தியமாக இதைவிட சிறந்த முறையில் தொழுவதை நான் அறியமாட்டேன் எனக்கு கற்று தருவீராக! என கேட்டார்.

நீங்கள் தொழுகைக்காக நின்றால் அல்லாஹூ

அக்பர் என்று கூறுவீராக! பிறகு அல்குர்ஆனில் தெரிந்தவற்றை ஓதுவீராக! பின்னர் நிதானமாக ருகூவு செய்வீராக! பின்னர் ருகூவிலிருந்து எழுந்து சரியாக நிற்பீராக! பின்னர் நிதானமாக ஸஜ்தா செய்வீராக! பின்னர் ஸஜ்தாவிலிருந்து எழுந்து நிதானமாக உட்கார்வீராக! இவ்வாறே உமது எல்லா தொழுகைகளிலும் செய்து வருவீராக! என நபிﷺ அவர்கள் கூறினார்கள்.

(அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா ؓ, நூல்: புகாரி - 757)

இந்த ஹதிஸில் நபிﷺ அவர்கள் தொழுகைக்காக நின்றால் அல்லாஹு அக்பர் என்று கூறுங்கள் என்று கட்டளையிடுகிறார்கள். ஆகவே தக்பீர் தஹ்ரிமா கூறுவது தொழுகையின் அடிப்படையாக இருக்கிறது. இந்த தக்பீரை ஒருவர் கூறாமல் விட்டால் அவரின் தொழுகை ஏற்கப்படாது.

عَـنْ عَلِيٍّ رضى الله عنـه قَـالَ قَـالَ رَسُـولُ اللهِ صـلى الله عليـه وسـلم مِفْتَـاحُ الصَّـلاَةِ الطُّهُـورُ وَتَحْرِيمُهَـا التَّكْبِـيرُ وَتَحْلِيلُهَـا التَّسْـلِيمُ

அல்லாஹ்வின் தூதர்ﷺ அவர்கள் கூறினார்கள், தூய்மை (உளூ) தொழுகையின் சாவியாகும், தக்பீர் தொழுகையில் மற்ற காரியங்கள் செய்வதை விட்டு தடுப்பதாகும், தஸ்லிம் தொழுகையை முடித்து மற்ற காரியங்களை செய்வதற்கு அனுமதியாகும்.

(அறிவிப்பாளர்: அலி ؓ, நூல்: அபுதாவூத் - 61)

عَـنْ أَبِي سَـعِيدٍ الْخُـدْرِيِّ رَضِيَ اللهُ عَنْـهُ قَـالَ قَـالَ رَسُـولُ اللهِ صـلى الله عليـه وسـلم إِذَا قَـالَ الإِمَـامُ اللهُ أَكْـبَرُ فَقُولُـوا اللهُ أَكْـبَرُ

அல்லாஹ்வின் தூதர்ﷺ அவர்கள் கூறினார்கள், இமாம் அல்லாஹு அக்பர் என்று கூறினால், நீங்களும் அல்லாஹு அக்பர் என்று கூறுங்கள்.

(அறிவிப்பாளர்: அபு சயித் அல்குத்ரிؓ, நூல்: இப்னு குதைமா, பைஹகி)

தொழுகையின் ஆரம்பத்தில் இமாம் கூறும் தக்பீரே தஹ்ரிமாவை பின் நிற்பவர்களும் அவசியமாக கூற வேண்டும். மேலும் ஒருவர் தக்பீர் தஹ்ரிமாவை கொண்டே தொழுகையில் நுழைய முடியும். எனவே இதனை கூறாமல் தொழுதவரின் தொழுகை ஏற்கப்படாது.

3 - சூரத்துல் ஃபாத்திஹா(அல்ஹம்து சூரா)வை ஓதுவது

தொழுகையில் சூரத்துல் பாத்திஹாவை ஓதுவது தொழுகையின் அடிப்படைகளில் ஒன்றாக இருக்கிறது என்பதை அல்குர்ஆன், சுன்னாவிலிருந்து அறியலாம். தனியாக தொழுபவர், இமாமாக தொழ வைப்பவர், சப்தமில்லாத தொழுகையில் இமாம் பின் நின்று தொழுபவர் ஆகிய அனைவரும் கட்டாயமாக சூரத்துல் பாத்திஹாவை ஓத வேண்டும் என்பதில் அபூ ஹனிஃபாؒ அவர்களை தவிர்த்து மற்ற அனைத்து அறிஞர்களும் ஒரே கருத்தில் இருக்கிறார்கள். ஆனால் இமாம் சப்தமாக தொழ வைக்கும் தொழுகைகளில் பின் நிற்பவர்கள் சூரத்துல் பாத்திஹாவை ஓதுவது தொடர்பாக அறிஞர்கள் கருத்து வேறுபாடு கொண்டிருக்கிறார்கள்.

1. இமாம் ஷாஃபிஈؒ, இமாம் புகாரிؒ, இமாம் இப்னு குதைமாؒ, இமாம் பைஹகிؒ, இமாம் இப்னு

ஹஜ்ம்ﷺ, ஷெய்க் இப்னு பாஸ்ﷺ, ஷெய்க் இப்னு உஸைமின்ﷺ போன்ற அறிஞர்கள், இமாம் சப்தமாக தொழ வைக்கும் தொழுகைகளில் பின் நிற்பவர்களும் சூரத்துல் பாத்திஹாவை கட்டாயமாக ஓதியே ஆக வேண்டும் என்கிறார்கள். ஸஹாபாக்கள், தாபியின்களில் பெரும்பான்மையானவர்களின் கருத்தும் இதுவே ஆகும்.

2. இமாம் மாலிக்ﷺ, இமாம் அஹமத் பின் ஹம்பல்ﷺ, ஷெய்குல் இஸ்லாம் இப்னு தைமிய்யாﷺ, ஷெய்க் அல்பானிﷺ போன்ற அறிஞர்கள் இமாம் சப்தமாக தொழ வைக்கும் போது பின் நிற்பவர்கள் சூரத்துல் ஃபாத்திஹாவை ஓதக்கூடாது என்கிறார்கள்.

3. இமாம் அபூ ஹனிஃபாﷺ அவர்கள், இமாமுக்கு பின் நிற்பவர்கள் மீது அல்குர்ஆனை ஓதுவது கட்டாயமில்லை. அது இமாம் சப்தமாக தொழ வைக்கும் தொழுகையாக இருந்தாலும் சரியே! சப்தமில்லாமல் தொழ வைக்கும் தொழுகையாக இருந்தாலும் சரியே! எந்த ஒரு தொழுகையிலும் இமாமுக்கு பின் நிற்பவர் மீது அல்குர்ஆனை ஓதுவது கட்டாயமில்லை என்கிறார்கள்.

முதலாவது கருத்திலுள்ள அறிஞர்களின் கூற்றுக்கான ஆதாரம்.

عَنْ عُبَادَةَ بْنِ الصَّامِتِ أَنَّ رَسُولَ اللَّهِ صلى الله عليه وسلم قَالَ لاَ صَلاَةَ لِمَنْ لَمْ يَقْرَأْ بِفَاتِحَةِ الْكِتَابِ

அல்லாஹ்வின் தூதர்ﷺ அவர்கள் கூறினார்கள்,

எவர் சூரத்துல் ஃபாத்திஹாவை ஓதவில்லையோ, அவருக்கு தொழுகை இல்லை.

(அறிவிப்பாளர்: உபாதா பின் சாமித்ﷺ, நூல்: புகாரி - 756)

இந்த ஹதீஸில் நபிﷺ அவர்கள் சூரத்துல் பாத்திஹாவை ஓதாதவருக்கு தொழுகை இல்லை என்பதை பொதுவாக தான் கூறியுள்ளார்கள். இமாம் சப்தமாக ஓதும் தொழுகையில் ஓதக்கூடாது, இமாம் சப்தமில்லாமல் ஓதும் தொழுகைகளில் மட்டும் தான் ஓத வேண்டும் என்று பிரித்து கூறவில்லை. எனவே சூரத்துல் பாத்திஹாவை இமாம் சப்தமாக ஓதும் தொழுகை அல்லது சப்தமில்லாமல் ஓதும் தொழுகை என்று பிரிப்பதற்கு எவ்வித சான்றும் இல்லை. ஹதீஸில் பொதுவாக வந்துள்ளதினால் இரண்டு விதமான தொழுகைகளிலும் ஓத வேண்டும் என்றே பொருள் கொள்ள வேண்டும்.

عَنْ أَبِى هُرَيْرَةَ عَنِ النَّبِىِّ صلى الله عليه وسلم قَالَ مَنْ صَلَّى صَلاَةً لَمْ يَقْرَأْ فِيهَا بِأُمِّ الْقُرْآنِ فَهْىَ خِدَاجٌ ثَلاَثًا غَيْرُ تَمَامٍ». فَقِيلَ لأَبِى هُرَيْرَةَ إِنَّا نَكُونُ وَرَاءَ الإِمَامِ. فَقَالَ اقْرَأْ بِهَا فِى نَفْسِكَ

எவர் ஒரு தொழுகையை தொழுது அதில் அல்குர்ஆனின் தாய் சூராவான சூரத்துல் ஃபாத்திஹாவை ஓதவில்லையோ அவரது தொழுகை குறையுடையதாகும் என்று மூன்று முறை நபிﷺ அவர்கள் கூறினார்கள்.

அபூ ஹுரைராﷺ அவர்களிடம் இமாமிற்கு பின் நாங்கள் நிற்கும் நிலையில் எவ்வாறு ஓத வேண்டும் என கேட்கப்பட்டது? அதற்கு அபூ ஹுரைராﷺ

அவர்கள், உமது உள்ளத்தில் ஓதிக் கொள்ளுங்கள் என்று கூறினார்கள்.

(அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா ரலி, நூல்: முஸ்லிம்)

சூரத்துல் ஃபாத்திஹாவை ஓதாதவருக்கு தொழுகை இல்லை என்ற ஹதீஸை அறிவிக்கும் ஸஹாபியான அபூ ஹுரைரா ﵁ அவர்களிடமே, இமாமுக்கு பின் எவ்வாறு ஓத வேண்டும் என கேட்கப்பட்ட போது, அபூ ஹுரைரா ﵁ அவர்கள், உங்களது உள்ளத்தில் ஓதிக் கொள்ளுங்கள் என்றார்கள். இதிலிருந்து இமாம் சப்தமாக ஓதும் தொழுகைகளிலும் அவசியமாக சூரத்துல் பாத்திஹாவை ஓத வேண்டும் என்பதை தெளிவாக அறியலாம்.

عن عبادة بن الصامت رضي الله عنه قال صلى رسول الله صلى الله عليه وسلم الصبح فثقلت عليه القراءة، فلما انصرف قال"إني أراكم تقرءون وراء إمامكم قال : قلنا يارسول الله إي والله قال لا تفعلوا إلا بأم القرآن فإنه لاصلاة لمن لم يقرأ بها " . رواه الترمذي

நபி ﷺ அவர்கள் ஃபஜ்ர் தொழுகை நடத்தினார்கள். அதில் அவர்களுக்கு ஓதுவது சிரமமாக இருந்தது. பிறகு தொழுகையை முடித்ததும், உங்களின் இமாமிற்கு பின் ஓதுபவர்களாக உங்களை காண்கிறேன் என கூறினார்கள். அதற்கு நாங்கள் அல்லாஹ்வின் மீதாணையாக இமாமிற்கு பின் ஓதுகிறோம் என பதிலளித்தோம். இவ்வாறு நீங்கள் செய்யாதீர்கள். சூரத்துல் ஃபாத்திஹாவை மட்டும் ஓதிக் கொள்ளுங்கள். ஏனெனில் அதனை ஓதாதவருக்கு தொழுகை இல்லை என நபி ﷺ அவர்கள் கூறினார்கள்.

(அறிவிப்பாளர்: உபாதா பின் ஸாமித் ﵁, நூல்: திர்மிதி ஸஹீஹ்)

இந்த ஹதீஸில் வருகின்ற சம்பவம் ஃபஜ்ர் தொழுகையில் நடந்ததாகும். தொழுகையில் இமாம் சப்தமாக ஓதினாலும் பின் நிற்பவர் சூரத்துல் ஃபாத்திஹாவை மட்டும் அவசியமாக ஓதிக் கொள்ள வேண்டும் என்பதை நபிﷺ அவர்கள் தெளிவாக சுட்டிக்காட்டியுள்ளார்கள்.

இரண்டாம் கருத்திலுள்ள அறிஞர்கள் மேற்கோள் காட்டும் ஆதாரங்கள்,

ஆதாரம் - 1:

﴿وَإِذَا قُرِئَ الْقُرْآنُ فَاسْتَمِعُوا لَهُ وَأَنْصِتُوا لَعَلَّكُمْ تُرْحَمُونَ﴾

அல்குர்ஆன் ஓதப்படும் போது அதனை செவிதாழ்த்தி கேளுங்கள், மவுனமாக இருங்கள். (இதனால்) நீங்கள் அருள் செய்யப்படுவீர்கள்! (7:204)

இந்த வசனம் இமாம் சப்தமாக ஓதி தொழ வைக்கும் தொழுகைகளில் பின் நிற்பவர்கள் எதையும் ஓதக் கூடாது என்பதற்காகவே இறக்கியருளப்பட்டது. எனவே இமாம் சப்தமாக ஓதும் போது பின் நிற்பவர்கள் மவுனமாக இருந்து செவிதாழ்த்தி கேட்க வேண்டும் என்று கூறுகின்றனர்.

நமது பதில் 1: இவ்வசனம் இறக்கியருளப்பட்டது தொடர்பாக அறிஞர்களின் கருத்துகள்,

1. முஜாஹித் மற்றும் சயித் பின் ஜுபைர் போன்ற தாபியின்களின் கூற்று இவ்வசனம் தொழுகையில் இமாமுக்கு பின் ஓதுவதை குறிக்கின்றது என்கிறார்கள். அப்துல்லாஹ் பின் மஸ்வூத், அபூ ஹுரைரா ﵄ போன்ற ஸஹாபாக்களும் இதே கருத்தை கூறியதாக

வந்துள்ள அறிவிப்புகளை இமாம் அத்தப்ரி ﷺ அவர்கள் பதிவு செய்துள்ளார்கள். ஆனால் அந்த அறிவிப்புகள் அனைத்தும் பலவீனமானதாக உள்ளது. எனவே இதனை ஆதாரமாக எடுக்க முடியாது.

2. கதாதா ﷺ அவர்களின் கூற்று இவ்வசனம் ஆரம்பத்தில் தொழுகையில் பேசுவதற்கு அனுமதி அளிக்கப்பட்டு இருந்தது. பிறகு இவ்வசனம் இறக்கப்பட்டதற்கு பிறகு பேசுவதற்கான அனுமதி நீக்கப்பட்டதையே இவ்வசனம் குறிக்கிறது என்கிறார்கள்.

ஆக இவ்வசனத்தின் கருத்து எதுவென்பதில் கருத்து வேறுபாடுகள் நிலவுகிறது. ஒரு வாதத்திற்கு இது தொழுகையில் இமாமுக்கு பின் ஓதுவதை தான் குறிக்கிறது என்பதாக எடுத்துக் கொண்டாலும். சூரத்துல் ஃபாத்திஹாவை தவிர மற்ற விஷயங்களை ஓதுவதற்கு மட்டுமே இது பொருந்தும். ஏனெனில் நபி ﷺ அவர்கள் சப்தமாக இமாம் தொழ வைக்கும் தொழுகைகளில் பின் நின்று தொழுபவர் சூரத்துல் பாத்திஹாவை ஓத வேண்டும் என கூறியுள்ளார்கள். எனவே இவ்வசனத்தை அடிப்படையாக வைத்து இமாம் சப்தமாக தொழ வைக்கும் தொழுகைகளில் பின் நிற்பவர் சூரத்துல் ஃபாத்திஹாவை கூட ஓதக்கூடாது என்ற வாதம் வைப்பதே அடிப்படையில் தவறாகும்.

நமது பதில் 2: இவ்வசனம் எப்போது இறக்கி அருளப்பட்டது?

சூரத்துல் அஃராஃப் மக்காவில் இறக்கியருளப்பட்ட அத்தியாயம் ஆகும். தொழுகையில் சூரத்துல்

ஃபாத்திஹாவை அவசியமாக ஓத வேண்டும் என்ற அறிவுப்புகளை அறிவிக்கும் ஸஹாபாக்களில் ஒருவரான உபாதா பின் ஸாமித்ரழி அவர்கள் மதினாவை சேர்ந்த ஸஹாபி ஆவார். மற்றொரு அறிவிப்பாளரான அபூ ஹுரைராரழி அவர்கள் ஹிஜ்ரி ஏழாம் ஆண்டு இஸ்லாத்தை ஏற்ற ஸஹாபி ஆவார்கள்.

சூரத்துல் அஃராஃபின் 204வது வசனம் தொழுகையில் அல்குர்ஆன் ஓதுவதை தான் குறிக்கிறது என்றால், இத்தடை மதினாவில் தான் அருளப்பட்டிருக்க வேண்டும். மக்காவில் ஏன் அருளப்பட வேண்டும்? சட்டம் தடை செய்யப்பட்டதற்கு பிறகு நபிﷺ அவர்கள் சூரத்துல் ஃபாத்திஹாவை அவசியமாக ஓதியே ஆக வேண்டும் என்று எவ்வாறு கூற முடியும்? எனவே இவ்வசனத்திற்கும் இமாம் சப்தமாக தொழ வைக்கும் தொழுகைகளில் பின் நிற்பவர் சூரத்துல் ஃபாத்திஹாவை ஓதக் கூடாது என்பதற்கும் எவ்விதமான தொடர்பும் இல்லை என்பதே சரியான கருத்தாகும்.

ஆதாரம் - 2:

عَنْ سُلَيْمَانَ عَنْ قَتَادَةَ مِنَ الزِّيَادَةِ « وَإِذَا قَرَأَ فَأَنْصِتُوا »

இமாம் முஸ்லிம்ரஹ் அவர்கள், சுலைமான் அத்தைமி என்ற அறிவிப்பாளர், கதாதாரஹ் அவர்களின் மூலமாக அபு மூஸாரழி அவர்களின் அறிவிப்பை பதிவு செய்திருக்கிறார்கள். அதில் நபிﷺ அவர்கள் இமாம் ஓதினால் நீங்கள் மௌனமாக இருங்கள் என்று கூறினார்கள்.

(அறிவிப்பாளர்: அபு மூஸா அஷ்அரிரழி, நூல்: முஸ்லிம்)

இந்த ஹதீஸை ஆதாரமாக இமாம் சப்தமாக ஓதும் போது பின் நிற்பவர்கள் மௌனமாக இருக்க வேண்டும் என்ற கருத்திலுள்ள அறிஞர்கள் கூறுகிறார்கள்.

நமது பதில்: இந்த ஹதீஸில் உள்ள வார்த்தைகளான இமாம் ஓதினால், மௌனமாக இருங்கள் என்ற வாசகம் ஷாத் என்ற தரத்தில் உள்ளதாகும். ஷாத்தான வாசகங்கள் பலவீனமானதாகும்.

இமாம் முஸ்லிம்ﷺ அவர்கள் ஸஹீஹ் முஸ்லிம் நூலில், முதலில் மூல ஹதீஸை கொண்டு வருவார்கள். அதனை தொடர்ந்து ஷவாயித், முதாபாஅத்தை இடம்பெற செய்வார்கள். அந்த ஷவாயித் மற்றும் முதாபஅத்தின் அந்தஸ்து மூல ஹதிஸை போன்ற அந்தஸ்தை பெறாது. இமாம் ஓதினால் நீங்கள் மௌனமாக இருங்கள் என்ற ஹதீஸை மூலத்தில் கொண்டு வராமல் முதாபஅத்தில் கொண்டு வந்துள்ளார்கள்.

கதாதாﷺ அவர்களிடமிருந்து அறிவிப்பாளர்களில் சுலைமான் அத்தைமி என்பவர் மட்டுமே இமாம் ஓதினால் நீங்கள் மௌனமாக இருங்கள் என்ற அறிவிப்பை அறிவிக்கின்றார்கள். எனவே இந்த அறிவிப்பு ஷாத் என்ற பலவீனமான தரத்தில் உள்ளதாகும்.

قَالَ أَبُو دَاوُدَ وَقَوْلُهُ « فَأَنْصِتُوا ». لَيْسَ بِمَحْفُوظٍ لَمْ يَجِئْ بِهِ إِلاَّ سُلَيْمَانُ التَّيْمِىُّ فِى هَذَا الْحَدِيثِ.

இமாம் அபூ தாவூத்ﷺ அவர்கள் கூறுகிறார்கள், இந்த ஹதீஸிலுள்ள அமைதியாக இருங்கள் என்ற வார்த்தை பாதுகாக்கப்படாததாகும். சுலைமான் அத்தைமி என்பவர்

மட்டுமே இந்த வார்த்தையை கூறுகிறார்.

(அபூ தாவூத் - 975)

இமாம் இப்னு குஜைமா அவர்கள் கூறுகிறார்கள், இமாம் ஓதினால் வாய்பொத்தி இருங்கள் என்ற அறிவிப்பு பாதுகாக்கப்பட்டதல்ல. **(கிதபுால் கிராஅத்)**

முஸ்லிமில் வந்துள்ள ஹதீஸ் ஷாத் என்ற தரத்தில் இருப்பதினால், இதனை ஆதாரமாக எடுத்துக் கொள்ள முடியாது.

ஆதராம் - 3:

عَـنْ أَبِى هُرَيْـرَةَ أَنَّ رَسُـولَ اللّٰهِ صـلى الله عليـه وسـلم انْـصَرَفَ مِـنْ صَـلاَةٍ جَهَـرَ فِيهَـا بِالْقِـرَاءَةِ فَقَـالَ هَـلْ قَـرَأَ مَـعِى أَحَـدٌ مِنْكُمْ آنِفًـا. فَقَـالَ رَجُـلٌ نَعَـمْ يَـا رَسُـولَ اللّٰهِ. قَـالَ إِنِّى أَقُـولُ مَـا لِى أُنَازَعُ الْقُـرْآنَ. قَـالَ فَانْتَـهَى النَّـاسُ عَـنِ الْقِـرَاءَةِ مَـعَ رَسُـولِ اللّٰهِ صـلى الله عليـه وسـلم فِيمَـا جَهَـرَ فِيـهِ رَسُـولُ اللّٰهِ صـلى الله عليـه وسـلم مِـنَ الصَّلَـوَاتِ بِالْقِـرَاءَةِ حِـينَ سَـمِعُوا ذَلِـكَ مِـنْ رَسُـولِ اللّٰهِ صـلى الله عليـه وسـلم

அல்லாஹ்வின் தூதர்ﷺ அவர்கள் சப்தமாக ஓதும் ஒரு தொழுகையை முடித்து திரும்பியதும், சற்று முன்பு உங்களில் எவர் என்னுடன் ஓதியது என கேட்டார்கள். ஒரு மனிதர் அல்லாஹ்வின் தூதரே! நான் தான் ஓதினேன் என்றார். அல்லாஹ்வின் தூதர்ﷺ அவர்கள் எனக்கு என்ன நேர்ந்தது, அல்குர்ஆனை ஓதும் போது நான் ஏன் தடுக்கப்படுகிறேன் என்று (மனதில்) கூறிக் கொண்டேன் என்றார்கள். அல்லாஹ்வின் தூதர்ﷺ

அவர்களிடமிருந்து இதனை செவிமடுத்ததும் எந்தந்த தொழுகைகளில் அல்லாஹ்வின் தூதர்ﷺ அவர்கள் சப்தமாக ஓதி வந்தார்களோ அத்தொழுகைகளில் மக்கள் ஓதுவதை விட்டு விட்டார்கள்.

(அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா ؓ, நூல்: அபூ தாவூத் - 826)

இந்த ஹதீஸை ஆதாரமாக வைத்து இமாம் சப்தமாக ஓதும் தொழுகையில் மக்கள் ஓதுவதை விட்டு விட்டார்கள் என வந்துள்ளது. எனவே இமாம் சப்தமாக ஓதும் போது பின் நின்று தொழுபவர் ஓதக் கூடாது என கருத்திலுள்ள அறிஞர்கள் கூறுகிறார்கள்.

நமது பதில். 1. இந்த ஹதீஸில், அல்லாஹ்வின் தூதர்ﷺ அவர்கள் எனக்கு என்ன நேர்ந்தது, அல்குர்ஆனை ஓதும் போது நான் ஏன் தடுக்கப்படுகிறேன் என்று (மனதில்) கூறிக் கொண்டேன் என்றார்கள் - என்பது வரை மட்டுமே நபிﷺ அவர்களின் கூற்றாகும். அதற்கு பின் வருகின்ற வாசகங்கள் நபிﷺ அவர்களின் கூற்றல்ல. இது ஹதீஸை அறிவிக்கின்ற அபூ ஹுரைரா ؓ அவர்களின் கூற்றா? அல்லது இமாம் ஜுஹ்ரி رحمه الله அவர்களின் கூற்றா என்பதில் அறிஞர்களின் மத்தியில் கருத்து வேறுபாடுகள் உள்ளது. இது இமாம் ஜுஹ்ரி رحمه الله அவர்களின் கூற்றாகும் என்பதே சரியான ஆய்வாகும். அதற்கான ஆதாரங்களை பார்ப்போம்,

இந்த ஹதீஸை சுனன் அபி தாவூதில் பதிவு செய்த இமாம் அபூ தாவூத் رحمه الله அவர்கள், தனது சுனனில் கூறுகிறார்கள், "நான் யஹ்யா பின் ஃபாரஸ் கூற கேட்டிருக்கிறேன் மக்கள் ஓதுவதை விட்டுவிட்டார்கள்

என்பது இமாம் ஜுஹ்ரி அவர்களின் சொந்த வார்த்தையாகும்.” **(நூல்: அபூ தாவூத் - 827)**

இமாம் திர்மிதிﷺ அவர்கள் கூறுகிறார்கள், இமாம் ஜுஹ்ரிﷺ அவர்களிடமிருந்து அறிவிக்கும் சிலர் அறிவிக்கிறார்கள், பிறகு நபிﷺ அவர்கள் எந்தந்த தொழுகையில் சப்தமிட்டு ஓதி வந்தார்களோ அத்தொழுகைகளில் மக்கள் ஓதுவதை விட்டுவிட்டார்கள் என்பது இமாம் ஜுஹ்ரி அவர்களின் வார்த்தையாகும். மேலும் இது அபூ ஹுரைராﷺ அவர்களின் வார்த்தையாக இருக்க முடியாது. ஏனெனில் அபூ ஹுரைராﷺ அவர்களே இமாமிற்கு பின் கட்டாயமாக ஓத வேண்டும் என்கிறார்கள். **(திர்மிதி - 313)**

இந்த ஹதீஸில் வந்துள்ள மக்கள் இமாமுக்கு பின் ஓதுவதை விட்டுவிட்டார்கள் என்பது இமாம் ஜுஹ்ரியின் கூற்று என்பதே சரியான கருத்தாகும். இமாம் ஜுஹ்ரிﷺ அவர்கள் தாபியினாக இருப்பதினால் நபிﷺ அவர்களின் காலத்தில் நடந்த விஷயங்களை கூறுவதை ஆதாரமாக எடுக்க முடியாது. இதனையே முர்ஸலு தாபயீ என ஹதீஸ்கலையில் கூறுவார்கள். இது பலவீனமானதாகவே பார்க்கப்படும்.

இமாம் சப்தமாக ஓதும் தொழுகையில் பின் நிற்பவர்கள் சூரத்துல் ஃபாத்திஹாவை ஓதக் கூடாது என்ற நிலையில் இருக்கும் அறிஞர்கள் எடுத்துக் காட்டுகின்ற ஆதாரங்களில் எந்த ஒன்றுமே வலுவான நிலையில் இல்லை. எனவே இவற்றை ஆதாரமாக ஏற்க முடியாது.

இமாம் ஷவ்கானி ﷺ அவர்கள் நய்லுல் அவ்தார் என்னும் தனது நூலில் கூறுகிறார்கள், சூரத்துல் ஃபாத்திஹா தொடர்பான ஹதீஸ்களை ஆதாரமாக கொண்டு எவர்கள், இமாமுக்கு பின் நின்று தொழும் போதும் கட்டாயமாக சூரத்துல் ஃபாத்திஹாவை ஓத வேண்டும் என்று கூறுகின்றார்களோ அவர்களின் நிலையே சரியானதாகும். இமாம் சப்தமாக ஓதும் தொழுகையில் பின் நிற்பவர்கள் சூரத்துல் ஃபாத்திஹாவை ஓத வேண்டும் என்பதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளதை ஹதீஸ்களிலிருந்து வெளிப்படையாக அறிய முடிகிறது. இமாம் சப்தமாக ஓதும் தொழுகையில் எதனையும் ஓதக் கூடாது என்று தடுக்கப்பட்ட கட்டளையில் சூரத்துல் ஃபாத்திஹாவிற்கு மட்டும் விலக்களிக்கப்பட்டுள்ளது. **(நூல்: நய்லுல் அவ்தார் - 2/229)**

மேலும் இமாம் ஷவ்கானி ﷺ அவர்கள் கூறுகிறார்கள், ஒவ்வொரு இமாம் பின் நிற்பவர்களும் ஒவ்வொரு ரக்அத்திலும் சூரத்துல் ஃபாத்திஹாவை கட்டாயமாக ஓதியே ஆக வேண்டும் என்பதினை முன்னர் குறிப்பிடப்பட்ட ஆதாரங்களிலிருந்து நீங்கள் அறிந்திருப்பீர்கள். சூரத்துல் ஃபாத்திஹாவை ஓதுவது தொழுகையின் நிபந்தனைகளில் ஒன்றாகும் என்பதற்கு வந்துள்ள ஆதாரங்கள் தெளிவான சான்றாகும். எனவே எவரொருவர் சூரத்துல் ஃபாத்திஹாவை ஓதவில்லை என்றாலும் அவருடைய தொழுகை அல்லது ரக்அத் ஏற்றுக் கொள்ளப்படும் என்கிறார்களோ, அவர்கள் அதற்கான தெளிவான ஆதாரத்தை கொண்டு வரட்டும். **(நூல்: நய்லுல் அவ்தார் - 2/229)**

மூன்றாவது கருத்திலுள்ள அறிஞரின் கூற்றுக்கான ஆதாரம்.

இமாம் அபூ ஹனீஃபா ﷺ அவர்கள் கூறுகிறார்கள், இமாமுக்கு பின் நின்று தொழுபவர் மீது எந்த தொழுகையிலும் அல்குர்ஆனை ஓதுவது கட்டாயமில்லை. இதற்கு பின்வரும் ஹதீஸை ஆதாரமாக காட்கிறார்கள்,

عَـنْ جَابِـر، قَـالَ : قَـالَ رَسُـولُ اللهِ صَـلَّى الله عَلَيْـهِ وسَـلَّمَ : مَـنْ كَانَ لَهُ إِمَـامٌ ، فَـإِنَّ قِـرَاءَةَ الإِمَـامِ لَهُ قِـرَاءَةٌ

அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள், எவருக்கு இமாம் இருப்பாரோ, அவரின் கிராஅத்தே பின் நிற்பவருக்கு கிராஅத்(போதுமான)தாகும்.

(அறிவிப்பாளர்: ஜாபிர் ؓ, நூல்: இப்னுமாஜா)

இந்த ஹதீஸில் இமாமுக்கு பின் நின்று தொழுபவர்களுக்கு இமாமின் கிராஅத்தே போதுமானதாகும் என்று உள்ளது. எனவே இமாமுக்கு பின் நின்று தொழுபவர் மீது எதனையும் ஓதுவது கட்டாயமில்லை என்று இமாம் அபு ஹனீஃபா ﷺ அவர்கள் கூறுகிறார்கள்.

நமது பதில்: இந்த ஹதீஸில் அறிவிப்பாளராக இருக்கின்ற ஜாபிர் பின் யஜீத் என்பவர் மிகவும் பலவீனமான அறிவிப்பாளர் ஆவார். ஹாபிஸ் இப்னு ஹஜர் அஸ்கலானி ﷺ அவர்கள் கூறுகிறார்கள், இந்த கருத்தில் வருகின்ற அனைத்து ஹதீஸ்களின் தொடர்களும் மிகவும் பலவீனமானதாகவே உள்ளது. எனவே இந்த ஹதீஸை ஆதாரமாக ஏற்று கொள்ள

முடியாது. மேலும் இக்கருத்தில் வருகின்ற அனைத்து தகவல்களும் ஆதாரமற்றதாகவே இருக்கின்றது.

முடிவுரை: இமாம் பின் நின்று தொழுபவர், சப்தமான தொழுகை மற்றும் சப்தமில்லாத தொழுகை என அனைத்து தொழுகைகளிலும் கட்டாயமாக சூரத்துல் ஃபாத்திஹாவை ஓத வேண்டும் என்பதே சரியான கருத்தாகும். எனவே நபிﷺ அவர்களின் "எவர் சூரத்துல் ஃபாத்திஹாவை ஓதவில்லையோ, அவருக்கு தொழுகை இல்லை" என்ற கூற்றுக்கு ஏற்ப நமது எல்லா தொழுகைகளிலும் சூரத்துல் ஃபாத்திஹாவை அவசியமாக ஓதிக் கொள்ள வேண்டும்!

ருகூவை அடைந்தவர் அந்த ரக்அத்தை அடைவாரா?

ருகூவில் இமாமோடு வந்து சேர்பவருக்கு அந்த ரக்அத் கிடைக்குமா? கிடைக்காதா? என்பதில் அறிஞர்களுக்கு மத்தியில் கருத்து வேறுபாடு நிலவுகிறது.

1. இமாம் புகாரிரஹ், இப்னு குதைமாரஹ், ஷாஃபி மத்ஹபை சேரர்ந்த பல அறிஞாா்கள், இமாம் ஷவ்கானிரஹ் போன்ற அறிஞர்கள் ருகூவை அடைபவர் அந்த ரக்அத்தை அடைந்தவராக ஆக முடியாது என கூறுகின்றார்கள்.

2. நான்கு இமாம்கள், இமாம் அவ்ஜாயிரஹ், சமகால அறிஞர்களாகிய ஷெய்க் பின் பாஸ், ஷெய்க் அல்பானி, ஷெய்க் உஸைமீன் போன்ற அறிஞர்கள் ருகூவை அடைபவர் அந்த ரக்அத்தை அடைந்தவர் ஆவார் என கூறுகின்றார்கள்.

இரண்டு விதமான ஆதாரங்களை வைத்து பார்க்கும் போது முதல் அறிஞர்களின் கருத்தே வலுவானதாக உள்ளது. அந்த ஆதாரங்களை பார்ப்போம்,

முதல் ஆதாரம்:

عَـنْ أَبِى هُرَيْـرَةَ عَـنِ النَّـبِىِّ صـلى الله عليـه وسـلم قَـالَ إِذَا سَـمِعْتُمُ الإِقَامَـةَ فَامْشُـوا إِلَى الصَّـلاَةِ ، وَعَلَيْكُـمْ بِالسَّـكِينَةِ وَالْوَقَـارِ وَلاَ تُسْرِعُـوا ، فَمَـا أَدْرَكْتُـمْ فَصَلُّـوا وَمَـا فَاتَكُـمْ فَأَتِمُّـوا

நபிﷺ அவர்கள் கூறினார்கள்:

“நீங்கள் இகாமத் சொல்லுவதைச் செவியுற்றால் தொழுகைக்குச் செல்லுங்கள். அப்போது நீங்கள் அமைதியான முறையிலும் கண்ணியமாகவும் செல்லுங்கள். அவசரமாகச் செல்லாதீர்கள். உங்களுக்குக் கிடைத்த ரக்அத்களை (ஜமாஅத்துடன்) தொழுங்கள்; உங்களுக்குத் தவறிப் போனதைப் பூர்த்தி செய்யுங்கள்.”
(புஹாரி - 636)

உங்களுக்கு தொழுகையில் தவறியதை பூர்த்தி செய்யுங்கள் என்ற அல்லாஹ்வின் தூதரின் கூற்றின் படி, ருகூவில் வந்து இணைபவருக்கு கியாம் என்ற நிலையும், சூரத்துல் ஃபாத்திஹாவும் கிடைக்காமல் ஆகிறது. எனவே அதனை பூர்த்தி செய்ய வேண்டும் என்றால் ருகூவில் வந்து சேர்ந்தவர் அந்த ரக்அத்தை கணக்கிடாமல் மீண்டும் எழுந்து தொழுவதின் மூலமே தன்னுடைய தொழுகையை பூர்த்தி செய்ய முடியும்.

عَـنْ أَبِى هُرَيْـرَةَ أَنَّ رَسُـولَ اللَّهِ صـلى الله عليـه وسـلم قَـالَ مَـنْ أَدْرَكَ رَكْعَـةً مِـنَ الصَّـلاَةِ فَقَـدْ أَدْرَكَ الصَّـلاَةَ

அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள்:

“தொழுகையில் ஒரு ரக்அத்தை அடைந்து கொள்பவர் அந்தத் தொழுகையை அடைந்து கொள்கிறார்.”

இந்த ஹதீஸில் தொழுகையிலிருந்து ஒரு ரக்அத்தை பெற்று கொள்பவர் என்று வந்துள்ளது. ரக்அத் என்பது இஸ்லாமிய வழக்கில் கியாம், ருகூவு, ஸஜ்தா ஆகிய அனைத்து அடிப்படைகளையும் உள்ளடக்கியதற்கே சொல்லப்படும். இதில் கியாம் என்ற நிலையை அடையாமல் ருகூவை பெற்றவர் ரக்அத்தை பெற்றவராக ஆக முடியாது.

இரண்டாவது கருத்திலுள்ள அறிஞர்களின் ஆதாரங்கள்:

عن أبي هريرة : أن رسول الله صلى الله عليه و سلم قال: من أدرك ركعة من الصلاة فقد أدركها قبل أن يقيم الإمام صلبه

அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள்,

இமாம் தனது முதுகை நேராக்குவதற்கு முன்பு எவர் அவரை வந்து அடைந்துக் கொள்கின்றாரோ, அவர் அந்த ரக்அத்தை அடைந்து கொண்டவர் ஆவார். **(அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா ரலி,**

நூல்: இப்னு குஸைமா - 1595)

நமது பதில்: இது பலவீனமான ஹதீஸ் ஆகும்.

இமாம் உகைலி ரஹ் அவர்கள் கூறுகிறார்கள், இந்த ஹதீஸின் அறிவிப்பாளரான யஹ்யா பின் ஹுமைத், குர்ரா பின் அப்துர் ரஹ்மான் வழியாக இமாம்

ஜுஹரியிடமிருந்து அறிவிக்கின்ற இந்த அறிவிப்பில் மட்டுமே “இமாம் தனது முதுகை நேராக்குவதற்கு முன்பு எவர் அவரை வந்து அடைந்துக் கொள்கின்றாரோ” என்று வந்துள்ளது.

மஅமர், மாலிக், யூனுஸ், இப்னு ஜீரைஜ், இப்னு உயைய்னா, அல்அவ்ஜாயி, ஷுஐப் ஆகிய அனைத்து அறிவிப்பாளர்களும் சேர்ந்து இமாம் ஜுஹரியிடம் அறிவிக்கின்றார்கள். அந்த அறிவிப்பில் “தொழுகையில் ஒரு ரக்அத்தை அடைந்து கொள்பவர் அந்தத் தொழுகையை அடைந்து கொள்கிறார்.” **(நூல்: புகாரி)** என்று மட்டுமே உள்ளது. இத்தனை அறிவிப்பாளர்களில் எந்த ஒருவரும் “இமாம் தனது முதுகை நேராக்குவதற்கு முன்பு எவர் அவரை வந்து அடைந்துக் கொள்கின்றாரோ” என்ற வார்த்தையை கூறவில்லை. எனவே இந்த கூடுதலான வார்த்தை இமாம் ஜுஹரி கூறியதாக இருக்கலாம். அதனை யஹ்யா பின் சயீத் அறிவித்திருக்கிறார். **(நூல்: அஜ்ஜுஹஃபா 4/398)**

இமாம் புகாரிﷺ அவர்கள், யஹ்யா பின் சயீதை பற்றி (لا يتابـع في حديثـه) இவருடைய ஹதீஸ்கள் தனித்தவை என்கிறார்கள். இந்த வார்த்தையை இமாம் புகாரிﷺ அவர்கள் முன்கரான (நிராகரிக்கப்பட வேண்டிய) அறிவிப்பாளர்களுக்கு பயன்படுத்துவார்கள். இமாம் தாருகுத்னிﷺ யஹ்யா பின் சயீதை பலவீனமான அறிவிப்பாளர் என கூறுகிறார்கள். இமாம் உகைலிﷺ தனது அஜ்ஜுஃபா என்ற நூலில் இவரை பற்றி கூறுகிறார்கள். இமாம் இப்னு அதிﷺ தனது அல்காமில் என்ற நூலில் யஹ்யா பின் சயீதை பற்றி கூறுகிறார்கள்.

இந்த கருத்தில் வருகின்ற அனைத்து ஹதீஸ்களும் பலவீனமானவையாகவே உள்ளது. எனவே இதனை ஆதாரமாக கொள்ள முடியாது.

عَـنْ أَبِي بَكْـرَةَ أَنَّـهُ انْتَـهَى إِلَى النَّـبِيِّ صـلى الله عليـه وسـلم وَهْـوَ رَاكِـعٌ ، فَرَكَـعَ قَبْـلَ أَنْ يَصِـلَ إِلَى الصَّـفِّ ، فَذَكَـرَ ذَلِـكَ لِلنَّـبِيِّ صـلى الله عليـه وسـلم فَقَـالَ زَادَكَ اللهِ حِرْصًـا وَلاَ تَعُـدْ

நபிﷺ அவர்கள் தொழுகை நடத்திக் கொண்டிருக்கும்போது ருகூவு செய்தார்கள். நான் வரிசையில் வந்து சேர்வதற்கு முன்பே ருகூவு செய்து விட்டேன். இது பற்றிப் பிறகு நபிﷺ அவர்களிடம் நான் கேட்டபோது, "அல்லாஹ் உன்னுடைய ஆர்வத்தை அதிகப் படுத்துவானாக! இனிமேல் இப்படிச் செய்யாதே!" என்று கூறினார்கள்.

(அறிவிப்பாளர்: அபூ பக்கரா ﵁, நூல்: புகாரி - 783)

இந்த ஹதீஸில் அபூ பக்கரா என்ற ஸஹாபி ருகூவில் வந்து சேர்ந்தார்கள். நபிﷺ அவர்கள் அந்த ஸஹாபியை மீண்டும் தொழுங்கள் என்று கூறவில்லை. எனவே ருகூவை அடைந்தவர் அந்த ரக்அத்தை அடைந்து விடுகிறார் என்று கூறுபவர்கள் இதனை ஆதாரமாக காட்டுகின்றனர்.

நமது பதில்: இந்த ஹதீஸிற்கு இமாம் ஷவ்கானி ﵀, இமாம் இப்னு ஹஜ்ம் ﵀ ஆகியோரின் கூற்றுகளை பதிவு செய்வது பொருத்தமான பதிலாக இருக்கும்.

இமாம் ஷவ்கானி ﵀ அவர்கள் தனது நய்லுல் அவ்தாரில் கூறுகிறார்கள், அபூ பக்கரா ﵁ அவர்களின்

ஹதீஸை வைத்து ருகூவு கிடைத்தவருக்கு ரக்அத் கிடைக்கும் என்ற இமாம்களின் கூற்றுக்கு அதில் எந்த ஆதாரமும் இல்லை. ஏனெனில் மீண்டும் அந்த ரக்அத்தை தொழுவதற்கு நபிﷺ அவர்கள் கட்டளையிட்டதாக எந்த ஆதாரமும் இல்லையோ, அவ்வாறே அந்த ரக்அத்தை கணக்கிட்டு கொண்டார்கள் என்பதற்கும் எவ்வித ஆதாரமும் இல்லை.

அபூ பக்கரா ﵁ அவர்களின் ஆர்வத்திற்காக நபிﷺ அவர்கள் துஆ செய்தார்கள் என்பதினால், அந்த ரக்அத் கணக்கிடப்பட்டதாக ஆகி விடாது. ஏனெனில் இமாமோடு தொழுபவர் இமாமை போன்றே செயல்பட வேண்டும். அவருடைய அந்த ரக்அத் கணக்கிடப்பட்டாலும் சரியே! கணக்கிடப்படாததாக இருந்தாலும் சரியே! இமாமுக்கு பின் நிற்பவர் அவசியமாக இமாமை பின்பற்றியே ஆகவேண்டும். அல்லாஹ்வின் தூதர்ﷺ அவர்கள் கூறினார்கள், நாங்கள் ஸுஜூது செய்கின்ற நிலையில் நீங்கள் தொழுகைக்கு வந்தால், நீங்களும் ஸுஜூது செய்யுங்கள். அதிலிருந்து எதனையும் கணக்கிட்டுக்கு கொள்ளாதீர்கள் என்றார்கள். ஹதீஸில் நபிﷺ அவர்கள் அபூ பக்கரா ﵁ அவர்களை மீண்டும் இவ்வாறு செய்யாதீர்கள் என்று தடுக்கின்றார்கள். தடுக்கப்பட்ட விஷயத்தை ஆதாரமாக கூறுவது ஏற்புடையதல்ல.

இமாம் இப்னு ஹஜ்ம் ﵀ அவர்கள் அல்முஹல்லாவில் அபூ பக்கரா ﵁ அவர்களின் ஹதீஸை பற்றி கூறுகிறார்கள், இந்த ஹதீஸை வைத்து ருகூவை அடைந்தவர் அந்த ரக்அத்தை அடைந்து விடுவார் என்று கூறுபவர்களுக்கு இதில் எந்த ஆதாரமும் இல்லை. ஏனெனில் இந்த

ஹதீஸில் அந்த ரக்அத் கணக்கில் கொள்ளப்பட்டது என்ற விபரமே இல்லை. **(நூல்: அவ்னுல் மஆபூத் 3/146)**

அபூ பக்கரா ﵁ அவர்களின் ஹதீஸை வைத்து ருகூவை அடைந்தவர் ரக்அத்தை அடைந்து கொள்வார் என்ற கருத்து தவறானதாகும். ஏனெனில் இந்த கருத்தை ஏற்பதினால் தொழுகையில் கியாம் மற்றும் சூரத்தல் ஃபாத்திஹா என்ற இரண்டு அடிப்படைகளையும் விட்டு விடுகின்ற நிலை ஏற்படுகிறது.

மேலும் நபி ﷺ அவர்களின் கூற்றான, "நீங்கள் இகாமத் சொல்லுவதைச் செவியுற்றால் தொழுகைக்குச் செல்லுங்கள். அப்போது நீங்கள் அமைதியான முறையிலும் கண்ணியமாகவும் செல்லுங்கள். அவசரமாகச் செல்லாதீர்கள். உங்களுக்குக் கிடைத்த ரக்அத்களை (ஜமாஅத்துடன்) தொழுங்கள்; உங்களுக்குத் தவறிப் போனதைப் பூர்த்தி செய்யுங்கள்." **(புஹாரி-636)** என்பதற்கு ஏற்ப தொழுகையில் தவறுகின்ற அடிப்படைகளை பூர்த்தி செய்வதே சரியான கருத்தாகும். எனவே ருகூவை அடைந்தவர் அந்த ரக்அத்தை அடைந்தவராக ஆகமாட்டார் என்பதே சரியான கருத்தாகும்.

4 - ஒவ்வொரு ரக்அத்திலும் ருகூவு செய்வது

﴿يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا ارْكَعُوا وَاسْجُدُوا﴾

விசுவாசங்கொண்டோரே! நீங்கள் (குனிந்து)ருகூவுச் செய்யுங்கள். இன்னும் சிரம்பணிந்து ஸுஜூதும் செய்யுங்கள். (22:77)

ثُمَّ ارْكَعْ حَتَّى تَطْمَئِنَّ رَاكِعًا

பின்னர் நிதானமாக ருகூவு செய்வீராக!

(நூல்: புகாரி - 757)

மேலுள்ள ஆதாரங்களிலிருந்து ருகூவை கட்டாயமாக செய்ய வேண்டும் என்பதினை அறியலாம்.

5 - ருகுவுலிருந்து எழுந்திருப்பது

6 - எழுந்து நேராக நிற்பது

ثُمَّ ارْفَعْ حَتَّى تَعْتَدِلَ قَائِمًا

பின்னர் ருகூவிலிருந்து எழுந்து சரியாக நிற்பீராக!

(நூல்: புகாரி - 757)

ருகூவிலிருந்து எழுந்திருப்பதும், நேராக நிற்பதும் தொழுகையின் அடிப்படைகளில் உள்ளதாகும். எனவே தொழுகையில் ஈடுபடுபவர்கள் இதில் கவனமாக செயல்பட வேண்டும்.

7 - ஸஜ்தா செய்வது

﴿يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا ارْكَعُوا وَاسْجُدُوا﴾

விசுவாசங்கொண்டோரோ! நீங்கள் (குனிந்து)ருகூவுச் செய்யுங்கள். இன்னும் சிரம்பணிந்து ஸுஜூதும் செய்யுங்கள். (22:77)

ثُمَّ اسْجُدْ حَتَّى تَطْمَئِنَّ سَاجِدًا

பின்னர் நிதானமாக ஸஜ்தா செய்வீராக!

(நூல்: புகாரி - 757)

ஒவ்வொரு ரக்அத்திலும் இரண்டு ஸஜ்தாக்கள் செய்ய வேண்டும். மேலும் அதில் 7 உடல் உறுப்புகளும் தரையை கட்டாயமாக தொட வேண்டும்.

عَـنِ ابْـنِ عَبَّـاسٍ رضى الله عنهمـا قَـالَ قَـالَ النَّـبِىُّ – صـلى الله عليـه وسـلم – « أُمِـرْتُ أَنْ أَسْـجُدَ عَلَى سَـبْعَةِ أَعْظُـمٍ عَلَى الْجَبْهَـةِ – وَأَشَـارَ بِيَـدِهِ عَلَى أَنْفِـهِ – وَالْيَدَيْـنِ ، وَالرُّكْبَتَـيْنِ وَأَطْـرَافِ الْقَدَمَـيْنِ، وَلاَ نَكْفِـتَ الثِّيَـابَ وَالشَّـعَرَ

நபிﷺ அவர்கள் கூறினார்கள், நான் ஏழு உடல் உறுப்புகள் தரையில் படுமாறு ஸஜ்தா செய்ய பணிக்க பட்டுள்ளேன். அவை நெற்றி, நபிﷺ அவர்கள் தன் மூக்கை நோக்கி இஸாரா செய்தார்கள். இரண்டு கைகள், இரண்டு முட்டுகால்கள் மற்றும் இரண்டு கால்களின் பாதங்களின் முனைகள் ஆகும். மேலும் ஆடையோ, முடியோ (தரையில் படாதவாறு) தடுக்க கூடாது எனவும் கட்டளையிடப்பட்டுள்ளேன்.

(அறிவிப்பாளர்: இப்னு அப்பாஸ்ؓ, நூல்: புகாரி - 812)

8 - ஸஜ்தாவிலிருந்து எழுவது

9 - இரு ஸஜ்தாவிற்கு மத்தியில் அமர்வது

ثُمَّ ارْفَعْ حَتَّى تَطْمَئِنَّ جَالِسًا

பின்னர் ஸஜ்தாவிலிருந்து எழுந்து நிதானமாக உட்கார்வீராக! **(நூல்: புகாரி - 757)**

وَكَانَ النبي إِذَا رَفَعَ رَأْسَهُ مِنَ السَّجْدَةِ لَمْ يَسْجُدْ حَتَّى يَسْتَوِىَ جَالِسًا

நபிﷺ அவர்கள் ஸஜ்தாவிலிருந்து தனது தலையை உயர்த்தினால் நேராக நிமிர்ந்து உட்காராமல் (இரண்டாவது) ஸஜ்தா செய்ய மாட்டார்கள்.

(நூல்: முஸ்லிம் 857)

10 - அனைத்து அடிப்படைகளையும் நிதானமாக செய்வது

தொழுகையின் அனைத்து அடிப்படைகளையும் நிதானமாகவே செய்ய வேண்டும். நிதானமில்லாமல் அவசர அவசரமாக தொழப்படும் தொழுகை ஏற்கப்படாது.

عَـنْ أَبِى هُرَيْـرَةَ أَنَّ رَسُـولَ اللهِ صـلى الله عليـه وسـلم دَخَـلَ الْمَسْـجِدَ فَدَخَـلَ رَجُـلٌ فَصَـلَّى فَسَـلَّمَ عَلَى النَّـبِيِّ صـلى االله عليـه وسـلم فَـرَدَّ وَقَـالَ «ارْجِـعْ فَصَـلِّ ، فَإِنَّـكَ لَـمْ تُصَـلِّ» فَرَجَـعَ يُصَـلِّى كَمَـا صَـلَّى ثُـمَّ جَـاءَ فَسَـلَّمَ عَلَى النَّـبِيِّ صـلى الله عليـه وسـلم فَقَـالَ «ارْجِـعْ فَصَـلِّ فَإِنَّـكَ لَـمْ تُصَـلِّ» ثَلاَثًـا . فَقَـالَ وَالَّذِى بَعَثَـكَ بِالْحَـقِّ مَـا أُحْسِـنُ غَـيْرَهُ فَعَلِّمْـنِى . فَقَـالَ «إِذَا قُمْـتَ إِلَى الصَّـلاَةِ فَكَـبِّرْ ، ثُـمَّ اقْـرَأْ مَـا تَيَـسَّرَ مَعَـكَ مِـنَ الْقُـرْآنِ ، ثُـمَّ ارْكَـعْ حَـتَّى تَطْمَـئِنَّ رَاكِعًـا ، ثُـمَّ ارْفَـعْ حَـتَّى تَعْتَـدِلَ قَائِمًـا ، ثُـمَّ اسْـجُدْ حَـتَّى تَطْمَـئِنَّ سَـاجِدًا ، ثُـمَّ ارْفَـعْ حَـتَّى تَطْمَـئِنَّ جَالِسًـا ، وَافْعَـلْ ذَلِـكَ فِى صَلاَتِـكَ كُلِّهَـا

நபிﷺ அவர்கள் பள்ளியில் நுழைந்தார்கள். அந்நேரத்தில் ஒரு மனிதரும் பள்ளியில் நுழைந்து தொழலானார். (தொழுது முடித்ததும்) நபிﷺ அவர்களுக்கு சலாம் கூறினார். நபிﷺ அவர்கள் அவருக்கு பதிலளித்துவிட்டு, நீங்கள் திரும்பி சென்று (மீண்டும்) தொழுவீராக! நீங்கள் தொழவே இல்லை என கூறினார்கள். இவ்வாறு மூன்று முறை நடந்தது. பிறகு அந்த மனிதர் சத்திய மார்க்கத்துடன் அனுப்பியவன் மீது

சத்தியமாக இதைவிட சிறந்த முறையில் தொழுவதை நான் அறியமாட்டேன் எனக்கு கற்று தருவீராக! என கேட்டார்.

நீங்கள் தொழுகைக்காக நின்றால் அல்லாஹுஅக்பர் என்று கூறுவீராக! பிறகு அல்குர்ஆனில் தெரிந்தவற்றை ஓதுவீராக! பின்னர் நிதானமாக ருகூவு செய்வீராக! பின்னர் ருகூவிலிருந்து எழுந்து சரியாக நிற்பீராக! பின்னர் நிதானமாக ஸஜ்தா செய்வீராக! பின்னர் ஸஜ்தாவிலிருந்து எழுந்து நிதானமாக உட்கார்வீராக! இவ்வாறே உமது எல்லா தொழுகைகளிலும் செய்து வருவீராக! என நபி ﷺ அவர்கள் கூறினார்கள்.

(அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா ؓ, நூல்: புகாரி - 757)

நபி ﷺ அவர்கள் தொழுகையை எப்படி தொழுவது என்பதை கற்றுத்தரும் போது எல்லா நிலைகளிலும் நிதானத்தை பேணுவது குறித்து திரும்பத் திரும்ப கூறியதை மேலுள்ள ஹதீஸில் காணலாம்! எனவே தொழுகையில் நிதானம் என்ற அடிப்படை மிக அவசியமாக இருக்க வேண்டும்.

நாங்கள் நபி ﷺ அவர்களிடம் வந்து, அவர்களோடு தொழுதோம். ருகூவிலும், ஸஜ்தாவிலும் தன்னுடைய முதுகு தண்டை வளைக்காத நபரை நபி ﷺ அவர்கள் தன்னுடைய கடைக்கண் பார்வையினால் பார்த்துவிட்டு கூறினார்கள், எவர் தன்னுடைய முதுது தண்டை சீராக்கவில்லையோ அவருக்கு தொழுகை இல்லை. **(நூல்: இப்னு ஹிப்பான்)**

தொழுகையில் ஈடுபடுபவர்கள் நிலையிலும், ருகூவிலும், ஸஜ்தாவிலும், இருப்பிலும் நிதானத்தை

கடைபிடிப்பது மிகவும் அவசியமாகும்.

11 - கடைசி தஷஹ்ஹுத் ஓதுவது

12 - அதற்காக அமர்வது

كنا نقول قبل أن يفرض علينا التشهد السلام على الله من عباده فقال النبي صلى الله عليه وسلم لا تقولوا السلام على الله ولكن قولوا التحيات لله

அப்துல்லாஹ் பின் மஸ்வூத் ﵁ அவர்கள் கூறுகிறார்கள், எங்கள் மீது தஷஹ்ஹுத் கடமையாக்கப்படுவதற்கு முன்பு அல்லாஹ்வின் மீது அவனது அடியார்களின் சாந்தி உண்டாகட்டும்! என்று கூறி வந்தோம். அதற்கு நபி ﷺ அவர்கள் அல்லாஹ்வின் மீது சாந்தி ஏற்படட்டும் என்று கூறாதீர்கள், மாறாக காணிக்கைகள் அல்லாஹ்விற்கே உரியது என பிரார்த்திக்குமாறு கூறினார்கள்.

(நூல்: நஸாயி - 1168, பைஹகி - 4132)

இந்த ஹதீஸில் வந்துள்ள எங்கள் மீது தஷஹ்ஹுத் கடமையாக்கப்படுவதற்கு முன்பு என்ற வாசகம் கடைசி தஷஹ்ஹுத்தை கட்டயாமாக ஒத வேண்டும் என்பதை தெளிவுப்படுத்துகிறது.

மேலும் தஷஹ்ஹுத்தை நபி ﷺ அவர்கள் அமர்ந்து ஒதியதாக தான் அனைத்து ஹதீஸ்களிலும் காண முடிகிறது. எனவே தஷஹ்ஹுத்தை அமர்ந்து தான் ஒத வேண்டும்.

குறிப்பு: அத்தஹிய்யாத்தில் நபி ﷺ அவர்களின் மீது ஸலவாத் ஓதுவது தொழுகையின் அடிப்படையில் உள்ளதா? இல்லையா என்பதில் அறிஞர்களுக்கு

மத்தியில் கருத்து வேறுபாடுகள் உள்ளது.

இமாம் அஹமத்ﷺ அவர்கள் தொடர்பாக வந்துள்ள ஒரு அறிவிப்பில், அத்தஹிய்யாத்தில் நபிﷺ அவர்களின் மீது ஸலவாத் ஓதுவது தொழுகையின் அடிப்படையாகும் என்று கூறியதாக வந்துள்ளது. இமாம் ஷாஃபிﷺ அவர்களும் இதே கருத்தை கொண்டதாக இமாம் நவவி ﷺ அவர்களும் கூறுகிறார்கள்.

இமாம் அபு ஹனீஃபாﷺ மற்றும் இமாம் மாலிக் ﷺ அவர்களும், இமாம் அஹமத் பின் ஹம்பல்ﷺ அவர்கள் தொடர்பான வந்துள்ள மற்றொரு அறிவிப்பில் அத்தஹிய்யாத்தில் நபிﷺ அவர்கள் மீது ஸலவாத் ஓதுவதை முஸ்தஹப் (விரும்பத்தக்கதாகும்) என கூறியுள்ளார்கள்.

இது தொடர்பான ஆதாரங்களை ஆய்வு செய்து பார்க்கும் போது, நபிﷺ அவர்கள் மீது ஸலவாத் ஓதுவது விரும்பத்தக்கதாகும் என்று கூறுபவர்களின் கருத்தே வலுவானதாக இருக்கிறது என்பதை அறிய முடிகிறது. எனவே ஒருவர் அத்தஹிய்யாத்தில் நபிﷺ அவர்கள் மீது ஸலவாத்தை ஓதிக் கொள்வது சிறந்ததாகும். ஒருவர் தொழுகையில் ஸலவாத்தை ஓதாமல் விட்டுவிட்டால் அந்த தொழுகை ஏற்றுக் கொள்ளப்படும். (அல்லாஹ் மிக அறிந்தவன்)

13 - ஸலாம் கூறுவது

அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மத்துல்லாஹ் என்று வலதுபக்கம், இடதுபக்கம் கூற வேண்டும்.

عَـنْ عَلِيٍّ رضى الله عنـه قَـالَ قَـالَ رَسُـولُ اللّٰهِ صلى الله عليه وسـلم
مِفْتَـاحُ الصَّلاَةِ الطُّهُـورُ وَتَحْرِيمُهَـا التَّكْبِيرُ وَتَحْلِيلُهَا التَّسْـلِيمُ

அல்லாஹ்வின் தூதர்ﷺ அவர்கள் கூறினார்கள், தூய்மை(உளூ) தொழுகையின் சாவியாகும், தக்பீர் தொழுகையில் மற்ற காரியங்கள் செய்வதை விட்டு தடுப்பதாகும், தஸ்லிம் தொழுகையை முடித்து மற்ற காரியங்களை செய்வதற்கு அனுமதியாகும்.

(அறிவிப்பாளர்: அலீ رضي الله عنه, நூல்: அபூ தாவூத் - 61)

தக்பீரே தஹ்ரீமா என்னும் முதல் தக்பீர் எவ்வாறு தொழுகையில் நுழைவதற்கு அடிப்படையாக இருக்கிறதோ, அவ்வாறே தொழுகையிலிருந்து வெளிவருவதற்கு ஸலாம் கூறுவதும் அடிப்படையாக இருக்கிறது. எனவே ஸலாம் கொடுப்பதற்கு முன்பே ஒருவர் தொழுகையிலிருந்து வெளியேறி விட்டால் அவருடைய தொழுகை ஏற்றுக் கொள்ளப்படாது.

14 - தொழுகையின் அடிப்படைகளை வரிசையாக செய்வது

நபிﷺ அவர்கள் பள்ளியில் நுழைந்தார்கள். அந்நேரத்தில் ஒரு மனிதரும் பள்ளியில் நுழைந்து தொழலானார். (தொழுது முடித்ததும்) நபிﷺ அவர்களுக்கு சலாம் கூறினார். நபிﷺ அவர்கள் அவருக்கு பதிலளித்துவிட்டு, நீங்கள் திரும்பி சென்று (மீண்டும்) தொழுவீராக! நீங்கள் தொழவே இல்லை என கூறினார்கள். இவ்வாறு மூன்று முறை நடந்தது. பிறகு அந்த மனிதர் சத்திய மார்க்கத்துடன் அனுப்பியவன் மீது

சத்தியமாக இதைவிட சிறந்த முறையில் தொழுவதை நான் அறியமாட்டேன் எனக்கு கற்று தருவீராக! என கேட்டார்.

நீங்கள் தொழுகைக்காக நின்றால் அல்லாஹு அக்பர் என்று கூறுவீராக! பிறகு அல்குர்ஆனில் தெரிந்தவற்றை ஓதுவீராக! பின்னர் நிதானமாக ருகூவு செய்வீராக! பின்னர் ருகூவிலிருந்து எழுந்து சரியாக நிற்பீராக! பின்னர் நிதானமாக ஸஜ்தா செய்வீராக! பின்னர் ஸஜ்தாவிலிருந்து எழுந்து நிதானமாக உட்கார்வீராக! இவ்வாறே உமது எல்லா தொழுகைகளிலும் செய்து வருவீராக! என நபி ﷺ அவர்கள் கூறினார்கள்.

(அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா ؓ, நூல்: புகாரி - 757)

இந்த ஹதீஸில் வந்துள்ள சும்ம (ثُـمَّ) என்ற அரபி வார்த்தை வரிசையமைப்பை குறிப்பிட பயன்படுத்தப்படும்.

நபி ﷺ அவர்கள் என்னை எவ்வாறு தொழகண்டீர்களோ, அவ்வாறே நீங்களும் தொழுங்கள் என்றார்கள். நபி ﷺ அவர்களின் தொழுகை முறை பற்றி வந்துள்ள அனைத்து ஹதீஸ்களிலும் வரிசையமைப்பு ஒரே மாதிரியாகவே வந்துள்ளது. எனவே தொழுகையை வரிசையமைப்பில் செய்வதும் முக்கியமான அடிப்படையாக இருக்கிறது.

இந்த பதினான்கு அடிப்படைகளில் ஏதேனும் ஒன்றைக் கூட வேண்டுமென்றே விட்டாலும் சரியே! அல்லது மறதியாக விட்டாலும் சரியே! அவரின் அந்த தொழுகை ஏற்கப்படாது.

ஒருவர் தனது தொழுகையில் அடிப்படைகளில்

ஏதேனும் ஒன்றை விட்டதை அடுத்து ரக்அத்தை ஆரம்பிப்பதற்கு முன்பே அறிந்துக் கொண்டால், அவர் மீண்டும் அந்த ஒரு ரக்அத்தை நிறைவேற்ற வேண்டும். அடுத்த ரக்அத்தை ஆரம்பித்தற்கு பிறகு அறிந்தால், தொழுகையின் அடிப்படைகள் விடுபட்ட அந்த ரக்அத்தை கணக்கில் கொள்ளாமல் புதிய ஒரு ரக்அத்தை அதற்கு பதிலாக தொழுது விட்டு கடைசியில் ஸஜ்தா ஸஹ்வு செய்து கொள்ள வேண்டும்.

ஒருவர் தொழுகையின் அடிப்படைகளில் ஒன்றை விட்டதை ஸலாம் கொடுத்ததற்கு பிறகு அறிகிறார். உதாரணத்திற்கு கடைசி தஷஹ்ஹுத் அல்லது ஸலாம் கொடுப்பதை விட்டிருந்தால், அவர் உடனே அந்த விடுபட்ட அடிப்படையை செய்து விட்டு ஸஜ்தா ஸஹ்வு செய்ய வேண்டும்.

ஒருவர் தொழுகையின் அடிப்படைகளில் ருகூவு, ஸஜ்தா விடுபட்டதை ஸலாம் கொடுத்ததற்கு பிறகு அறிந்தால், அவர் மீண்டும் அந்த அடிப்படையை செய்வதற்காக ஒரு ரக்அத் தொழுது விட்டு, ஸஜ்தா ஸஹ்வு செய்ய வேண்டும்.

ஒருவர் தொழுகையின் அடிப்படைகளில் ஒன்றை விட்டதை காலதாமதமாகவோ அல்லது உளூ முறிந்ததற்கு பிறகோ அறிந்தால், அவர் மீண்டும் அந்த தொழுகையை தொழ வேண்டும்.

(நூல்: அல்முலகஸுல் ஃபிக்ஹி பக்கம் - 131)

واجبات الصلاة

தொழுகையின் வாஜிபாத்துகள் (கடமைகள்)

அல்குர்ஆன் மற்றும் சுன்னாவிலிருந்து, தொழுகைக்கு எட்டு வாஜிபாத்துகள் இருப்பதை அறிய முடிகிறது.

1. இந்த வாஜிபாத்துகளிலிருந்து ஏதேனும் ஒன்றை கூட ஒருவர் வேண்டுமென்றெ விட்டு விட்டால் அவரது தொழுகை ஏற்கப்படாது.

2. ஒருவர் மறதி, அறியாமையினால் விட்டால் அவர் அதற்கு பகரமாக தொழுகையின் கடைசியில் ஸஜ்ததுத் ஸஹு கட்டாயமாக செய்ய வேண்டும். ஸஜ்தா ஸஹு செய்வதினால் அத்தொழுகை ஏற்றுக் கொள்ளப்படும்.

தொழுகையின் எட்டு வாஜிபாத்துகள்

1. தக்பீரத்துல் இஹ்ராம் தவிர்த்து கூறப்பட வேண்டிய அனைத்து தக்பீர்கள்.

عن ابن مسعود قال رأيت النبي صلى الله عليه وسلم يكبر في كل رفع وخفض وقيام وقعود

அப்துல்லாஹ் பின் மஸ்வூத் ؓ அவர்கள் கூறுகிறார்கள், நான் நபி ﷺ அவர்களை (தொழுகையின்) ஒவ்வொரு உயர்விலும், தாழ்விலும், நிலையிலும் மற்றும் அமர்விலும் தக்பீர் கூறுவதை பார்த்தேன்.

(நூல்: நஸாயி - 1149, அஹமத் - 3736)ஸஹீஹ்

நபிﷺ ஸல் அவர்களின் தொழுகை தொடர்பாக வந்துள்ள அனைத்து ஹதீஸ்களிலும், தொழுகையின் ஒவ்வொரு நிலைகளிலும் தக்பீரை தொடர்ந்து கூறியதாகவே வந்துள்ளது. எனவே அவசியமாக தக்பீரை நாம் கூற வேண்டும்.

இமாமுக்கு பின் நின்று தொழுபவர்களும் தக்பீரை கண்டிப்பாக கூற வேண்டும்.

عَنْ أَبِي سَعِيدٍ الْخُدْرِيِّ رَضِيَ اللهُ عَنْهُ قَالَ قَالَ رَسُولُ اللهِ صلى الله عليه وسلم إِذَا قَالَ الإِمَامُ اللهُ أَكْبَرُ فَقُولُوا اللهُ أَكْبَرُ

அல்லாஹ்வின் தூதர்ﷺ அவர்கள் கூறினார்கள், இமாம் அல்லாஹு அக்பர் என்று கூறினால், நீங்களும் அல்லாஹு அக்பர் என்று கூறுங்கள்.

(அறிவிப்பாளர்: அபு சயித் அல்குத்ரி ؓ, நூல்: இப்னு குதைமா, பைஹகி)

2. سُبْحَانَ رَبِّيَ الْعَظِيمِ என்று கூறுவது

عَنْ حُذَيْفَةَ أَنَّهُ صَلَّى مَعَ النَّبِيِّ صلى الله عليه وسلم فَكَانَ يَقُولُ فِي رُكُوعِهِ سُبْحَانَ رَبِّيَ الْعَظِيمِ. وَفِي سُجُودِهِ «سُبْحَانَ رَبِّيَ الأَعْلَى»

நான் நபிﷺ ஸல் அவர்களுடன் தொழுதேன். நபிﷺ அவர்கள் தனது ருகூஃவில் சுப்ஹான ரப்பில் அஜீம் என்றும், தனது ஸஜ்தாவில் சுப்ஹான ரப்பில் அஃலா என்று கூறுபவர்களாக இருந்தார்கள்.

(அறிவிப்பாளர்: ஹுதைஃபா ؓ, நூல்: அபூ தாவூத் - 871, திர்மிதி - 262)ஸஹீஹ்

சுப்ஹான ரப்பில் அஜீம் என்று ஒரு முறை சொல்வதே போதுமானதாகும். அதனை மூன்று முறை சொல்வது சுன்னத்தாகும். மூன்று முறைக்கும் அதிகமாக கூறுவதும் அனுமதிக்கப்பட்டதாகும்.

3. سَمِعَ اللّٰهُ لِمَنْ حَمِدَهُ கூறுதல்

இமாமாக நிற்பவர், தனியாக தொழுபவர் அவசியமாக சமியல்லாஹு லிமன் ஹமீத என்று கூறவேண்டும்.

عـن أَبِي هُرَيْـرَةَ يَقُـولُ كَانَ رَسُـولُ اللّٰهِ صـلى الله عليـه وسـلم إِذَا قَـامَ إِلَى الصَّـلاَةِ يُكَـبِّرُ حِـينَ يَقُـومُ ، ثُـمَّ يُكَـبِّرُ حِـينَ يَرْكَـعُ ، ثُـمَّ يَقُـولُ سَـمِعَ اللّٰهُ لِمَـنْ حَمِـدَهُ . حِـينَ يَرْفَـعُ صُلْبَـهُ مِـنَ الرَّكْعَـةِ

நபி ﷺ அவர்கள் தொழுகைக்காக நிற்கும்போது அல்லாஹு அக்பர் என்று கூறுவார்கள், ருகூஃ செய்யும்போது அல்லாஹு அக்பர் என்று கூறுவார்கள், பிறகு ருகுஉவிலிருந்து தனது முதுகை உயர்த்தும்போது سَـمِعَ اللّٰهُ لِمَـنْ حَمِـدَهُ என்று கூறுவார்கள்.

(அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா ؓ, நூல்: புகாரி - 789)

இமாமுக்கு பின் நின்று தொழுபவர்கள் சமியுல்லாஹு லிமன் ஹமித என்று கூறக் கூடாது.

4. رَبَّنَا لَكَ الْحَمْدُ என்று கூறுதல்

இமாமை பின்தொடர்ந்து தொழுபவர், ரப்பனா லகல் ஹம்த் என்று அவசியமாக கூற வேண்டும்.

إِنَّمَـا الإِمَـامُ أَوْ إِنَّمَـا جُعِـلَ الإِمَـامُ لِيُؤْتَـمَّ بِـهِ ، فَـإِذَا كَـبَّرَ فَكَبِّرُوا، وَإِذَا رَكَـعَ فَارْكَعُـوا ، وَإِذَا رَفَـعَ فَارْفَعُـوا ، وَإِذَا قَـالَ سَـمِعَ اللّٰهُ لِمَـنْ حَمِـدَهُ . فَقُولُـوا رَبَّنَـا لَـكَ الْحَمْدُ . وَإِذَا سَـجَدَ فَاسْـجُدُوا

இமாம் ஏற்படுத்தப்பட்டிருப்பது அவரை முழுமையாக பின்பற்றுவதற்காகவே, எனவே அவர் தக்பீர் கூறினால் நீங்களும் தக்பீர் கூறுங்கள். அவர் ருகுவு செய்தால் நீங்களும் ருகூஃ செய்யுங்கள், அவர் (ருகூஃவிலிருந்து) எழுந்திருந்தால் நீங்களும் எழுந்திருயுங்கள், அவர் سَمِعَ اللّٰهُ لِمَنْ حَمِدَهُ என்று கூறினால் நீங்கள் رَبَّنَا لَكَ الْحَمْدُ என்று கூறுங்கள், அவர் ஸஜ்தா செய்தால் நீங்களும் ஸஜ்தா செய்யுங்கள்.

(அறிவப்பாளர்: அனஸ் பின் மாலிக்ﷺ, நூல்: புகாரி - 733)

இமாமுக்கு பின் நின்று தொழுபவர்கள் மீது ரப்பனா லகல் ஹம்த் என்று கூறுவது கட்டாயமாகும். இமாம் மற்றும் தனியாக தொழுபவர் மீது இதனை கூறுவது கட்டாயமில்லை. எனினும் அதனை அவர்கள் கூறுவது சுன்னத்தாகும்.

5. سُبْحَانَ رَبِّيَ الأَعْلَى என்று கூறுவது

நான் நபிﷺ அவர்களுடன் தொழுதேன். நபிﷺ அவர்கள் தனது ருகூஃவில் சுப்ஹான ரப்பில் அஜீம் என்றும், தனது ஸஜ்தாவில் சுப்ஹான ரப்பில் அஃலா என்றும் கூறினார்கள்.

(அறிவிப்பாளர்: ஹுதைஃபாﷺ, நூல்: அபூ தாவூத் - 871, திர்மிதி - 262)ஸஹீஹ்

சுப்ஹான ரப்பில் அஃலா என்று ஒரு முறை சொல்வதே போதுமானதாகும். அதனை மூன்று முறை சொல்வது சுன்னத்தாகும். மூன்று முறைக்கும் அதிகமாக கூறுவது அனுமதிக்கப்பட்டதாகும்.

6. رَبِّ اغْفِرْ لِى என்று கூறுவது

وكان يقول بين السجدتين رب اغفر لي رب اغفر لي

நபிﷺ அவர்கள் இரு ஸஜ்தாவிற்கு மத்தியில் ரப்பி இக்ஃஃபிர்லி ரப்பி இக்ஃஃபிர்லி என்று கூறுவார்கள்.

(அறிவிப்பாளர்: ஹுதைஃஃபா ؓ, நூல்: நஸாயி - 1145)

இரு ஸஜ்தாவிற்கு மத்தியில் رَبِّ اغْفِـرْ لِى என்று ஒரு முறை கூறுவது வாஜிபாகும். அதற்கு மேல் மூன்று முறை கூறுவது சுன்னதாகும்.

வேறு தூஆக்கள் ஓதுவதும் கூடும்.

عَـنِ ابْـنِ عَبَّـاسٍ أَنَّ النَّـبِىَّ صـلى الله عليـه وسـلم كَانَ يَقُـولُ بَـيْنَ السَّـجْدَتَيْنِ اللَّهُـمَّ اغْفِـرْ لِى وَارْحَمْـنِى وَعَافِـنِى وَاهْـدِنِى وَارْزُقْنِى

(அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் பின் அப்பாஸ் ؓ, நூல்: அபூ தாவூத் - 850)

அல்லாஹும்மஃ ஃபிர்லி வர்ஹம்னி வஆஃபினி வஹ்தினி வர்ஜுக்னி இரு ஸஜ்தாகளுக்கு மத்தியில் இதனை நபிﷺ அவர்கள் ஓதி வந்தார்கள்.

7. முதல் தஷஹ்ஹுத்தில் அத்திஹிய்யாத் ஓதுவது

முதல் தஜஹ்ஹுத்தில் அத்திஹிய்யாத் ஓதுவது கடமையாகும் (வாஜிபாகும்). எனினும் ஒருவர் மறதியாக மூன்றாவது ரக்அத்திற்காக எழுந்து நின்று விட்டால் அவர் மீண்டும் முதல் தஷஹ்ஹுத்தில் உட்காருவதற்காக திரும்ப வேண்டியதில்லை. தொழுகையின் கடைசி அமர்வில் ஸலாமிற்கு முன்பு ஸஜ்ததுத் ஸஹூ செய்வதே போதுமானதாகும்.

عـن عَبْـدَ اللهِ ابْـنَ بُحَيْنَـةَ قـال أَنَّ النَّـبِىَّ صـلى الله عليـه وسـلم

صَلَّى بِهِمُ الظُّهْرَ فَقَامَ فِي الرَّكْعَتَيْنِ الأُولَيَيْنِ لَمْ يَجْلِسْ ، فَقَامَ النَّاسُ مَعَهُ حَتَّى إِذَا قَضَى الصَّلاَةَ ، وَانْتَظَرَ النَّاسُ تَسْلِيمَهُ، كَبَّرَ وَهْوَ جَالِسٌ ، فَسَجَدَ سَجْدَتَيْنِ قَبْلَ أَنْ يُسَلِّمَ ثُمَّ سَلَّمَ

நபிﷺ அவர்கள் ஸஹாபாக்களுக்கு லுஹர் தொழுகை நடத்தினார்கள். அதில் முதல் அமர்வில் அமராமல் எழுந்தார்கள். ஸஹாபாக்களும் நபிﷺ அவர்களுடன் எழுந்து நின்றார்கள். தொழுகை முடிந்து ஸஹாபாக்கள் ஸலாம் கூறுவதற்கு காத்திருக்கும் போது, நபிﷺ அவர்கள் ஸலாம் கூறுவதற்கு முன் அமர்ந்தவர்களாக தக்பீர் கூறி இரண்டு ஸஜ்தா செய்து விட்டு பிறகு ஸலாம் கூறினார்கள்.

(அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் பின் புஹைனா ؓ,
நூல்: புகாரி - 829, 830)

8. முதல் தஷஹ்ஹுத்தை ஓதுவதற்காக அமர்வது.

إِذَا قَعَدْتُمْ فِي كُلِّ رَكْعَتَيْنِ فَقُولُوا التَّحِيَّاتُ لِلَّهِ

நபிﷺ அவர்கள் கூறினார்கள், ஒவ்வொரு இரண்டு ரக்அத்திலும் நீங்கள் இருப்பில் உட்கார்ந்தால், அத்தஹிய்யாத் ஓதிக் கொள்ளுங்கள்.

(அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் பின் மஸ்வூத் ؓ,
நூல்: நஸாயி - 1163)ஸஹீஹ்

தொழுகையின் இந்த எட்டு வாஜிபாத்துகளையும் ஒருவர் மறதியாக விட்டு விட்டால், தொழுகையின் கடைசியில் ஸஜ்தா ஸஹு செய்ய வேண்டும். அவ்வாறு செய்வதினால் விடுபட்ட வாஜிபாத்துகளுக்கு அது பரிகாரமாக ஆகிவிடும்.

سنن الصلاة

தொழுகையின் சுன்னத்துகள்

1. கைகளை உயர்த்துவது

தக்பீரத்துல் இஹ்ராம் ருகூவிற்கு செல்லும் போது, ருகூவிலிருந்து எழும்போது, இரண்டு ரக்அத்திலிருந்து மூன்றாவது ரக்அத்திற்காக எழும்போது கைகளை தோள்புஜம் அல்லது இரு காதுகளின் ஓரங்களுக்குச் சமமாக உயர்த்துவது.

عَنْ سَالِمِ بْنِ عَبْدِ اللهِ عَنْ أَبِيهِ أَنَّ رَسُولَ اللهِ صلى الله عليه وسلم كَانَ يَرْفَعُ يَدَيْهِ حَذْوَ مَنْكِبَيْهِ إِذَا افْتَتَحَ الصَّلاَةَ، وَإِذَا كَبَّرَ لِلرُّكُوعِ، وَإِذَا رَفَعَ رَأْسَهُ مِنَ الرُّكُوعِ رَفَعَهُمَا كَذَلِكَ أَيْضًا وَقَالَ « سَمِعَ اللهُ لِمَنْ حَمِدَهُ، رَبَّنَا وَلَكَ الْحَمْدُ ». وَكَانَ لاَ يَفْعَلُ ذَلِكَ فِي السُّجُودِ

அப்துல்லாஹ் பின் உமர்ﷺ அவர்கள் கூறினார்கள், நபிﷺ அவர்கள் தொழுகையைத் ஆரம்பிக்கும் போதும் ருகூவுக்காகத் தக்பீர் கூறும் போதும் ருகூவிலிருந்து தலையை உயர்த்தும் போதும் தம் தோள்களுக்கு நேராகத் தம் கைகளை உயர்த்துவார்கள். ருகூவிலிருந்து உயரும்போது 'ஸமி அல்லாஹு லிமன் ஹமிதா, ரப்பனா வலகல் ஹம்து' என்று கூறுவார்கள். ஸஜ்தாவுக்குச் செல்லும்போது இவ்வாறு செய்ய மாட்டார்கள்.

(அறிவிப்பாளர்: சாலிம்ﷺ, நூல்: புகாரி - 735)

عَـنِ ابْـنِ عُمَـرَ عَـنِ النَّـبِيِّ صـلى الله عليـه وسـلم أَنَّـهُ كَانَ يَرْفَـعُ يَدَيْــهِ إِذَا دَخَــلَ فِي الصَّــلاَةِ وَإِذَا أَرَادَ أَنْ يَرْكَــعَ وَإِذَا رَفَــعَ رَأْسَــهُ مِـنَ الرُّكُـوعِ وَإِذَا قَـامَ مِـنَ الرَّكْعَتَـيْنِ يَرْفَـعُ يَدَيْـهِ كَذَلِـكَ حَـذْوَ الْمَنْكِبَـيْنِ. (سـنن النسـائي)

நபிஸல் அவர்கள் தொழுகையில் நுழையும் போதும் தம் கைகளை உயர்த்துவார்கள். (அவ்வாறே) ருகூஉ செய்யும் போதும், ருகூஉவிலிருந்து எழும்போதும், இரண்டாவது ரக்அத்திலிருந்து எழும்போதும் தம் கைகளை தோள் புஜத்திற்கு நேராக உயர்த்துவார்கள். **(அறிவிப்பாளர்: இப்னு உமர்ரலி, நூல்: நஸாயி - 1182) ஸஹீஹ்**

عَـنْ نَافِـعٍ أَنَّ ابْـنَ عُمَـرَ كَانَ إِذَا دَخَـلَ فِي الصَّـلاَةِ كَـبَّرَ وَرَفَـعَ يَدَيْـهِ ، وَإِذَا رَكَـعَ رَفَـعَ يَدَيْـهِ ، وَإِذَا قَـالَ سَـمِعَ اللَّهُ لِمَـنْ حَمِـدَهُ . رَفَـعَ يَدَيْـهِ ، وَإِذَا قَـامَ مِـنَ الرَّكْعَتَـيْنِ رَفَـعَ يَدَيْـهِ . وَرَفَـعَ ذَلِـكَ ابْـنُ عُمَـرَ إِلَى نَـبِيِّ اللَّهِ - صـلى الله عليــه وســلم

இப்னு உமர்ரலி தொழுகையைத் ஆரம்பிக்கும்போது தக்பீர் கூறித் தம் கைகளை உயர்த்துவார்கள். ருகூவுக்குச் செல்லும் போதும் தம் கைகளை உயர்த்துவார்கள். 'ஸமி அல்லாஹு லிமன் ஹமிதா' எனக் கூறும் போதும் தம் கைகளை உயர்த்துவார்கள். இரண்டாம் ரக்அத் முடித்து எழும்போதும் தம் கைகளை உயர்த்துவார்கள். நபிஸல் அவர்கள் இவ்வாறு செய்ததாகவும் குறிப்பிட்டார்கள்.

(அறிவிப்பாளர்: நாபிஃவுரஹ், நூல்: புகாரி - 739)

கைகளை உயர்த்தும் போது தோள்புஜத்திற்கு நேராக உயர்த்துதவற்கான ஆதாரத்தை மேலுள்ள ஹதீஸ்களில்

பார்த்தோம். அவ்வாறே காதுகளுக்கு நேராகவும் உயர்த்துவதற்கும் ஆதாரம் உள்ளது,

عَـنْ مَالِـكِ بْـنِ الْحُوَيْـرِثِ ، قَـالَ رَأَيْـتُ النَّـبِيَّ صـلى الله عليـه وسـلم يَرْفَـعُ يَدَيْـهِ إِذَا كَـبَّرَ وَإِذَا رَكَـعَ وَإِذَا رَفَـعَ رَأْسَـهُ مِـنَ الرُّكُـوعِ حَـتَّى يَبْلُـغَ بِهِمَـا فُـرُوعَ أُذُنَيْـهِ.

நபி ﷺ அவர்கள் தம் இரு கைகளை (ஆரம்ப) தக்பீர் கூறும்போதும், ருகூஉ செய்யும் போதும், ருகூஉவிலிருந்து எழும்போதும் காதுகளின் சோனை வரை உயர்த்தியதை நான் பார்த்தேன்.

(அறிவிப்பாளர்: மாலிக் பின் அல்ஹுவைரிஸ் ؓ, நூல்: அபூ தாவூத் - 745) ஸஹீஹ்

குறிப்பு: காதுகள் வரை கைகளை உயர்த்தும் போது காதுகளை தொடாமல் அதற்கு நேராக உயர்த்த வேண்டும்.

2. கைகளை நெஞ்சின் மீது வைப்பது

عَـنْ وَائِـلِ بْـنِ حُجْـرٍ قَـالَ قُلْـتُ لأَنْظُـرَنَّ إِلَى صَـلاَةِ رَسُـولِ اللَّهِ صـلى الله عليـه وسـلم كَيْـفَ يُصَـلِّى قَـالَ فَقَـامَ رَسُـولُ اللَّهِ صـلى الله عليـه وسـلم فَاسْـتَقْبَلَ الْقِبْلَـةَ فَكَـبَّرَ فَرَفَـعَ يَدَيْـهِ حَـتَّى حَاذَتَـا أُذُنَيْـهِ ثُـمَّ أَخَـذَ شِـمَالَهُ بِيَمِينِـهِ فَلَمَّـا أَرَادَ أَنْ يَرْكَـعَ رَفَعَهُمَا مِثْـلَ ذَلِـكَ ثُـمَّ وَضَـعَ يَدَيْـهِ عَلَى رُكْبَتَيْـهِ فَلَمَّـا رَفَـعَ رَأْسَـهُ مِـنَ الرُّكُـوعِ رَفَعَهُمَـا مِثْـلَ ذَلِـكَ

நபி ﷺ அவர்களின் தொழுகை எவ்வாறு இருந்தது என்பதினை நான் உங்களுக்கு நிச்சயமாக காட்ட

விருக்கிறேன். அல்லாஹ்வின் தூதர்ﷺ அவர்கள் கிப்லாவை முன்னோக்கி அல்லாஹு அக்பர் என்று கூறிய பிறகு தனது இருகைகளையும் காதுகளின் ஓரங்கள் வரை உயர்த்தினார்கள். பிறகு தனது இடதுகையை வலதுகையை கொண்டு பிடித்தார்கள். ருகூவு செய்ய நாடிய போது தனது இரு கைகளையும் உயர்த்தினார்கள். பிறகு தனது இரு மூட்டுகளின் மீது தனது இருகைகளை வைத்தார்கள். ருகூவிலிருந்து எழ விரும்பும் போதும் இவ்வாறே தனது இருகைகளை உயர்த்தினார்கள்.

(அறிவிப்பாளர்: வாயில் பின் ஹஜர்ؓ, நூல்: அபூ தாவூத் - 726, ஸஹீஹ்)

عن وائل بن حجر قال : صليت مع رسول الله صلى الله عليه و سلم ووضع يده اليمنى على يده اليسرى على صدره

அல்லாஹ்வின் தூதர்ﷺ அவர்களுடன் நான் தொழுதேன். அவர்கள் தன்னுடைய வலது கையை, இடது கையின் மீது வைத்தார்கள். (அதனை)தனது நெஞ்சின் மீது வைத்தார்கள்.

(அறிவிப்பாளர்: வாயில் பின் ஹஜர்ؓ, நூல்: இப்னு குஜைமா - 479) ஹசன்

இந்த ஹதீஸில் வருகின்ற முஹம்மல் என்ற அறிவிப்பாளர் குறைவான நினைவாற்றல் கொண்டவராக இருப்பதினால், இதனுடைய அறிவிப்பாளர் தொடர் பலவீனமானதாகும்.

عَنْ قَبِيصَةَ بْنِ هُلْبٍ ، عَنْ أَبِيهِ ، قَالَ : رَأَيْتُ النَّبِيَّ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ يَنْصَرِفُ عَنْ يَمِينِهِ وَعَنْ يَسَارِهِ ، وَرَأَيْتُهُ ، قَالَ،

يَضَعُ هَـذِهِ عَلَى صَـدْرِهِ وَصَـفَّ يَحْـيَ

குபைஸாவின் தந்தை அறிவிக்கிறார்கள், நான் நபிﷺ அவர்களை தனது நெஞ்சின் மீது கை வைத்தவர்களாக பார்த்தேன்.

(அறிவிப்பாளர்: குபைஸா பின் ஹுலப்,நூல்: அஹமத் 22017)

இந்த ஹதீஸின் அறிவிப்பாளர் தொடர் பலவீனமானதாகும். ஏனெனில் இதில் குபைஸா என்பவர் இடம் பெற்றுள்ளார். இவர் யாரென அறியப்படாத அறிவிப்பாளர் ஆவார். எனினும் இந்த ஹதீஸின் மத்தன் (அறிவிக்கப்படுகின்ற செய்தி) ஸஹீயாகும்.

عَـنْ طَـاوُسٍ قَـالَ كَانَ رَسُـولُ اللَّهِ صـلى الله عليـه وسـلم يَضَـعُ يَـدَهُ الْيُمْـنَى عَلَى يَـدِهِ الْيُـسْرَى ثُـمَّ يَشُـدُّ بَيْنَهُمَـا عَلَـى صَـدْرِهِ وَهُـوَ فِى الصَّـلاَةِ.

அல்லாஹ்வின் தூதர்ﷺ அவர்கள் தொழுகையில் தனது வலது கையை தனது இடது கையின் மீது வைத்தார்கள். பிறகு அவை இரண்டையும் இணைத்தவாறு தனது நெஞ்சின் மீது வைத்தார்கள்.

(அறிவிப்பாளர்: தாவூஸ்ﷺ, நூல்: அபூ தாவூத்)

இந்த ஹதீஸில் வருகின்ற அறிவிப்பாளர்கள் அனைவரும் நம்பகமானவர்களாக இருந்தாலும், இது முர்ஸல் என்ற தரத்தில் உள்ளதாகும். ஹதீஸ் கலையில் முர்ஸல் என்பது பலவீனமான ஹதீஸ்களின் வகைகளில் ஒன்றாகும்.

நெஞ்சின் மீது கை வைப்பது தொடர்பாக மேலே நாம் பார்த்த மூன்று ஹதீஸ்களும் பலவீனமானதாக

இருந்தாலும், அந்த பலவீனங்கள் (ضعف منجبر) நீங்கக் கூடிய வகையிலான குறைவான பலவீனமாகவே உள்ளன. இவ்வாறான குறைவான பலவீனங்களை கொண்ட அறவிப்புகளில் ஒன்று மற்றொரு அறிவிப்புடன் சேரும் போது பலமான நிலையை அடைந்து விடுகிறது என்பது அனைத்து ஹதீஸ்கலை அறிஞர்களிடத்திலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட விஷயமாக இருக்கிறது. அத்தகைய நிலையில் வரும் ஹதீஸ்களை ஆதாரப்பூர்வமான ஹதீஸ்களாக தான் பார்க்கப்படும்.

நெஞ்சின் மீது கை வைக்கின்ற ஹதீஸ்களின் அறிவிப்பாளர் தொடரில் சில குறைகள் இருந்தாலும், அனைத்து தொடர்களையும் இணைக்கும் போது ஆதாரமாக ஏற்றுக் கொள்ள தக்க நிலையை அது அடைந்து விடுகிறது. இதனையே ஹதீஸ்கலையில் ஹசன் என்ற தரத்தில் குறிப்பிடுவர்.

நெஞ்சின் மீது கைகளை வைத்து தொழுவதே சரியான சுன்னாவாகும். இந்த சுன்னாவிற்கு மாற்றமாக கைகளை தொப்புளின் கீழ் வைத்து தொழுவது தொடர்பான ஹதீஸ் மிக பலவீனமானதாகும் என்பதினை ஹதீஸ்கலை அறிஞர்கள் அனைவரும் ஒப்புக் கொண்டுள்ளனர். இமாம் நவவிﷺ அவர்கள், இமாம் ஜைலஹிﷺ அவர்களும் கைகளை தொப்புளின் கீழ் வைக்கின்ற ஹதீஸை ளயீஃஃப்பானது என கூறியுள்ளார்கள்.

இமாம் இஸ்ஹாக் பின் ராஹ்வை தொழுகையில் நெஞ்சின் மீது கை வைத்து தொழுபவர்களாக இருந்தார்கள்.

அப்துல்லாஹ் பின் அஹமத் கூறுகிறார்கள், எனது தந்தை இமாம் அஹமத் பின் ஹம்பல்ﷺ அவர்கள் தொழுகையில் தன்னுடைய கைகளை தொப்புளுக்கு மேல் வைத்து தொழுபவர்களாக இருந்தார்கள்.

(ஸிஃபத்து ஸலாத்தின் நபி, ஷெய்க் அல்பானிﷺ)

3. பார்வைகள் ஸஜ்தா செய்கின்ற இடத்தை நோக்குதல்

عـن أَنَـسَ بْـنَ مَالِـكٍ قَـالَ قَـالَ النَّـبِيُّ صـلى الله عليـه وسـلم مَـا بَـالُ أَقْـوَامٍ يَرْفَعُـونَ أَبْصَارَهُـمْ إِلَى السَّـمَاءِ فِى صَلاَتِهِـمْ. فَاشْـتَدَّ قَـوْلُهُ فِى ذَلِـكَ حَـتَّى قَـالَ لَيَنْتَهُـنَّ عَـنْ ذَلِـكَ أَوْ لَتُخْطَفَـنَّ أَبْصَارُهُمْ

நபிﷺ அவர்கள் கூறினார்கள்: "தொழும்போது தங்கள் பார்வைகளை வானத்தில் உயர்த்துகிறவர்களுக்கு என்ன நேர்ந்துவிட்டது? இதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். இல்லையெனில் அவர்களின் பார்வை பறிக்கப்பட்டுவிடும்."

(அறிவிப்பாளர்: அனஸ் பின் மாலிக்ﷺ, நூல்: புகாரி - 750)

தொழுகையில் திரும்பிப் பார்ப்பது பற்றி நபிﷺ அவர்களிடம் கேட்டேன். "ஓர் அடியானுடைய தொழுகையை ஷைத்தான் அதன் மூலம் பறித்துச் செல்கிறான்" என்று இறைத்தூதர்ﷺ அவர்கள் கூறினார்கள். **(அறிவிப்பாளர்: ஆயிஷாﷺ, நூல்: புகாரி-751)**

நபிﷺ அவர்கள் தொழும் போது தன்னுடைய தலையை தாழ்த்தி கொள்வார்கள். மேலும் தன்னுடைய பார்வையை தரையை நோக்கி செலுத்துவார்கள்.

(பைஹகி)

தொழுகையில் நிற்பவர் தன்னுடைய பார்வையை ஸஜ்தா செய்கின்ற இடத்தை நோக்கி செலுத்துவது சுன்னா ஆகும். சிலர் தொழும் போது தங்களுடைய கண்களை மூடிக் கொள்கின்றனர். இவ்வாறு செய்வது சுன்னாவிற்கு மாற்றமானதாகும்.

4. நிற்கும்போது தனது இருகால்களை ஒரேடியாக விலக்காமலும், இணைக்காமலும் நடுநிலையாக நிற்க வேண்டும்.

5. தொழுகையின் ஆரம்ப துவா

عَــن أَبِي هُرَيْــرَةَ قَــالَ كَانَ رَسُــولُ اللهِ صــلى الله عليــه وســلم يَسْــكُتُ بَــيْنَ التَّكْبِــيرِ وَبَــيْنَ الْقِــرَاءَةِ إِسْــكَاتَةً قَــالَ أَحْسِــبُهُ قَــالَ هُنَيَّــةً فَقُلْــتُ بِــأَبِي وَأُمِّي يَــا رَسُــولَ اللهِ ، إِسْــكَاتُكَ بَــيْنَ التَّكْبِــيرِ وَالْقِــرَاءَةِ مَــا تَقُــولُ قَــالَ أَقُــولُ اللَّهُــمَّ بَاعِــدْ بَيْــنِي وَبَــيْنَ خَطَايَــاىَ كَمَــا بَاعَــدْتَ بَــيْنَ الْمَــشْرِقِ وَالْمَغْــرِبِ ، اللَّهُــمَّ نَقِّــنِي مِــنَ الْخَطَايَــا كَمَــا يُنَــقَّى الثَّــوْبُ الأَبْيَــضُ مِــنَ الدَّنَــسِ ، اللَّهُــمَّ اغْسِــلْ خَطَايَــاىَ بِالْمَــاءِ وَالثَّلْــجِ وَالْــبَرَدِ

நபி ﷺ அவர்கள் தக்பீருக்கும் கிராஅத்துக்கும் இடையே சற்று நேரம் மவுனமாக இருப்பார்கள். இறைத்தூதர் அவர்களே! என் தந்தை தாய் தங்களுக்கு அர்ப்பணம். தக்பீருக்கும் கிராஅத்துக்குமிடையே நீங்கள் மவுனமாக இருக்கும் சமயத்தில் என்ன கூறுவீர்கள்? என்று கேட்டேன். 'இறைவா! கிழக்குக்கும் மேற்குக்குமிடையே நீ ஏற்படுத்திய தூரத்தைப் போல், எனக்கும் தவறுகளுக்குமிடையே நீ தூரத்தை

ஏற்படுத்துவாயாக! இறைவா! வெண்மையான ஆடை அழுக்கிலிருந்து தூய்மைப் படுத்தப் படுவது போல் என் தவறுகளைவிட்டும் என்னைத் தூய்மைப் படுத்துவாயாக! தண்ணீராலும் பனிக்கட்டியாலும் ஆலங்கட்டியாலும் என் தவறுகளைக் கழுவுவாயாக! என்று நான் கூறுவேன்' என்றார்கள்

(அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா ﵁, நூல்: புகாரி - 744)

தொழுகையின் ஆரம்பத்தில் கீழே வந்துள்ள துவாக்களையும் ஓதலாம்.

- **وَجَّهْتُ وَجْهِيَ لِلَّذِى فَطَرَ السَّمَوَاتِ وَالأَرْضَ حَنِيفًا وَمَا أَنَا مِنَ الْمُشْرِكِينَ إِنَّ صَلاَتِى وَنُسُكِى وَمَحْيَاىَ وَمَمَاتِى لِلّٰهِ رَبِّ الْعَالَمِينَ لاَ شَرِيكَ لَهُ وَبِذَلِكَ أُمِرْتُ وَأَنَا مِنَ الْمُسْلِمِينَ اللَّهُمَّ أَنْتَ الْمَلِكُ لاَ إِلَهَ إِلاَّ أَنْتَ. أَنْتَ رَبِّى وَأَنَا عَبْدُكَ ظَلَمْتُ نَفْسِى وَاعْتَرَفْتُ بِذَنْبِى فَاغْفِرْ لِى ذُنُوبِى جَمِيعًا إِنَّهُ لاَ يَغْفِرُ الذُّنُوبَ إِلاَّ أَنْتَ وَاهْدِنِى لأَحْسَنِ الأَخْلاَقِ لاَ يَهْدِى لأَحْسَنِهَا إِلاَّ أَنْتَ وَاصْرِفْ عَنِّى سَيِّئَهَا لاَ يَصْرِفُ عَنِّى سَيِّئَهَا إِلاَّ أَنْتَ لَبَّيْكَ وَسَعْدَيْكَ وَالْخَيْرُ كُلُّهُ فِى يَدَيْكَ وَالشَّرُّ لَيْسَ إِلَيْكَ أَنَا بِكَ وَإِلَيْكَ تَبَارَكْتَ وَتَعَالَيْتَ أَسْتَغْفِرُكَ وَأَتُوبُ إِلَيْكَ (مسلم)**
- **سُبْحَانَكَ اللَّهُمَّ وَبِحَمْدِكَ وَتَبَارَكَ اسْمُكَ وَتَعَالَى جَدُّكَ وَلاَ إِلَهَ غَيْرُكَ (الترمذي)**

6. அவூதுபில்லாஹ் ஓதுவது

அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள், தொழுகையின்

ஆரம்பத்தில் ஓதக்கூடிய துவாக்களை ஓதியதற்கு பிறகு

أَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطَانِ الرَّجِيمِ مِنْ هَمْزِهِ ، وَنَفْخِهِ ، وَنَفْثِهِ

“அவூதுபில்லாஹி மினஷ் ஷைத்தானிர் ரஜீம் மின் ஹம்ஜிஹி வநஃப்கிஹி வநஃப்ஸியி” இந்த வார்த்தைகளை கூறுவார்கள். **(நூல்: இப்னு மாஜா - 807)**

أَعُوذُ بِاللّٰهِ السَّمِيعِ الْعَلِيمِ مِنَ الشَّيْطَانِ الرَّجِيمِ مِنْ هَمْزِهِ وَنَفْخِهِ وَنَفْثِهِ

“அவூதுபில்லாஹிஸ் ஸமியுல் அலீம் மினஷ் ஷைத்தானிர் ரஜீம் மின் ஹம்ஜிஹி வநஃப்கிஹி வநஃப்ஸியி” இந்த வார்த்தைகளையும் கூறியுள்ளார்கள்.

(நூல்: அபூ தாவூத் - 775, திர்மிதி - 243)

இந்த இரண்டு வார்த்தைகளில் ஏதேனும் ஒன்றை ஓதிக் கொள்வது சுன்னாவாகும்.

7 . பிஸ்மில்லா கூறுவது

அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள், அபூபக்ர் ؓ, உமர் ؓ மற்றும் உஸ்மான் ؓ ஆகியோருடன் (அவர்களுக்குப் பின்னால் நின்று) நான் தொழுதிருக்கிறேன். அவர்களில் யாருமே பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம் என்பதை (சப்தமாக) ஓதியதை நான் கேட்டதில்லை.

(அறிவிப்பாளர்: அனஸ் பின் மாலிக் ؓ, நூல்: முஸ்லிம் - 667)

தொழுகையில் பிஸ்மில்லாஹிர் ரஹ்மான் னிர்ரஹீம் என்பதை மனதிற்குள் ஓதிக் கொள்வதே மிக சரியான வழிமுறையாகும்.

8. அல்குர்ஆன் ஓதுதலை நிறுத்தி நிதானமாக ஓதுவது

عَـنْ أُمِّ سَـلَمَةَ قَالَـتْ كَانَ رَسُـولُ اللّٰهِ صلى الله عليـه وسـلم يُقَطِّـعُ قِرَاءَتَـهُ يَقُـولُ (الْحَمْـدُ لِلّٰهِ رَبِّ الْعَالَمِـينَ) ثُـمَّ يَقِـفُ (الرَّحْمَـنِ الرَّحِيـمِ) ثُـمَّ يَقِـفُ وَكَانَ يَقْرَؤُهَـا (مَلِـكِ يَـوْمِ الدِّيـنِ)

அல்லாஹ்வின் தூதர்ﷺ அவர்கள், தன்னுடைய ஓதுதலை நிறுத்தி நிறுத்தி ஓதக் கூடியவர்களாக இருந்தார்கள். அல்ஹம்து லில்லாஹி ரப்பில் ஆலமீன் என்று கூறிவிட்டு நிறுத்துவார்கள். பிறகு அர்ரஹ்மானிர் ரஹீம் என்று கூறிவிட்டு நிறுத்துவார்கள். பிறகு மாலிக்கி யவ்முத்தீன் என்று கூறுவார்கள்.

(அறிவிப்பாளர்: உம்மு சல்மா(ரழி), நூல்: திர்மிதி - 3177) ஸஹீஹ்

9. சப்தமாக ஆமின் சொல்வது

عَـنْ أَبِي هُرَيْـرَةَ أَنَّ النَّـبِيَّ صـلى الله عليـه وسـلم قَـالَ إِذَا أَمَّـنَ الإِمَـامُ فَأَمِّنُـوا فَإِنَّـهُ مَـنْ وَافَـقَ تَأْمِينُـهُ تَأْمِـينَ الْمَلاَئِكَـةِ غُفِـرَ لَهُ مَـا تَقَـدَّمَ مِـنْ ذَنْبِـهِ

நபிﷺ அவர்கள் கூறினார்கள்:

“இமாம் ஆமின் கூறும்போது நீங்களும் ஆமின் கூறுங்கள்! ஒருவர் கூறும் ஆமீன் வானவர்கள் கூறும் ஆமினுடன் ஒத்து அமையுமாயின் அவரின் முன்சென்ற பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன.

(அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா(ரழி), நூல்: புகாரி - 780)

இமாமுக்கு பின் நின்று தொழுபவர்கள் இமாம்

ஆமின் கூறியதற்கு பிறகு ஆமின் கூறுவதே சரியான சுன்னாவாகும்.

10. சூரத்துல் ஃபாத்திஹாவோடு மற்ற சூராக்களை ஓதுவது

عـن أَنَـسَ بْـنَ مَالِـكٍ يَقُـولُ مَـا صَلَّيْـتُ وَرَاءَ إِمَـامٍ قَـطُّ أَخَـفَّ صَـلاَةً وَلاَ أَتَـمَّ مِـنَ النَّـبِيِّ صـلى الله عليـه وسـلم ، وَإِنْ كَانَ لَيَسْـمَعُ بُـكَاءَ الصَّـبِيِّ فَيُخَفِّـفُ مَخَافَـةَ أَنْ تُفْـتَنَ أُمُّـهُ

அனஸ் இப்னு மாலிக்ؓ அறிவித்தார்:

நபிﷺ அவர்களை விடத்தொழுகையைச் சுருக்கமாகவும் (அதே சமயம்) பூரணமாகவும் தொழுகை நடத்தக் கூடிய வேறு எந்த இமாமின் பின்னாலும் நான் தொழுதது கிடையாது. ஒரு குழந்தையின் அழுகுரலை அவர்கள் கேட்க நேர்ந்தால், அக்குழந்தையின் தாயாருக்குச் சஞ்சலம் ஏற்பட்டு விடுமோ என்ற அச்சத்தில் தொழுகையைச் சுருக்கமாகவே முடித்துக் கொள்வார்கள்.

(அறிவிப்பாளர்: அனஸ் பின் மாலிக்ؓ, நூல்: புகாரி - 708)

இந்த ஹதீஸிலிருந்து நபிﷺ அவர்கள் சூரத்துல் பாத்திஹாவிற்கு பிறகு துணை சூராக்களை ஓதியதை அறிய முடிகிறது.

11. ருகூவை செய்வதற்கான முறை

இரண்டு கைகளையும் மூட்டுக் கால்களின் மீது வைக்க வேண்டும்.

ருகூஉ செய்யும்போது தலையை உயர்த்தாமலும், தொங்கவிடாமலும் வைத்திருக்க வேண்டும். மேலும்

முதுகை நேராக வளைக்க வேண்டும்.

நான் சில நபித் தோழர்களுடன் அமர்ந்திருந்தேன். நபிﷺ அவர்களின் தொழுகையைப் பற்றி அப்போது பேசிக் கொண்டோம். அங்கிருந்த அபூ ஹுமைத் அஸ்ஸாயிதீ ؓ "நபிﷺ அவர்களின் தொழுகை பற்றி உங்களில் நான் மிகவும் அறிந்திருக்கிறேன். நபிﷺ அவர்கள் ருகூவு செய்யும்போது இரண்டு கைகளையும் மூட்டுக் கால்களின் மீது படியச் செய்வார்கள். பின்னர் தம் முதுகை (வளைவு இன்றி) நேராக்குவார்கள்.

(அறிவிப்பாளர்: முஹம்மத் பின் அம்ர் ؓ, நூல்: புகாரி - 828)

நபிﷺ அவர்கள் ருகூஉ செய்யும் போது தனது விரல்களுக்கு மத்தியில் இடைவெளியை ஏற்படுத்துவார்கள். **(நூல்: ஹாகிம், பைஹகி)**

ருகூவில் ஒரு முறை தஸ்பிஹ் (சுப்ஹான ரப்பில் அஜீம்) சொல்வது கடமையாக இருக்கிறது. ஒன்றுக்கும் அதிகமான எண்ணிக்கையில் தஸ்பிஹ் சொல்வது சுன்னத்தாக உள்ளது.

12. ஸஜ்தாவிற்கு செல்வதற்கான முறை

ஸஜ்தாவிற்கு செல்லும்போது கைகளை முதலில் பூமியில் வைக்க வேண்டும். பிறகு கால் முட்டுகளை வைக்க வேண்டும்.

عَـنْ أَبِى هُرَيْـرَةَ قَـالَ قَـالَ رَسُـولُ اللهِ صـلى الله عليـه وسـلم إِذَا سَـجَدَ أَحَدُكُـمْ فَـلاَ يَـبْرُكْ كَمَـا يَـبْرُكُ الْبَعِـيرُ وَلْيَضَـعْ يَدَيْـهِ قَبْـلَ رُكْبَتَيْـهِ

அல்லாஹ்வின் தூதர்ﷺ அவர்கள் கூறினார்கள்,

உங்களில் ஒருவர் ஸஜ்தா செய்தால் ஒட்டகம் அமர்வதை போன்று அமர வேண்டாம். எனவே (ஸஜ்தா செய்பவர்) தன்னுடைய மூட்டுகளை வைப்பதற்கு முன்பு கைகளை வைத்துக் கொள்ளட்டும்.

(அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா ﵁, நூல்: அபூ தாவூத் - 840)

நபி ﷺ அவர்கள் ஸஜ்தா செய்கின்ற போது தங்களின் இரு கைகளையும் மூட்டுகளை வைப்பதற்கு முன்பு பூமியில் வைப்பார்கள். **(இப்னு குஜைமா)**

இப்னு உமர் ﵁ அவர்கள் (சஜ்தாவிற்குச் செல்லும் போது) முழங்கால்களைத் தரையில் வைப்பதற்கு முன் தம் (உள்ளங்)கைகளை வைப்பார்கள் என நாஃபிஉ ﵀ அவர்கள் கூறியுள்ளார்கள்.

இமாம் புகாரி ﵀ அவர்கள் இதனை ஸஹீஹுல் புகாரியில் பாடத்தலைப்பின் கீழ் கொண்டு வந்துள்ளார்கள்.

ஸஜ்தாவிற்கு செல்லும் போது முதலில் மூட்டுகளை வைப்பது தொடர்பாக வந்துள்ள ஹதீஸ்கள் பலவீனமானவையாக உள்ளது. எனவே முதலில் கைகளை வைப்பது தான் சரியான சுன்னாவாகும்.

13. ஸஜ்தா செய்யும் முறை

அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் தன்னுடைய இரு உள்ளங்கைகள் மீது ஊன்றியவாறு, இரு கைகளையும் விரித்துவாறு ஸஜ்தா செய்வார்கள். **(நூல்: அபூ தாவூத்)**

அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் ஸஜ்தாவில் முழங்கைகளை (தரையை தொடாமல்)தரையிலிருந்து உயர்த்தி அக்கைகளை விலாப் பகுதிகளிலிருந்து

தூரமாக்கி கொள்வார்கள். **(நூல்: புகாரி - 828)**

அல்லாஹ்வின் தூதர்ﷺ அவர்கள் தன்னுடைய இரு கைகளின் விரல்களையும் (ஸஜ்தாவில்) இணைத்து கொள்வார்கள். **(நூல்: இப்னு குஜைமா)**

சில நேரங்களில் தன்னுடைய இருகைகளையும் (ஸஜ்தாவில்) தோள் புஜத்திற்கு நேராக வைப்பார்கள். சில நேரங்களில் காதுகளுக்கு நேராகவும் வைப்பார்கள். **(நூல்: அபூ தாவூத், திர்மிதி)**

நபிﷺ அவர்கள் ஸஜ்தாவில் தன்னுடைய மூட்டுகளையும், கால் விரல்களையும் பூமியில் ஊன்றுவார்கள். தன்னுடைய கால்களின் விரல்களை கிப்லாவை நோக்கியவாறு வைப்பார்கள். **(நூல்: பைஹகி)**

நபிﷺ அவர்கள் ஸஜ்தாவில் தன்னுடைய இரு கால்களையும் ஒன்று சேர்ப்பார்கள். **(நூல்: இப்னு குஜைமா)**

ஸஜ்தா செய்கின்றவர்கள் தன்னுடைய உள்ளங்கைககளை தவிர்த்து கைகளின் மற்ற பகுதிகளை பூமியில் படாதவாறு ஸஜ்தா செய்ய வேண்டும். இருகைளும் தொடையோடு இணைந்தவாறு இல்லாமல் விலகி வைத்தவாறு ஸஜ்தா செய்ய வேண்டும்.

ஸஜ்தாவில் ஒரு முறை சுப்ஹான ரப்பில் அஃலா என்ற திக்ரை கூறுவது வாஜிபாகும். ஒன்றுக்கு மேற்பட்ட முறைகள் கூறுவது சுன்னாவாகும்.

14. முதல் ஸஜ்தாவிலிருந்து எழுந்து அமர்வது

நபிﷺ அவர்கள் இரு ஸஜ்தாவிற்கு மத்தியில் அமரும் போது தனது இடது காலை விரித்து அதன்

மீது உட்காருவார்கள். **(நூல்: அபூ தாவூத்)**

நபிஸல் அவர்கள் இரு ஸஜ்தாவிற்கு மத்தியில் அமரும் போது வலதுகாலை நட்டு வைத்து விரல்களை கிப்லாவை நோக்கி வைத்து இடது காலின் மீது அமர்வார்கள். **(நூல்: நஸாயி - 1166)**

இரண்டு ஸஜ்தாவிற்கு மத்தியில் சில நேரங்களில் குதிகால்களின் மீது அமரலாம். இதுவும் அனுமதிக்கப்பட்ட முறையாகும்.

நாங்கள் இப்னு அப்பாஸ்ரலி அவர்களிடம் (இரு சஜ்தாக்களுக்கு நடுவே) பாதங்கள் மீது (அவற்றை நட்டுவைத்து) அமர்வது பற்றிக் கேட்டோம். அவர்கள், “அது நபிவழிதான்” என்று சொன்னார்கள். நாங்கள் “இவ்வாறு அமர்வது அந்த மனிதரின் அசட்டையான (பொடுபோக்கான) செயல் என்றே நாங்கள் கருதுகிறோம்” என்றோம். அதற்கு இப்னு அப்பாஸ்ரலி அவர்கள், “இல்லை; அது உங்கள் நபியின் வழிமுறைதான்” என்று சொன்னார்கள்.

(அறிவிப்பாளர்: தாவூஸ் பின் கைஸ்ரலி, நூல்: முஸ்லிம் - 934)

குதிகால்களின் மீது அமர்வது இரண்டு ஸஜ்தாவிற்கு மத்தியில் அமரும் போது மட்டுமே செய்ய முடியும். இரண்டாவது ரக்அத்திற்கு எழுந்திருக்கும் போது, அத்திஹிய்யாத் இருப்பில் அமரும் போது இவ்வாறு செய்ய கூடாது.

குதிகால்களின் மீது அமராமல் அவற்றை நட்டு வைத்து பூமியில் அமருவது தடுக்க பட்ட முறையாகும்.

இரு ஸஜ்தாவிற்கு மத்தியில் ரப்பிக்ஃபிர்லி ஒரு முறை சொல்வது வாஜிபாகும். அதற்கு மேலாக கூறுவது

சுன்னாவாகும்.

15. ஸஜ்தாவிலிருந்து இரண்டாவது ரக்அத்திற்காக எழுவது.

ஸஜ்தாவிலிருந்து இரண்டாவது ரக்அத்திற்காக எழும்போது அமர்ந்த பிறகு தான் எழ வேண்டும்.

எங்களுடைய பள்ளி வாசலுக்கு மாலிக் இப்னு ஹுவைரிஸ்ரழி வந்து "இப்போது நான் தொழ விரும்பாவிட்டாலும் நபிஸல் அவர்களை எவ்வாறு தொழக் கண்டேனோ அவ்வாறு உங்களுக்கு நான் தொழுகை நடத்துகிறேன்" என்று கூறிவிட்டு எங்களுக்குத் தொழுகை நடத்தினார்கள்.

நான் அபூ கிலாபாவிடம் அவரின் தொழுகை எவ்வாறு இருந்தது என்று கேட்டேன். அதற்கு அபூ கிலாபா "(அம்ர் இப்னு ஸலமா என்ற) இந்த முதியவர் தொழுதது போன்று இருந்தது" எனக் கூறினார்கள். அந்த முதியவர் தக்பீரைப் பூரணமாகக் கூறுவார். முதல் ரக்அத்திலிருந்து இரண்டாவது ரக்அத்திற்காக ஸுஜூதிலிருந்து எழும்போது இருப்பில் அமர்ந்து பின்னர் நிலைக்கு வருவார் என அய்யூப் கூறினார்.

(அறிவிப்பாளர்: அபூ கிலாபாரழி, நூல்: புகாரி - 824)

நபிஸல் அவர்கள் ஸஜ்தாவிலிருந்து எழுந்து வலது காலை நட்டு வைத்து விரல்களை கிப்லாவை நோக்கி வைத்து இடது காலை விரித்து வைத்து அதன் மீது அமர்ந்தார்கள். முட்டுக்கள் அனைத்தும் அதனுடைய இடத்திற்கு திரும்பும் வரை அமருவார்கள்.

(நூல்: அபூ தாவூத்)

16. ஸஜ்தாவிலிருந்து இரண்டாவது ரக்அத்திற்காக எழும்போது கைகளை பூமியில் மாவு பிசைவதை போன்று பூமியில் ஊன்றி கால் மூட்டுகளை உயர்த்தி எழுந்திருக்க வேண்டும்.

அப்துல்லாஹ் பின் உமர்ﷺ அவர்களை, தொழுகையில் (ஸஜ்தாவிலிருந்து) எழும்போது மாவு பிசைவதை போன்று கைகளை பூமியில் ஊன்றியவாறு எழுவதை நான் பார்த்தேன். அபு அப்துர் ரஹ்மானே இது என்ன? என்று கேட்ட போது, அல்லாஹ்வின் தூதர்ﷺ அவர்கள் தொழுகையில் (ஸஜ்தாவிலிருந்து எழும்போது) மாவு பிசைவதை போன்று கைகளை பூமியில் ஊன்றி எழுவதை நான் பார்த்தேன் என்றார்கள்.

(அறிவிப்பாளர்: அஜ்ரக் பின் கைஸ்ﷺ, நூல்: தப்ரானி- 902, அபு இஸ்ஹாக் அல்ஹரபி தனது கரிபுல் ஹதீஸிலும் பதிவு செய்துள்ளார்கள்.)

17. முதல் தஷஹ்ஹுதில் அமர்வது

முதல் தஷஹ்ஹுதில் உட்காரும் போது இடது காலை விரித்து, வலது காலை நட்டு வைத்து அமர வேண்டும்.

அல்லாஹ்வின் தூதர்ﷺ அவர்கள் ஒவ்வோர் இரண்டு ரக்அத்திலும் அத்தஹிய்யாத் ஓதுவார்கள். (அந்த அமர்வில்) இடது காலை விரித்துவைத்து, வலது காலை நட்டுவைப்பார்கள். மேலும், ஷைத்தான் உட்காருவதைப் போன்று (கால்களை நட்டுவைத்து, புட்டத்தைத் தரையில் படியவைத்து) உட்கார வேண்டாம் என்றும், மிருகங்கள் உட்காருவதைப் போன்று முழங்கைகளைத் தரையில் பரப்பி வைத்து உட்கார வேண்டாம் என்றும்

தடை விதித்துவந்தார்கள். அவர்கள் சலாம் கூறியே தொழுகையை முடிப்பார்கள்.

(அறிவிப்பாளர்: ஆயிஷா, நூல்: முஸ்லிம் - 857)

முதல் அத்திஹிய்யாத்தில் இடது காலை விரித்து, அவற்றின் மீது அமர்ந்தவாறு வலது காலை நட்டு வைத்து மட்டுமே அமர வேண்டும். இதுவல்லாத முறையில் குதிகால்களின் மீது அமர்வதோ அல்லது கால்களை நட்டு வைத்து புட்டத்தை தரையில் படியுமாறு அமர்வதோ சுன்னாவிற்கு எதிரானதாகும்.

18. விரல்களை அசைப்பது

அல்லாஹ்வின் தூதர்ﷺ அவர்கள் தொழும்போது (அத்தஹிய்யாத்) அமர்வில் பிரார்த்திக்க உட்கார்ந்தால் தமது வலக் கையை வலது தொடையின் மீதும், இடக் கையை இடது தொடையின் மீதும் வைத்துச் சுட்டு விரலால் சைகை செய்வார்கள். தமது பெருவிரலி(ன் நுனியி)னை நடு விரலின் (நுனி)மீது வைப்பார்கள். இடது உள்ளங்கையைத் தமது (இடக் கால்) மூட்டின் மீது வைத்து வளையமிட்டுப் பிடித்திருப்பார்கள்.

(அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் பின் அஸ்ஸுபைர், நூல்: முஸ்லிம் - 1015)

இப்னு உமர் அவர்கள் கூறியதாவது:

அல்லாஹ்வின் தூதர்ﷺ அவர்கள் அத்தஹிய்யாத் அமர்வில் உட்கார்ந்தால் தமது இடக் கையை இடது கால் மூட்டின் மீதும் வலக் கையை வலது கால் மூட்டின் மீதும் வைப்பார்கள். (அரபியர் வழக்கில்) ஐம்பத்து மூன்று என எண்ணுவதைப் போன்று (சிறு விரல், மோதிர விரல், நடு

விரல் ஆகிய மூன்று விரல்களையும் உள்ளங்கையுடன் சேர்த்து) சுட்டு விரலால் சைகை செய்வார்கள்.

(அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் பின் உமர்ரழி, நூல்: முஸ்லிம் - 1017)

நபிஸல் அவர்கள் தனது கட்டை விரலினை நடுவிரலுடன் சேர்த்து வளையம் போல் அமைத்து கொள்வார்கள். **(நூல்: அபூ தாவூத்)**

மேலுள்ள ஹதீஸ்களிலிருந்து அத்திஹிய்யாத்தில் சுட்டு விரலை தவிர்த்து மற்ற விரல்களை இரண்டு முறையில் வைப்பதை அறிய முடிகிறது.

1. சிறு விரல், மோதிர விரல், நடு விரல் ஆகிய மூன்று விரல்களையும் மடக்கி உள்ளங்கையுடன் சேர்த்தும், கட்டை விரலின் நுனியை நடு விரலின் நுனியின் மீது வைத்து சுட்டு விரலால் சைகை செய்வது.
2. கட்டை விரலையும், நடு விரலையும் வளையம் போல் அமைத்து சுட்டு விரலால் சைகை செய்வது.

மேலுள்ள ஹதீஸ்களிலிருந்து நபிஸல் அவர்கள், அத்தஹிய்யாத்தில் இஷாரா செய்தார்கள் என்று வந்துள்ளது. நபிஸல் அவர்கள் இஷாராவை எவ்வாறு செய்வார்கள் என்ற விளக்கத்தினை கீழுள்ள ஹதீஸ்கள் விவரிக்கின்றன,

ثُمَّ رَفَعَ إِصْبَعَهُ فَرَأَيْتُهُ يُحَرِّكُهَا يَدْعُو بِهَا

நபிஸல் அவர்கள் தனது சுட்டு விரலை உயர்த்தினார்கள். துவா செய்தவர்களாக அதனை அசைத்துக் கொண்டிருப்பதை நான் பார்த்தேன்.

(அறிவிப்பாளர்: வாயில் பின் ஹஜர், நூல்: நஸாயி - 897, இப்னு குதைமா - 714, இப்னு ஹிப்பான் - 1860) ஸஹீஹ்

இந்த ஹதீஸிலிருந்து அத்தஹிய்யாத்தில் விரலை தொடர்ந்து அசைக்க வேண்டும் என்பதை அறியலாம். ஏனெனில் அத்தஹிய்யாத்தில் துவா என்பது ஆரம்பித்திலிருந்து முடியும் வரை உள்ளது.

عَـنْ نَافِـعٍ قَـالَ : كَانَ عَبْـدُ اللهِ بْـنُ عُمَـرَ إِذَا جَلَـسَ فِي الصَّـلاَةِ وَضَـعَ يَدَيْـهِ عَلَى رُكْبَتَيْـهِ ، وَأَشَـارَ بِإِصْبَعِـهِ ، وَأَتْبَعَهَـا بَـصَرَهُ ، ثُـمَّ قَـالَ : قَـالَ رَسُـولُ اللهِ صَـلَّى اللهُ عَلَيْـهِ وَسَـلَّمَ : لَـهِيَ أَشَـدُّ عَلَى الشَّـيْطَانِ مِـنَ الْحَدِيـدِ يَعْـنِي السَّـبَّابَةَ

அப்துல்லாஹ் பின் உமர்ؓ அவர்கள் தொழுகையின் இருப்பில் அமர்ந்தால் தன்னுடைய (வலது) கையை தொடையின் மீது வைத்து தன்னுடைய சுட்டு விரலால் சைகை செய்து, அதன் மீது தன்னுயை பார்வையை தொடர்வார்கள். பிறகு அப்துல்லாஹ் பின் உமர் ؓ அவர்கள் கூறினார்கள், அல்லாஹ்வின் தூதர்ﷺ அவர்கள் கூறினார்கள், விரலை சைகை செய்வது இரும்பை விட ஷைத்தானுக்கு கடுமையானதாக இருக்கும் என்று கூறினார்கள்.

(அறிவிப்பாளர்: நாஃபிﷺ, நூல்: அஹமத் - 6000 ஹசன்)

عَـنْ سَـعْدِ بْـنِ أَبِي وَقَّـاصٍ ، قَـالَ : مَـرَّ عَلَيَّ النَّـبِيُّ صـلى الله عليـه وسـلم وَأَنَـا أَدْعُـو بِأُصْبُـعَيَّ ، فَقَـالَ : أَحِّـدْ أَحِّـدْ ، وَأَشَـارَ بِالسَّـبَّابَةِ

நான் அத்தஹிய்யாத்தில் எனது இரு விரல்களையும் உயர்த்தி துவா செய்து கொண்டிருந்த போது நபிﷺ அவர்கள் என்னை கடந்து சென்றார்கள். ஒரு விரலை

மட்டும் உயர்த்துங்கள் என்று கூறி சுட்டு விரலை நோக்கி இஷாரா செய்தார்கள்.

(அறிவிப்பாளர்: சஅத் பின் வக்காஸ்﵁, நூல்: அபூ தாவூத் - 1499)

இமாம் அஹமத் பின் ஹம்பல்﵀ அவர்கள் அத்தஹிய்யாத்தில் விரலை சைகை செய்ய வேண்டும் என்ற கருத்தில் இருந்தார்கள். மூன்று இமாம்களான இமாம் அபூ ஹனீஃபா﵀, இமாம் மாலிக்﵀, இமாம் அஹமத் பின் ஹம்பல்﵀ ஆகியவர்களும் அத்தஹிய்யாத்தில் விரலை சைகை செய்ய வேண்டும் என்ற கருத்திலேயே இருந்தார்கள்.

ஷெய்க் அல்பானி ﵀ அவர்கள் ஸிஃபத் ஸலாத்தின் நபி என்ற நூலில் கூறுகிறார்கள், இமாம் அபூ ஹனீஃபா ﵀ அவர்கள் தொடர்பாக இமாமின் மாணவரான இமாம் யூசுஃப்﵀ அவர்கள் தனது அல்அமாலி என்ற நூலில், இமாம் அபூ ஹனீஃபா﵀ அவர்கள் அத்தஹிய்யாத்தில் விரலை சைகை செய்ய வேண்டும் என்ற கருத்தில் இருந்தார்கள் என பதிவு செய்துள்ளார்கள். இமாம் முல்லா அலி அல்காரி﵀ அவர்கள் தனது தஜ்யினுல் இபாரா லிதஹ்சினில் இஷாரா என்ற நூலில் இமாம் அபூ ஹனீஃபா﵀ அவர்களின் விரலை சைகை செய்வது தொடர்பான கருத்தை பதிவு செய்து விட்டு அதற்கு எதிராக இருக்கின்ற கருத்துகளுக்கு மறுப்பளித்துள்ளார்கள். எனவே ஹனஃபி மத்ஹபை சார்ந்தவர்கள் அத்தஹிய்யாத்தல் விரலை அசைப்பதை வெறுக்கத்தக்கதாக கருதுவது சுன்னா மற்றும், அவர்களின் மத்ஹப் இமாம்களின் கருத்திற்கும் எதிரானதாகும்.

19. அத்தஹிய்யாத் இருப்பில் அமரும் முறை

நபிﷺ அவர்கள் இரண்டாவது ரக்அத்தில் வலது காலை நட்டு வைத்து இடது காலின் மீது அமர்வார்கள். மூன்று மற்றும் நான்கு ரக்அத்துகளை கொண்ட தொழுகைகளின் கடைசி ரக்அத்தில் இடது காலை வலது புறமாகக் கொண்டு வந்து வலது காலை நட்டு வைத்துத் தம் இருப்பிடம் தரையில் படுமாறு அமர்வார்கள்.

فَـإِذَا جَلَـسَ فِي الرَّكْعَتَـيْنِ جَلَـسَ عَلَى رِجْلِـهِ الْيُـسْرَى وَنَصَـبَ الْيُمْـنَى ، وَإِذَا جَلَـسَ فِي الرَّكْعَـةِ الآخِـرَةِ قَـدَّمَ رِجْلَـهُ الْيُـسْرَى وَنَصَـبَ الأُخْـرَى وَقَعَـدَ عَلَى مَقْعَدَتِـهِ .

முஹம்மத் இப்னு அம்ர் கூறினார்:

நான் சில நபித் தோழர்களுடன் அமர்ந்திருந்தேன். நபிﷺ அவர்களின் தொழுகையைப் பற்றி அப்போது பேசிக் கொண்டோம். அங்கிருந்த அபூ ஹுமைத் அஸ்ஸாயிதீ ﵁ "நபிﷺ அவர்களின் தொழுகை பற்றி உங்களில் நான் மிகவும் அறிந்திருக்கிறேன். நபிﷺ அவர்கள் தக்பீர் கூறும்போது தம் இரண்டு கைகளையும் தம் தோள் புஜங்களுக்கு நேராக உயர்த்துவார்கள். ருகூவு செய்யும்போது இரண்டு கைகளையும் மூட்டுக் கால்களின் மீது படியச் செய்வார்கள். பின்னர் தம் முதுகை (வளைவு இன்றி) நேராக்குவார்கள். (ருகூவிலிருந்து) தலையை உயர்த்தும்போது ஒவ்வொரு மூட்டும் அதனுடைய இடத்துக்கு வரும் அளவுக்கு நிமிர்வார்கள். அவர்கள் ஸஜ்தாச் செய்யும்போது தம் கைகளை விரிக்காமலும் மூடிக் கொள்ளாமலும் வைப்பார்கள். தம்

கால் விரல்களின் முனைகளைக் கிப்லாவை நோக்கச் செய்வார்கள். இரண்டாவது ரக்அத்தில் அமரும்போது இடது கால் மீது அமர்ந்து வலது காலை நாட்டி வைப்பார்கள். கடைசி ரக்அத்தில் உட்காரும்போது இடது காலை (வலப் புறமாகக்) கொண்டு வந்து, வலது காலை நாட்டி வைத்துத் தம் இருப்பிடம் தரையில் படியுமாறு உட்கார்வார்கள்" எனக் கூறினார்கள். **(புகாரி - 828)**

இமாம் இப்னு குதாமா ﷺ அவர்கள் தனது அல்முக்னி (1/318) நூலில் கூறுகிறார்கள், தொழுகையில் இரண்டாவது தஷஹ்ஹுத் இருந்தால் மட்டுமே தவர்ருக் என்னும் இடது காலை வலது புறமாகக் கொண்டு வந்து வலது காலை நட்டு வைத்துத் தம் இருப்பிடம் தரையில் படுமாறு அமர வேண்டும். அபூ ஹுமைத் ﷺ அவர்களின் ஹதீஸ் இதற்கு சான்றாக உள்ளது.

ஆயிஷா ﷺ அவர்கள் அறிவிக்கிறார்கள்:

அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் இரண்டாவது ரக்அத்தில் அமரும் போது இஃப்திராஷ் என்னும் இடது கால் மீது அமர்ந்து வலது காலை நட்டு வைத்து அமர்வார்கள். **(நூல்: முஸ்லிம்)**

வாயில் பின் ஹஜர் ﷺ அவர்கள் அறிவிக்கின்ற ஹதீஸிலும் இரண்டாவது ரக்அத்தில் இடது கால் மீது அமர்ந்து வலது காலை நாட்டி வைத்து அமர்வார்கள் என வந்துள்ளது. இந்த அறிவிப்புகளில் இரண்டாவது ரக்அத்தில் ஸலாம் சொல்லி தொழுகை முடிப்பார்கள் என்றோ ஸலாம் சொல்ல மாட்டார்கள் என்றோ வித்தியாசப்படுத்தாமல் பொதுவாகவே வந்துள்ளது.

(நூல்: அல்முக்னி 1/318)

எனவே ஃபஜ்ர் போன்ற இரண்டு ரக்அத்துகள் கொண்ட தொழுகைகளில் இஃப்திராஸ் என்னும் இடது கால் மீது அமர்ந்து வலது காலை நாட்டி வைத்து அமர வேண்டும்.

லுஹர், அஸர், மக்ரிப், இஷா போன்ற தொழுகைகளில் முதல் அமர்வில் இடது கால் மீது அமர்ந்து வலது காலை நாட்டி வைத்தும், இரண்டாவது அமர்வில் இடது காலை வலது புறமாகக் கொண்டு வந்து வலது காலை நாட்டி வைத்துத் தம் இருப்பிடம் தரையில் படுமாறு அமர வேண்டும். இந்த கருத்தினையே ஹம்பலி மத்ஹபை சார்ந்தவர்களும் சரி காண்கின்றார்கள்.

20. அத்தஹிய்யாத்தில் கூடுதலாக ஓதப்படுகின்ற துஆக்கள்.

1 - اللَّهُمَّ إِنِّى أَعُوذُ بِكَ مِنْ عَذَابِ الْقَبْرِ وَأَعُوذُ بِكَ مِنْ فِتْنَةِ الْمَسِيحِ الدَّجَّالِ ، وَأَعُوذُ بِكَ مِنْ فِتْنَةِ الْمَحْيَا وَفِتْنَةِ الْمَمَاتِ، اللَّهُمَّ إِنِّى أَعُوذُ بِكَ مِنَ الْمَأْثَمِ وَالْمَغْرَمِ

2 - اللَّهُمَّ إِنِّى ظَلَمْتُ نَفْسِى ظُلْمًا كَثِيرًا وَلاَ يَغْفِرُ الذُّنُوبَ إِلاَّ أَنْتَ ، فَاغْفِرْ لِى مَغْفِرَةً مِنْ عِنْدِكَ ، وَارْحَمْنِى إِنَّكَ أَنْتَ الْغَفُورُ الرَّحِيمُ

இந்த துஆக்களை கடைசி அத்தஹிய்யாத்தில் ஓதுவது விரும்பத்தக்க சுன்னாவாகும்.

மேலே நாம் பார்த்த தொழுகையின் சுன்னத்துகளை

ஒருவர் சரியாக செய்யும் போது முழுமையான நன்மைகளை பெற்றுக் கொள்வார். ஒருவர் இந்த சுன்னத்தான காரியங்களை செய்ய தவறினால் அவர் மீது எவ்வித குற்றமும் இல்லை. அவருடைய தொழுகை ஏற்றுக் கொள்ளப்படும். எனினும் அந்த சுன்னத்தான நன்மைகளை அவர் இழந்து விடுவார்.

مبطلات الصلاة

தொழுகையை முறிக்கும் காரியங்கள்

1. உளூவை முறிக்கும் காரியங்கள் அனைத்தும் தொழுகையையும் முறித்து விடும். ஏனெனில் உளூ தொழுகைக்கான நிபந்தனையாக இருக்கிறது. எனவே உளூ முறிந்து விட்டால் தொழுகையும் முறிந்து விடும்.

2. தொழுகையில் வேண்டுமென்று பேசுவது

عَـنْ زَيْـدِ بْـنِ أَرْقَـمَ قَـالَ كُنَّـا نَتَكَلَّـمُ فِى الصَّـلاَةِ يُكَلِّـمُ الرَّجُـلُ صَاحِبَــهُ وَهُــوَ إِلَى جَنْبِــهِ فِى الصَّــلاَةِ حَــتَّى نَزَلَــتْ (وَقُومُــوا لِلّٰهِ قَانِتِــينَ) فَأُمِرْنَـا بِالسُّــكُوتِ وَنُهِينَـا عَــنِ الْـكَلاَمِ

ஜைத் பின் அர்கம் ﷺ அவர்கள் அறிவிக்கிறார்கள், நாங்கள் தொழுகையில் பேசுபவர்களாக இருந்து வந்தோம். தொழுகையில் அல்லாஹ்வுக்கு பணிந்தவர்களாக நில்லுங்கள் (2:238) என்ற வசனம் இறங்காத வரையில் தொழுகையில் ஒருவர் தன் அருகில் இருப்பவருடன் பேசுவார். பிறகு நாங்கள் அமைதியாக இருக்க பணிக்க பட்டோம், தொழுகையில் பேசுவதை விட்டும் தடுக்கப்பட்டோம். **(முஸ்லிம் - 937)**

தொழுகையில் நிற்கும் போது பணிவுடன் நிற்பது அவசியமாகும். தொழுகையில் பேசுவது பணிவுடன் நிற்பதற்கு எதிரான செயலாகும். ஆகவேதான் ஸஹாபாக்கள் இவ்வசனம் இறங்கியதற்கு பிறகு

தொழுகையில் பேசுவதிலிருந்து தடுக்கப்பட்டார்கள்.

3. சப்தமாக சிரிப்பது

﴿قَدْ أَفْلَحَ الْمُؤْمِنُونَ الَّذِينَ هُمْ فِي صَلَاتِهِمْ خَاشِعُونَ﴾

விசுவாசிகள் திட்டமாக வெற்றியடைந்துவிட்டனர். அவர்கள் எத்தகையோரென்றால் தங்கள் தொழுகையில் மிக்க உள்ளச்சம் உடையவர்கள். (23:1,2)

தொழுகையை உள்ளச்சத்தோடு மட்டுமே தொழ வேண்டும். அதில் சிரிப்பது தொழுகையை கேவலப்படுத்தும் காரியமாக இருப்பதினால் தொழுகை முறிந்து விடும்.

ஷைக்குல் இஸ்லாம் இப்னு தைமிய்யா ﷺ அவர்கள் கூறுகிறார்கள், நிச்சயமாக தொழுகையில் சப்தமாக சிரிப்பது தொழுகையின் நிலைக்கும், அதில் இருக்க வேண்டிய அவசியமான உள்ளச்சத்திற்கும் எதிரானதாக இருக்கிறது. மேலும் தொழுகையில் சிரிப்பது அத்தொழுகையை சிறுமைப்படுத்துவதாகவும், அதில் விளையாடுவதாகவும் உள்ளது. இது தொழுகையை நிலைநாட்டுவதற்கான அடிப்படை நோக்கத்திற்கே எதிரானதாக இருக்கிறது. எனவேதான் தொழுகையில் சப்தமாக சிரிப்பதின் மூலம் தொழுகை முறிந்து விடும்.

(நூல்: மஜ்மூயுல் ஃபதாவா - 22/617)

குறிப்பு: தொழுகையில் சப்தமாக சிரித்தால் தொழுகை மட்டுமே முறியும். அதனால் உளூ முறியாது.

ஒருவர் தொழுகையில் (சப்தமிட்டுச்) சிரித்தால் அவர் அந்தத் தொழுகையைத்தான் திரும்பத் தொழவேண்டும்

(உளூ முறிவதில்லை. ஆகவே) திரும்பவும் உளூ செய்ய வேண்டியதில்லை என ஜாபிர் பின் அப்தில்லாஹ்ﷺ அவர்கள் கூறியுள்ளார்கள். இமாம் புகாரிﷺ அவர்கள் இதனை முஅல்லாக பதிவு செய்துள்ளார்கள்.

4. பருவ வயதையடைந்த பெண், கழுதை மற்றும் கருப்பு நாய் தொழுகையாளிக்கும் அவர் ஸஜ்தா செய்கின்ற இடத்திற்கு நெருக்கமாக கடந்தால் அவரின் தொழுகை முறிந்துவிடும்.

عَنْ أَبِى ذَرٍّ قَالَ قَالَ رَسُولُ اللَّهِ صلى الله عليه وسلم « إِذَا قَامَ أَحَدُكُمْ يُصَلِّى فَإِنَّهُ يَسْتُرُهُ إِذَا كَانَ بَيْنَ يَدَيْهِ مِثْلُ آخِرَةِ الرَّحْلِ فَإِذَا لَمْ يَكُنْ بَيْنَ يَدَيْهِ مِثْلُ آخِرَةِ الرَّحْلِ فَإِنَّهُ يَقْطَعُ صَلاَتَهُ الْحِمَارُ وَالْمَرْأَةُ وَالْكَلْبُ الأَسْوَدُ ». قُلْتُ يَا أَبَا ذَرٍّ مَا بَالُ الْكَلْبِ الأَسْوَدِ مِنَ الْكَلْبِ الأَحْمَرِ مِنَ الْكَلْبِ الأَصْفَرِ قَالَ يَا ابْنَ أَخِى سَأَلْتُ رَسُولَ اللَّهِ صلى الله عليه وسلم كَمَا سَأَلْتَنِى فَقَالَ « الْكَلْبُ الأَسْوَدُ شَيْطَانٌ »

அபூதர் அல்கிஃபாரீﷺ அவர்கள் உங்களில் ஒருவர் (திறந்தவெளியில்) தொழ நிற்கும் போது தமக்கு முன்னால் வாகன (ஒட்டக)த்தின் (சேணத்திலுள்ள) சாய்வுக்கட்டை போன்றது இருந்தால் அதுவே அவருக்குத் தடுப்பாக அமைந்துவிடும். சாய்வுக்கட்டை போன்றது இல்லாவிட்டால் கழுதை, பெண் மற்றும் கறுப்புநாய் ஆகியன அவரது (கவனத்தை ஈர்த்து) தொழுகையை முறித்துவிடும் என அல்லாஹ்வின் தூதர்ﷺ அவர்கள் கூறினார்கள் என்றார்கள். உடனே

நான், அபூதர் (ரலி) அவர்களே! சிவப்பு நிற நாய், மஞ்சள் நிற நாய் ஆகியவற்றை விட்டுவிட்டுக் கறுப்பு நிற நாயை மட்டுமே குறிப்பிடக் காரணம் என்ன? என்று கேட்டேன். அதற்கு அவர்கள், என் சகோதரரின் புதல்வரே! நீங்கள் என்னிடம் கேட்டதைப் போன்றே நான் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம் கேட்டேன். அதற்கு அவர்கள் கறுப்பு நாய் ஷைத்தான் ஆகும் என்று கூறினார்கள் என்றார்கள்.

(அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் பின் அஸ்ஸாமித் (ரலி), நூல்: முஸ்லிம் - 882)

5. தொழுகையில் மறைக்க வேண்டிய பகுதிகளை வேண்டுமென்றே விலக்குதல்

தொழுகையில் அவசியமாக மறைக்க வேண்டிய பகுதிகள் ஆண்களுக்கும், பெண்களுக்கும் என்ன என்பதினை தொழுகையின் நிபந்தனைகள் என்ற தலைப்பில் பார்த்துள்ளோம். அவ்வாறு அவசியமாக மறைக்க வேண்டிய பகுதிகளை வேண்டுமென்றே வெளிப்படுத்தினால் அவரின் தொழுகை முறிந்து விடும். உதாரணத்திற்கு இன்று அதிகமாக பேண்ட் அணியும் வாலிபர்கள் அதனை கீழே அதிகமாக இறக்கிதான் அணிகின்றனர். ஸஜ்தா செய்கின்ற போது அவர்களின் பின் பகுதி அப்பட்டமாக தெரிகிறது. இந்த செயலினால் தொழுகை முறிந்து விடும்.

6. தொழுகையில் கிப்லாவின் திசையை விட்டு திரும்பிவிடுதல்.

தொழுகையில் கிப்லாவை முன்னோக்குவது தொழுகையின் நிபந்தனையாகும். எனவே ஒருவர்

வேண்டுமென்றே கிப்லா திசையை விட்டு வேறு திசையை நோக்கினால் தொழுகை முறிந்து விடும்.

7. தொழுகையின் அடிப்படைகள், நிபந்தனைகளில் ஏதேனும் ஒன்றை வேண்டு மென்றே விட்டுவிட்டாலும் தொழுகை முறிந்து விடும்.

8. தொழுகையின் அடிப்படைகளில் ஏதேனும் ஒன்றை வரிசையமைப்பிற்கு மாற்றமாக செய்வதினாலும் தொழுகை முறிந்து விடும். உதாரணத்திற்கு ருகூஉ செய்வதற்கு முன்பே ஸஜ்தா செய்தால் தொழுகை முறிந்து விடும்.

மேலுள்ள காரியங்களில் ஏதேனும் ஒன்று நிகழ்வதைக் கொண்டு அத்தொழுகை முறிந்து விடும்.

ما يُكره فى الصلاة

தொழுகையில் வெறுக்கத்தக்க காரியங்கள்

1. தொழுகையில் அவசியமில்லாமல் தனது முகத்தையும், உடலையும் குறைந்த அளவில் திருப்புவது.

عَـنْ عَائِشَـةَ قَالَـتْ سَـأَلْتُ رَسُـولَ اللهِ عَـنْ الاِلْتِفَـاتِ فِى الصَّـلاَةِ فَقَـالَ هُـوَ اخْتِـلاَسٌ يَخْتَلِسُـهُ الشَّـيْطَانُ مِـنْ صَـلاَةِ الْعَبْـدِ

ஆயிஷா ﵂ அறிவித்தார்கள்.

தொழுகையில் திரும்பிப் பார்ப்பது பற்றி நபி ﷺ அவர்களிடம் கேட்டேன். "ஓர் அடியானுடைய தொழுகையை ஷைத்தான் அதன் மூலம் பறித்துச் செல்கிறான்" என்று இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள். **(நூல்: புகாரி)**

தொழுகையில் அதிகப்படியான அளவில் கிப்லாவை விட்டு ஒருவர் திரும்பினால், அவரின் தொழுகை முறிந்து விடும்.

2. தொழுகையில் வானத்தை நோக்கி பார்வையை உயர்த்துவது.

عـن أَنَـسَ بْـنَ مَالِـكٍ قَـالَ قَـالَ النَّـبِيُّ صـلى الله عليـه وسـلم «مَـا بَـالُ أَقْـوَامٍ يَرْفَعُـونَ أَبْصَارَهُـمْ إِلَى السَّـمَاءِ فِى صَلاَتِهِـمْ. فَاشْـتَدَّ قَـوْلُهُ فِى ذَلِـكَ حَـتَّى قَـالَ لَيَنْتَهُـنَّ عَـنْ ذَلِـكَ أَوْ لَتُخْطَفَـنَّ أَبْصَارُهُمْ

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்: "தொழும்போது

தங்கள் பார்வைகளை வானத்தில் உயர்த்துகிறவர்களுக்கு என்ன நேர்ந்துவிட்டது? இதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். இல்லையெனில் அவர்களின் பார்வை பறிக்கப்பட்டுவிடும்."

(அறிவிப்பாளர்: அனஸ் பின் மாலிக்ؓ, நூல்: புகாரி - 750)

3. தொழுகையின் நிலையில் நிற்கும் போது கண்களை மூடிக் கொள்வது.

நெருப்பை வணங்கும் மஜூஸிகள் வணக்கத்தின் போது தங்களின் கண்களை மூடிக் கொள்வார்கள். எனவே தொழுகையில் கண்களை மூடிக் கொள்பவர் மஜூஸிகளுக்கு ஒப்பாக நடந்து கொள்பவர் ஆவார்.

4. ஸஜ்தாவில் இருகைகளையும் முன்நோக்கி விரித்துக் கொள்வது.

عَـنْ أَنَـسِ بْـنِ مَالِكٍ عَنِ النَّبِيِّ صلى الله عليه وسـلم قَـالَ اعْتَدِلُوا فِي السُّـجُودِ وَلاَ يَبْسُـطْ أَحَدُكُمْ ذِرَاعَيْهِ انْبِسَاطَ الْكَلْبِ

நபிﷺ அவர்கள் அறிவித்தார்கள்:

"ஸஜ்தாவில் நடுநிலையைக் கடைபிடியுங்கள். உங்களில் எவரும் நாய் விரிப்பதைப் போல் கைகளை விரிக்கக் கூடாது."

(அறிவிப்பாளர்: அனஸ் பின் மாலிக்ؓ, நூல்: புகாரி - 822)

5. தொழுகையில் வீணான காரியங்களை தொடர்ந்து செய்வது.

உதாரணத்திற்கு தொழுகையில் நின்றுக் கொண்டு தலையை சொறிவது, அதிகமான அசைவுகளை செய்வது.

6. இமாமுக்கு பின் நின்று தொழுபவர்கள் இமாமை முந்துவது.

عَنْ أَبِي هُرَيْرَةَ عَنِ النَّبِيِّ صلى الله عليه وسلم قَالَ أَمَا يَخْشَى أَحَدُكُمْ أَوْ لاَ يَخْشَى أَحَدُكُمْ إِذَا رَفَعَ رَأْسَهُ قَبْلَ الإِمَامِ أَنْ يَجْعَلَ اللَّهُ رَأْسَهُ رَأْسَ حِمَارٍ أَوْ يَجْعَلَ اللَّهُ صُورَتَهُ صُورَةَ حِمَارٍ

நபிﷺ அவர்கள் கூறினார்கள்: "உங்களில் ஒருவர் தொழுகையில் இமாமை முந்தித் தம் தலையை உயர்த்துவதால் அவரின் தலையைக் கழுதையுடைய தலையாகவோ அல்லது அவரின் உருவத்தைக் கழுதையுடைய உருவமாகவோ அல்லாஹ் ஆக்கி விடுவதை அஞ்ச வேண்டாமா?."

(அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா ரழி, நூல்: முஸ்லிம் - 691)

7. உணவு முன்னிருக்கும் போது அதனை உண்ண வேண்டும் என்ற நாட்டம் மேலோங்கி இருக்க உண்ணாமல் தொழுகைக்கு செல்வது.

8. சிறுநீர் மற்றும் மலத்தை அடக்கிக் கொண்டு தொழுவது.

ஆயிஷா ரழி அவர்கள் அறிவிக்கிறார்கள்:

அல்லாஹ்வின் தூதர்ﷺ அவர்கள் "உணவு வந்து காத்திருக்கும்போதும், சிறுநீர் மற்றும் மலத்தை அடக்கிக்கொண்டும் தொழக்கூடாது" என்று கூறியதை நான் கேட்டுள்ளேன் என்றார்கள். **(நூல்: முஸ்லிம் - 969)**

9. தொழும் நிலையில் கை விரல்களை முறிப்பது

فَلاَ يُشَبِّكَنَّ يَدَيْهِ فَإِنَّهُ فِي صَلاَةٍ.

அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள், தொழுகையில் இருக்கும் போது எவரும் தனது கை (விரல்களை) முறிக்க வேண்டாம்.

(அறிவிப்பாளர்: கஅப் பின் உஜ்ரா ؓ,
நூல்: அபூ தாவூத் - 526) ஸஹீஹ்

10. தொழுகையில் கவனத்தை சிதற விடுவதும் வெறுக்கதக்க காரியமாக இருக்கிறது.

மேலே நாம் பார்த்த தொழுகையில் வெறுக்கத்தக்க காரியங்களில் ஒருவர் ஈடுபட்டால் அவரின் தொழுகை ஏற்கப்படும். ஆனால் இதுபோன்ற காரியங்களில் ஈடுபடுவதினால் பல சுன்னத்தான நன்மைகளை இழக்க வேண்டிய நிலை ஏற்படும். எனவே தொழுகையில் ஈடுபடுபவர் உள்ளச்சத்தோடு தொழுவதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

ما يستحب فعله فى الصلاة

தொழுகையில் விரும்பதக்க மற்றும் அனுமதிக்கப்பட்ட காரியங்கள்

1. தொழுகையில் இமாமாக நிற்பவர், தனித்து தொழுபவர் சுத்ராவை ஏற்படுத்துவது வலியுறுத்தப்பட்ட சுன்னத்தாக இருக்கிறது.

عَـنِ أَبِى سَـعِيدٍ الْخُـدْرِىِّ قَـالَ قَـالَ رَسُـولُ اللَّهِ -صـلى الله عليـه وسـلم إِذَا صَـلَّى أَحَدُكُـمْ فَلْيُصَـلِّ إِلَى سُـتْرَةٍ وَلْيَـدْنُ مِنْهَـا

அல்லாஹ்வின் தூதர்ﷺ அவர்கள் கூறினார்கள், உங்களில் ஒருவர் தொழுகைக்காக நின்றால், சுத்ராவை நோக்கி தொழுது கொள்ளட்டும். மேலும் சுத்ராவிற்கு நெருக்கமாக நின்று கொள்ளட்டும்.

(அறிவிப்பாளர்: அபூ சயித் அல்குத்ரி(ரலி), நூல்: அபூதாவூத்-698)

தொழுகையில் சுத்ராவை ஏற்படுத்தி கொள்வது மிகவும் வலியுறுத்தப்பட்ட சுன்னத்தாக இருக்கிறது. இமாமுக்கு பின் நின்று தொழுபவர்களுக்கு இமாமே சுத்ராவாக இருப்பார்.

2. தொழுபவர் தன்னுடைய தொழுகைக்கு குறுக்கே வருபவர்களை தடுப்பது.

عَـنْ أَبِى سَـعِيدٍ الْخُـدْرِىِّ أَنَّ رَسُـولَ اللَّهِ صـلى الله عليـه وسـلم قَـالَ إِذَا كَانَ أَحَدُكُـمْ يُصَـلِّى فَـلاَ يَـدَعْ أَحَـدًا يَمُـرُّ بَـيْنَ يَدَيْـهِ وَلْيَـدْرَأْهُ مَـا اسْـتَطَاعَ فَـإِنْ أَبَى فَلْيُقَاتِلْـهُ فَإِنَّمَـا هُـوَ شَـيْطَانٌ

அல்லாஹ்வின் தூதர்ﷺ அவர்கள் கூறினார்கள்:

உங்களில் ஒருவர் தொழும்போது எவரையும் தமக்கு முன்னால் கடந்து செல்ல அவர் அனுமதிக்க வேண்டாம். இயன்றவரை அவரைத் தடுக்கட்டும். அவர் (விலகிச்செல்ல) மறுக்கும்போது அவருடன் சண்டையிட(நேர்ந்தால் சண்டையிட்டு தடுக்க)ட்டும்! ஏனெனில் அவன்தான் ஷைத்தான்.

(அறிவிப்பாளர்: அபூ சயித் அல்குத்ரிؓ, நூல்: முஸ்லிம்-875)

தொழுபவர் தனக்கு முன்பு சுக்ராவை ஏற்படுத்தி தொழும் போது சுத்ராவை தாண்டி செல்வதில் எவ்வித குற்றமுமில்லை.

3. இமாமிற்கு தவறு ஏற்பட்டால் சுட்டிக்காட்டுவது.

إِذَا نَابَكُمْ أَمْرٌ ، فَلْيُسَبِّحِ الرِّجَالُ ، وَلْيُصَفِّحِ النِّسَاءُ

நபிﷺ அவர்கள் மக்களிடம், "(தொழுகையில்) உங்களுக்கு சந்தேகம் ஏற்படுமானால் ஆண்களாயிருந்தால் அவர்கள் 'சுப்ஹானல்லாஹ்' (அல்லாஹ் தூயவன்) என்று சொல்லட்டும். பெண்களாயிருந்தால் (இமாமின் கவனத்தை ஈர்ப்பதற்காகத்) கைத் தட்டட்டும்!".

(அறிவிப்பாளர்: சஅல் பின் சஅத்ؓ, நூல்: புகாரி - 7190)

தொழுகை இபாதத்தாக இருப்பதினால் மார்க்கத்தின் வரையறைக்கு உட்பட்ட காரியங்களில் மட்டுமே அதில் ஈடுபட வேண்டும்.

سجود السهو

ஸஜ்தா ஸஹு

தொழுகையில் மறதியினால் ஏதேனும் ஒரு காரியத்தை அதிகமாக்குதல், குறைத்தல் மற்றும் சந்தேகப்படுதல் ஆகிய தவறுகளுக்கு பரிகாரமாக கடைசியில் செய்யப்படுகின்ற இரு ஸஜ்தாவிற்கே ஸஜ்தா ஸஹு எனப்படும்.

فَإِذَا نَسِيَ أَحَدُكُمْ فَلْيَسْجُدْ سَجْدَتَيْنِ

உங்களில் ஒருவருக்கு தொழுகையில் மறதி ஏற்பட்டால் இரண்டு ஸஜ்தா செய்து கொள்ளட்டும்.
(நூல்: முஸ்லிம்)

ஸஜ்தா ஸஹு செய்வதற்கான காரணங்கள்

1. தொழுகையில் ஏதேனும் ஒரு காரியத்தை மறதியினால் அதிகமாக்குவது

உதாரணத்திற்கு ருகூஉ அல்லது ஸஜ்தாவை அதிகமாக்குவது. நான்கு ரக்அத் தொழுகையை ஐந்து ரக்அத்தாக தொழுவது.

2. தொழுகையில் ஏதேனும் ஒரு காரியத்தை மறதியினால் குறைத்து விடுவது.

உதாரணத்திற்கு இரண்டாவது ரக்அத்தில் அத்தஹிய்யாத்தில் அமராமல் மூன்றாவது ரக்அத்திற்காக எழுந்திருப்பது.

3. தொழுகையில் ஏற்படும் சந்தேகங்கள்.

உதாரணத்திற்கு மூன்று ரக்அத் தொழுதோமா? நான்கு ரக்அத் தொழுதோமா என்ற சந்தேகம் வருவது.

இதுபோன்ற நிலைகளில் செய்யப்படுகின்ற ஸஜ்தாவிற்கே ஸஜ்தா ஸஹு எனப்படும்.

ஸஜ்தா ஸஹு செய்யப்பட வேண்டிய அவசியமான நிலைகள்.

1. தொழுகையின் காரியங்களில் ஏதேனும் ஒன்றை அதிகமாக்குதல். உதாரணத்திற்கு ருகூவை அதிகமாக்குதல், ஸஜ்தாவை அதிகமாக்குதல், ஐந்து ரக்அத் தொழ வைத்தல்.

عَنْ عَلْقَمَةَ قَالَ قَالَ عَبْدُ اللهِ صَلَّى بِنَا رَسُولُ اللهِ -صلى الله عليه وسلم- خَمْسًا فَلَمَّا انْفَتَلَ تَوَشْوَشَ الْقَوْمُ بَيْنَهُمْ فَقَالَ «مَا شَأْنُكُمْ». قَالُوا يَا رَسُولَ اللهِ هَلْ زِيدَ فِي الصَّلاَةِ قَالَ «لاَ». قَالُوا فَإِنَّكَ صَلَّيْتَ خَمْسًا. فَانْفَتَلَ فَسَجَدَ سَجْدَتَيْنِ ثُمَّ سَلَّمَ ثُمَّ قَالَ « إِنَّمَا أَنَا بَشَرٌ أَنْسَى كَمَا تَنْسَوْنَ ».

அப்துல்லாஹ் பின் மஸ்ஊத்ؓ அவர்கள் கூறியதாகப் பின்வருமாறு கூறினார்கள்:

(ஒரு முறை) அல்லாஹ்வின் தூதர்ﷺ அவர்கள் எங்களுக்கு ஐந்து ரக்அத்கள் தொழுவித்தார்கள். அவர்கள் தொழுகையை முடித்துத் திரும்பிய போது மக்கள் தமக்கிடையே முணு முணுத்துக்கொண்டனர். அப்போது அவர்கள், "உங்களுக்கு என்ன நேர்ந்தது?" என்று கேட்டார்கள். மக்கள், "அல்லாஹ்வின் தூதரே!

தொழுகையில் (ரக்அத்) அதிகமாக்கப் பட்டுவிட்டதா?" என்று கேட்டார்கள். அல்லாஹ்வின் தூதர்ﷺ அவர்கள் "இல்லை" என்றார்கள். "அவ்வாறாயின், தாங்கள் ஐந்து ரக்அத்கள் தொழுவித்து விட்டீர்களே?" என்று கூறினர். உடனே அல்லாஹ்வின் தூதர்ﷺ அவர்கள் (அப்படியே) திரும்பி, இரு சஜ்தாக்கள் செய்துவிட்டுப் பிறகு சலாம் கொடுத்தார்கள். மேலும் "நானும் உங்களைப் போன்ற ஒரு மனிதன்தான். நீங்கள் மறப்பதைப் போன்று நானும் மறந்துவிடுகிறேன்" என்று கூறினார்கள்.

இப்னு நுமைர் அவர்களது அறிவிப்பில், "உங்களில் ஒருவர் (தமது தொழுகையில்) மறந்து விட்டால் அவர் இரு சஜ்தாக்கள் செய்துகொள்ளட்டும்" என்று (அல்லாஹ்வின் தூதர்ﷺ அவர்கள் கூறியதாக) இடம்பெற்றுள்ளது.

(அறிவிப்பாளர்: அல்கமா, நூல்: முஸ்லிம் - 994)

குறிப்பு: தொழுகையில் ஒருவர் தான் அதிகமாக்கியதை எப்போது அறிகின்றாரோ, அப்போதே அத்தஹிய்யாத் நோக்கி திரும்புவது அவசியமாகும். உதாரணத்திற்கு ஒருவர் நான்கு ரக்அத் தொழுகையில் மறதியாக அத்தஹிய்யாத்தில் அமராமல் ஐந்தாவது ரக்அத்துக்காக எழுந்துவிட்டார். ருகூஉ செய்யும் போது தான் ஐந்தாவது ரக்அத்தில் இருப்பது அவருக்கு தெரிய வந்தாலும் உடனே அவர் அத்தஹிய்யாத் நோக்கி திரும்புவார். கூடுதலாக தொழுகின்றோம் என்பதை அறிந்திருந்தும் மேற்கொண்டு தொழுவது தொழுகையை வீணாக்கி விடும்.

2. தொழுகையை முழுமைப்படுத்துவதற்கு முன்பே

சலாம் கொடுத்து விட்டால் ஸஜ்தா ஸஹ்வு செய்ய வேண்டும்.

عَـنْ أَبِى هُرَيْـرَةَ يَقُـولُ صَـلَّى لَنَـا رَسُـولُ اللّٰهِ صـلى الله عليـه وسـلم صَـلاَةَ الْعَـصْرِ فَسَـلَّمَ فِى رَكْعَتَـيْنِ فَقَـامَ ذُو الْيَدَيْـنِ فَقَـالَ أَقُـصِرَتِ الصَّـلاَةُ يَـا رَسُـولَ اللّٰهِ أَمْ نَسِـيتَ فَقَـالَ رَسُـولُ اللّٰهِ صـلى الله عليـه وسـلم « كُلُّ ذَلِـكَ لَـمْ يَكُـنْ ». فَقَـالَ قَـدْ كَانَ بَعْـضُ ذَلِـكَ يَـا رَسُـولَ اللّٰهِ. فَأَقْبَـلَ رَسُـولُ اللّٰهِ صـلى الله عليه وسـلم عَلَى النَّـاسِ فَقَـالَ « أ« أَصَـدَقَ ذُو الْيَدَيْـنِ ». فَقَالُـوا نَعَـمْ يَـا رَسُـولَ اللّٰهِ. فَأَتَـمَّ رَسُـولُ اللّٰهِ -صـلى الله عليـه وسـلم مَـا بَـقِىَ مِـنَ الصَّـلاَةِ ثُـمَّ سَـجَدَ سَـجْدَتَيْنِ وَهُـوَ جَالِـسٌ بَعْـدَ التَّسْـلِيمِ.

அல்லாஹ்வின் தூதர்ﷺ அவர்கள் எங்களுக்கு அஸர் தொழுகையைத் தொழுவித்த போது இரண்டு ரக்அத் முடிந்ததும் சலாம் கொடுத்து விட்டார்கள். உடனே துல்யதைன் (கிர்பாக் பின் அம்ர்﵁) என்பவர் எழுந்து "தொழுகை(யின் ரக்அத் ஏதேனும்) குறைக்கப்பட்டு விட்டதா அல்லாஹ்வின் தூதரே! அல்லது தாங்கள் தாம் மறந்துவிட்டீர்களா?" என்று கேட்டார். அதற்கு அல்லாஹ்வின் தூதர்ﷺ அவர்கள், "இவற்றில் எதுவுமே நடக்க வில்லை" என்று கூறினார்கள். துல்யதைன், "(இல்லை) இதில் ஏதோ ஒன்று நிகழவே செய்தது அல்லாஹ்வின் தூதரே!" என்று கூறினார். அல்லாஹ்வின் தூதர்ﷺ அவர்கள் மக்களை நோக்கி "துல்யதைன் சொல்வது உண்மைதானா?" என்று கேட்டார்கள். அப்போது மக்கள், "ஆம், அல்லாஹ்வின் தூதரே!" என்று

கூறினர். உடனே அல்லாஹ்வின் தூதர்ﷺ அவர்கள் எஞ்சிய ரக்அத்களையும் தொழு(வித்)துவிட்டு அந்த இருப்பிலேயே சலாம் கொடுத்த பின் இரு சஜ்தாக்கள் செய்தார்கள்.

(அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா ؓ, நூல்: முஸ்லிம் - 1001)

3. தொழுகையின் வாஜிபாத்துகளில் ஏதேனும் ஒன்றை விட்டாலும் ஸஜ்தா ஸஹு செய்ய வேண்டும்.

عَـنْ عَبْـدِ اللهِ ابْـنِ بُحَيْنَـةَ - رضى الله عنـه - أَنَّـهُ قَـالَ صَـلَّى لَنَـا رَسُـولُ اللهِ - صـلى الله عليـه وسـلم - رَكْعَتَـيْنِ مِـنْ بَعْـضِ الصَّلَـوَاتِ ثُـمَّ قَـامَ فَلَـمْ يَجْلِـسْ ، فَقَـامَ النَّـاسُ مَعَـهُ ، فَلَمَّـا قَـضَى صَلاَتَـهُ وَنَظَرْنَـا تَسْـلِيمَهُ كَـبَّرَ قَبْـلَ التَّسْـلِيمِ فَسَـجَدَ سَـجْدَتَيْنِ وَهُـوَ جَالِـسٌ ثُـمَّ سَـلَّمَ

அல்லாஹ்வின் தூதர்ﷺ அவர்கள் எங்களுக்கு ஒரு தொழுகையை நடத்தினார்கள். (அத்தொழுகையில்) இரண்டு ரக்அத்தை முடித்தபோது அமராமல் (மூன்றாவது ரக்அத்துக்காக) எழுந்துவிட்டார்கள். எனவே மக்களும் நபிﷺ அவர்களோடு எழுந்துவிட்டார்கள். தொழுகை முடியும் தருவாயில் நாங்கள் நபிﷺ அவர்கள் ஸலாம் கொடுப்பதை எதிர்பார்த்திருந்தபோது, அந்த இருப்பிலேயே ஸலாத்திற்கு முன் தக்பீர் கூறி, இரண்டு ஸஜ்தாக்கள் செய்துவிட்டு ஸலாம் கொடுத்தார்கள்.

(அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் பின் புஹைனா ؓ, நூல்: புகாரி - 1224))

4. தொழுகையின் எண்ணிக்கையில் சந்தேகம் ஏற்பட்டாலும் ஸஜ்தா ஸஹு செய்ய வேண்டும்.

தொழுகையில் இருக்கும் ஒருவருக்கு மூன்று ரக்அத்துகள் தொழுதோமா? அல்லது நான்கு ரக்அத்துகள் தொழுதோமா? என்ற சந்தேகம் ஏற்பட்டாலும் ஸஜ்தா ஸஹு செய்ய வேண்டும்.

عَـنْ أَبِى هُرَيْـرَةَ رضى الله عنـه أَنَّ رَسُـولَ اللهِ صـلى الله عليـه وسـلم قَـالَ « إِنَّ أَحَدَكُـمْ إِذَا قَـامَ يُصَـلِّى جَـاءَ الشَّـيْطَانُ فَلَبَـسَ عَلَيْـهِ حَـتَّى لاَ يَـدْرِىَ كَـمْ صَـلَّى ، فَـإِذَا وَجَـدَ ذَلِـكَ أَحَدُكُـمْ فَلْيَسْـجُدْ سَـجْدَتَيْنِ وَهُـوَ جَالِـسٌ

"உங்களில் ஒருவர் தொழத் தயாரானால் அவரிடம் ஷைத்தான் ஊடுருவி, அவர் எத்தனை ரக்அத் தொழுதார் என்பதையே அறியாத அளவுக்குக் குழப்பத்தை ஏற்படுத்தி விடுகிறான். எனவே, உங்களில் ஒருவருக்கு இவ்வாறான நிலைமை ஏற்பட்டால் (கடைசி) இருப்பில் இருந்தவாறே இரண்டு ஸஜ்தாச் செய்யட்டும்" என்று இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்.
(அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா ரலி, நூல்: முஸ்லிம் - 1232)

இது இரண்டு நிலைகளில் அமையும்.

1. மூன்று ரக்அத்துகள் தொழுதோமா? அல்லது நான்கு ரக்அத்துகள் தொழுதோமா என்பதில் எதனை எடுத்துக் கொள்வது என்பதில் குழப்பம் ஏற்பட்டால் எண்ணிக்கையில் எது குறைவாக இருக்குமோ அதனை எடுத்துக் கொள்ள வேண்டும்.

عَـنْ أَبِى سَـعِيدٍ الْخُـدْرِىِّ قَـالَ قَـالَ رَسُـولُ اللهِ -صـلى الله عليـه وسـلم- « إِذَا شَـكَّ أَحَدُكُـمْ فِى صَلاَتِـهِ فَلَـمْ يَـدْرِ كَـمْ صَـلَّى

ثَلاَثًا أَمْ أَرْبَعًا فَلْيَطْرَحِ الشَّكَّ وَلْيَبْنِ عَلَى مَا اسْتَيْقَنَ ثُمَّ يَسْجُدُ سَجْدَتَيْنِ قَبْلَ أَنْ يُسَلِّمَ فَإِنْ كَانَ صَلَّى خَمْسًا شَفَعْنَ لَهُ صَلاَتَهُ وَإِنْ كَانَ صَلَّى إِتْمَامًا لأَرْبَعٍ كَانَتَا تَرْغِيمًا لِلشَّيْطَانِ».

அல்லாஹ்வின் தூதர்ﷺ அவர்கள் கூறினார்கள்:

உங்களில் ஒருவருக்குத் தாம் மூன்று ரக்அத்கள் தொழுதோமா அல்லது நான்கு ரக்அத்கள் தொழுதோமா என்று தொழுகையில் சந்தேகம் ஏற்பட்டால் சந்தேகத்தைக் கைவிட்டு உறுதியான (மூன்று ரக்அத்கள் என்ப)தன் அடிப்படையில் (மீதியுள்ள ஒரு ரக்அத்தைத்) தொழுதுவிட்டு சலாம் கொடுப்பதற்கு முன் இரு சஜ்தாக்கள் செய்துகொள்ளட்டும். அவர் (உண்மையில்) ஐந்து ரக்அத்கள் தொழுது விட்டிருந்தால் (மறதிக்காகச் செய்த அவ்விரு சஜ்தாக்களால்) அவரது தொழுகையை அந்த (ஐந்து) ரக்அத்கள் இரட்டைப்படை ஆக்கிவிடும். அவர் நான்கு ரக்அத்கள் பூர்த்தி செய்துவிட்டிருந்தால் அவ்விரு சஜ்தாக்களும் (தொழுகையில் குழப்பம் ஏற்படுத்திய) ஷைத்தானை முறியடித்ததாக அமையும். **(அறிவிப்பாளர்: அபூ ஹுரைராﷺ, நூல்: முஸ்லிம் - 990)**

2. தொழுகையின் ரக்அத்துகளின் எண்ணிக்கையில் சந்தேகம் ஏற்படும் போது எந்த எண்ணிக்கையின் மீது எண்ணம் மேலோங்கி இருக்குமோ அந்த எண்ணிக்கையை உறுதியாக்கி கொள்ள வேண்டும்.

فَلْيَتَحَرَّ الصَّوَابَ فَلْيُتِمَّ عَلَيْهِ ثُمَّ لْيَسْجُدْ سَجْدَتَيْنِ

அல்லாஹ்வின் தூதர்ﷺ அவர்கள், “உங்களில் ஒருவர் தொழுகையில் (எதையேனும் கூடுதலாகவோ

அல்லது குறைவாகவோ செய்துவிட்டதாகச்) சந்தேகித்தால் யோசித்து முடிவு செய்து, அதற்கேற்ப தொழுகையைப் பூர்த்தி செய்யட்டும். பிறகு இரு சஜ்தாக்கள் செய்துகொள்ளட்டும்” என்று கூறினார்கள்.

(அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் பின் மஸ்வூத்ؓ,

நூல்: முஸ்லிம் - 991)

ஸஜ்தா ஸஹு எப்போது செய்ய வேண்டும்?

ஸஜ்தா ஸஹு தொடர்பான ஹதீஸ்களில் சிலவற்றில் சலாம் கொடுப்பதற்கு முன்பு இரண்டு ஸஜ்தாக்கள் செய்ததாக வந்துள்ளது. வேறு சில ஹதீஸ்களில் சலாம் கொடுத்ததற்கு பிறகு இரண்டு ஸஜ்தாக்கள் செய்து மற்றொரு முறை சலாம் கொடுத்துள்ளதாகவும் வந்துள்ளது. எனவே இரு முறைகளிலும் ஸஜ்தா ஸஹு செய்வது அனுமதிக்கப்பட்டதாகும்.

صفة الصلاة

தொழுகை முறை

தொழுகையின் அடிப்படைகள், நிபந்தனைகள், கடமைகள், சுன்னத்துகள், தொழுகையை முறிக்கும் காரியங்கள் ஆகியவற்றை ஆதாரங்களுடன் நாம் பார்த்தோம். இதுவே நபிﷺ அவர்கள், என்னை எவ்வாறு தொழ கண்டீர்களோ அவ்வாறே நீங்களும் தொழுங்கள் என்று கூறிய தொழுகையின் முறையாகும். அத்தகைய நபிﷺ வழி தொழுகை முறை எவ்வாறு அமைய வேண்டும் என்பதை சுருக்கமாக பார்ப்போம்!

அல்லாஹ்வின் தூதர்ﷺ அவர்கள் தொழுகைக்காக நின்றால், கிப்லாவை முன்னோக்கி இருகைகளின் உட்புறமுத்தையும் கிப்லாவை நோக்கியவாறு, தோள்புஜம் அல்லது காதுகளின் சோனைகளுக்கு நேராக உயர்த்தி அல்லாஹு அக்பர் என்று கூறுவார்கள்.

பிறகு தன்னுடைய வலது கையை கொண்டு இடது கையை பிடித்துவாறு அதனை நெஞ்சின் மீது வைப்பார்கள். பிறகு தொழுகையின் ஆரம்ப துவாக்களில் ஏதேனும் ஒரு துவாவை ஓதிக் கொள்வார்கள். பிறகு அவூதுபில்லாஹி மினஷ் ஷைத்தானிர் ரஜீம் மற்றும் பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம் ஓதுவார்கள்.

பிறகு சூரத்துல் ஃபாத்திஹாவை ஓதுவார்கள். ஆமின் கூறியதற்கு பிறகு துணை சூராக்களை ஓதுவார்கள்.

பிறகு தனது கைகளை தொழுகையின் ஆரம்பத்தில் உயர்த்தியதை போன்று அல்லாஹு அக்பர் என்று கூறி ருகூவிற்கு செல்வார்கள். தன்னுடைய இரு கைகளின் விரல்களையும் விரித்தாவாறு கால் முட்டுகளின் மீது வைப்பார்கள். தன்னுடைய முதுகை நேராக வளைத்திருப்பார்கள். தன்னுடைய தலையை உயர்த்தமாலும், தாழ்த்தாமலும் வைத்தவாறு ருகூவு செய்வார்கள். ருகூவில் சுப்ஹான ரப்பில் அஜீம் என்ற திக்ரை ஓதுவார்கள்.

பிறகு ருகூவிலிருந்து தனது தலையை உயர்த்தியவாறு சமியல்லாஹு லிமன் ஹமித என்று கூறியவாறு தனது இரு கைகளையும் முன்னர் உயர்த்தியது போல் உயர்த்துவார்கள். ருகூவிலிருந்து நேராக நின்றதற்கு பிறகு ரப்பான லகல் ஹம்த் என்று கூறுவார்கள்.

பிறகு அல்லாஹு அக்பர் என்று கூறி ஸஜ்தாவிற்கு செல்வார்கள். (ஸஜ்தாவில் அல்லாஹு அக்பர் சொல்லும் போது கைகளை உயர்த்த மாட்டார்கள்.) ஸஜ்தாவிற்கு செல்லும்போது தனது இரு கைகளையும் பூமியில் வைத்ததற்கு பிறகு கால் மூட்டுகளை வைப்பார்கள். ஸஜ்தாவில் தனது நெற்றி, மூக்கு இரு உள்ளங்கைகள், இரு கால் முட்டுகள் மற்றும் விரல்களை பூமியில் வைத்தவாறு ஸஜ்தா செய்வார்கள். இரு கைகளின் விரல்கள் மற்றும் கால்களின் விரல்களை கிப்லாவை முன்னோக்கியவாறு ஆக்கி கொள்வார்கள். இரு உள்ளங்கைகளின் மீது ஊன்றியவாறு முழங்கைகளை பூமியில் படாதவாறு உயர்த்தி வைப்பார்கள். இரு முழங்கைகளையும் உடலில் படாதவாறு விலக்கி

வைப்பார்கள். தனது வயிற்றை தொடையில் படாதவாறு உயர்த்தி வைப்பார்கள். அவ்வாறே தனது தொடையின் பின்பகுதிகள் குதிகால்களின் மீது படாதவாறு உயர்த்தி வைப்பார்கள். ஸஜ்தாவில் சுப்ஹான ரப்பில் அஃலா என்று கூறுவார்கள்.

பிறகு தனது தலையை உயர்த்தி அல்லாஹு அக்பர் என்று இருப்பில் அமர்வார்கள். நபிﷺ அவர்கள் இருப்பில் தனது வலது காலை நட்டு வைத்து, கால் விரல்களை கிப்லாவை முன்னோக்கி வைத்து இடது காலின் மீது அமர்வார்கள். சில நேரங்களில் இரண்டு கால்களையும் நட்டு வைத்து அவற்றின் மீது அமர்வார்கள். தனது இரு கைகளையும் தொடையின் மீது வைப்பார்கள். ரப்பிக்கிஃப்ர்லி என்ற துவாவை ஓதுவார்கள்.

பிறகு அல்லாஹு அக்பர் என்று ஸஜ்தாவிற்கு செல்வார்கள். முதல் ஸஜ்தாவை போன்றே இரண்டாவது ஸஜ்தாவையும் செய்வார்கள். பிறகு அல்லாஹு அக்பர் என்று கூறி இருப்பில் அமர்வார்கள். தனது வலது காலை நட்டு வைத்து விரல்களை கிப்லாவை முன்னோக்கி வைப்பார்கள். இடது காலை பூமியில் படுமாறு மடக்கி வைத்து அதன் மீது அமர்வார்கள்.

பிறகு இரண்டாவது ரக்அத்திற்காக எழுந்து நேராக நிற்பார்கள். முதல் ரக்அத்தில் ஓதியதை போன்று ஓதுவார்கள். முதல் ரக்அத்தை விட இரண்டாவது ரக்அத்தில் கிராஅத்தை குறைத்து ஓதுவார்கள். பிறகு ருகூஉ, இரு ஸஜ்தா செய்ததற்கு பிறகு தஷஹ்ஹுத்தில் அமர்வார்கள். இரு ஸஜ்தாக்குளுக்கு மத்தியில்

அமர்ந்ததை போன்று வலது காலை நட்டு வைத்து இடது காலின் மீது அமர்வார்கள். வலது கையை வலது தொடையின் மீதும், இடது கையை இடது தொடையின் மீதும் வைத்து அத்தஹிய்யாத்து துவாவை ஓதுவார்கள். வலது கையின் சிறு விரல், மோதிர விரல், நடு விரல் ஆகிய மூன்று விரல்களையும் மடக்கி உள்ளங்கையுடன் சேர்த்து, கட்டை விரலின் நுனியை நடு விரலின் நுனியின் மீது வைத்து சுட்டு விரலால் சைகை செய்தவாறு அசைத்து கொண்டிருப்பார்கள். சில நேரங்களில் கட்டை விரலையும், நடு விரலையும் வளையம் போல் அமைத்து சுட்டு விரலால் சைகை செய்தவாறு அசைத்துக் கொண்டிருப்பார்கள். தஷஹ்ஹுத்தில் சுட்டு விரலை நோக்கியாவறு தனது பார்வையை செலுத்துவார்கள். அத்தஹிய்யாத்துடன் ஸலவாத்தான அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதின்... மற்றும் அல்லாஹும்ம பாரிக் அலா முஹம்மதின்... என்னும் ஸலவாத்தை ஓதுவார்கள்.

பிறகு அல்லாஹு அக்பர் என்று கூறியவாறு மூன்றாவது ரக்அத்திற்காக எழுந்து கைகளை உயர்த்தியதற்கு பிறகு நெஞ்சின் மீது வைப்பார்கள். மூன்றாவது மற்றும் நான்காவது ரக்அத்தில் சூரத்துல் ஃபாத்திஹாவை ஓதுவார்கள்.

பிறகு கடைசி தஷஹ்ஹுத்தில் தவர்ருக் என்னும் இடது காலை வலது புறமாகக் கொண்டு வந்து வலது காலை நட்டு வைத்துத் தம் இருப்பிடம் தரையில் படுமாறு அமர்வார்கள். கடைசி தஷஹ்ஹுத்தில் அத்தஹிய்யாத், ஸலாவாத்தை ஓதியதற்கு பிறகு அல்லாஹும்ம இன்னி

அவுது ஃபிக்க மின் அதாபல் கப்ர்... என்ற துவா அல்லது அல்லாஹும்ம இன்னி லலம்து நஃப்ஸி ஜுல்மன் கஸிரா.... என்ற துவாவை ஓதுவார்கள்.

பிறகு வலது புறமும், இடது புறமும் லேசாக திரும்பி அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மத்துல்லாஹ் (ஸலாம்) என்று கூறி முடிப்பார்கள்.

இந்த முறையில் தொழுவதே நபிவழி தொழுகையாகும். நபிவழியின் அடிப்படையில் நமது தொழுகையை அமைத்துக் கொள்ள அல்லாஹ் அருள்புரிவானாக! ஆமின்...!!!

குறிப்பு